Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37
கதிர் : 254

ஞாயிற்றுக்கிழமை
07 ஒகஸ்ட் 2022

ஆடி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16+08

விலை: 60/=



"அப்ப அமைச்சுப் பதவிக்காகவும் இனிமேல் இஞ்ச பெரும் குத்துவெட்டும் நடக்கலாம் பாருங்கோ..."

# அமைச்சுப் பதவியேற்க தமிழர்களும் தயார்

## பிரதமர் தினேஷ் தகவல்



**கொழும்பு, ஒகஸ்ட் 7**

**எதிரணியில் பலர் சர்வகட்சி அரசுக்கு ஆதரவு வழங்க முன்வந்திருப்பது மட்டுமன்றி அமைச்சுப் பதவிகளையும் பொறுப்பேற்கத் தயாராகவுள்ளனர். அதில் தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அடங்குகின்றனர். தம் இனம் சார்ந்த மக்களின் நலன் கருதி அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்க அவர்கள் முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது - இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.**

15 ➤

ரணில் பதவியேற்று

## 13 நாள்களின் பின்னரே ஐ.நா. செயலர் வாழ்த்து

கொழும்பு, ஓக. 7

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் அன்ரனியோ குட்டரெஸ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடந்த 3ஆம் திகதி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்நோக்கியுள்ள தற்போதைய சவால்களை வெற்றிகொள்வதற்கு சாதகமான சூழலையும் ஸ்திரத்தன்மையையும் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் மிகவும் முக்கியமானதாக அமையும் என பொதுச் செயலர்

15 ➤

## ரூ. 8 லட்சம் பெறுமதியான நகை, பணம் திருட்டு

யாழ்ப்பாணம், ஓக. 7

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாய் ஐயனார் கோயில் வீதியில் அமைந்துள்ள வீடொன்றிலிருந்து 10 பவுண் நகை மற்றும் இலங்கை ரூபா, வெளிநாட்டு நாணயங்கள் என்பன திருடப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. கடந்த முதலாம்

11 ➤

## இலங்கையின் நேர்மையான நம்பகரமான நண்பன் சீனாவே!

கூறுகிறார் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு. ஓக. 7

இலங்கையின் நலன்களுக்குதீங்கு விளைவிக்கக்கூடிய எந்தச்செயலும் மேற்கொள்ளப்படமாட்டாது. அத்துடன் நேர்மையான மற்றும் நம்பகரமான நண்பராக இருப்பதாக சீனா உறுதியளித்துள்ளது. சீன

15 ➤

## இராணுவத்தினரைக் கைது செய்ய ஐ.நா. ஆணையாளர் கோர முடியாது

### கொந்தளிக்கிறார் பீரிஸ்

கொழும்பு. ஓக. 7

இலங்கை இராணுவத்தினர் போர் விதிகளை மதித்தே நடந்தார்கள். புலம்பெயர் புலிகள் சார் அமைப்புக்களின் கட்டுக்கதைகளை நம்பி ஐ.நா. மனித

11 ➤

## சீனக் கப்பலின் வருகையை ஒத்திவைக்கக் கோரிக்கை

### இலங்கை விடுத்துள்ளதாக இந்திய ஊடகம் தகவல்

கொழும்பு, ஓக. 7

இரண்டு அரசுகளுக்கிடையில்மேலும்ஆலோசனைகள் மேற்கொள்ளப்படும் வரை அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கான, விண்வெளி செயற்

15 ➤

## இக்கட்டான நேரத்தில் இப்படிச் சொல்லலாமா?

மிச்செல் பச்லெட்டின் கூற்றுக்கு அமைச்சரவைப் பேச்சாளர் ஆதங்கம்

விரிவு - பக். 15

## சர்வகட்சி அரசாங்கம் ராஜபக்சக்களின் குப்பை

### அதைச் சுமக்கத் தயாரில்லை என்கிறது எதிர்க்கட்சி

கொழும்பு. ஓக. 7

எதிர்க்கட்சி என்ற ரீதியில் சர்வகட்சி அமைச்சு கூதாட்டத்தின் ஊடாக ராஜபக்சவினரின் குப்பைகளைச் சுமக்க விரும்பவில்லை. நாடாளுமன்றக் குழு முறைமையின் ஊடாக ஆதரவு வழங்கத் தயாராக இருக்கின்றோம் -

11 ➤

## உணவுப்பொதி, தேநீர் விலைகளும் குறைப்பு

கொழும்பு. ஓக. 7

உணவுப் பொதியினதும், தேநீரினதும் விலைகளை நாளை குறைக்கவுள்ளதாக சிற்றுணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

11 ➤




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சக்களை பதவிநீக்க புலனாய்வுத்துறை ஆதரவா?

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் பெரமுன எம்.பிக்கள் கேள்விக்கணை

**கொழும்பு, ஓக.7**

**முன்னாள் ஜனாதிபதி மற்றும் பிரதமரை நீக்கி விட்டு, அரசாங்கத்தைக் கவிழ்க்க அரச புலனாய்வுத்துறை உள்ளிட்ட புலனாய்வு சேவைகள் நடவடிக்கை எடுத்தனவா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது என ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் தெரியப்படுத்தியுள்ளனர்.**

பொதுப் பாதுகாப்பு சம்பந்தமாக ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக நாடாளுமன்றத்தில் அமைச்சர் டிரான் அலஸ் சிறப்புக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 9 ஆம் திகதி ஜனாதிபதியைப் பதவியில் இருந்து அகற்ற கொழும்புக்கு 15 ஆயிரம் மக்கள் வருவார்கள் என புலனாய்வுப் பிரிவுகள் அறிவித்திருந்தன என்று அமைச்சர் அங்கு சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆயினும் அதை விட அதிகளவானவர்கள் கொழும்புக்கு வந்தனர் எனவும் பொலிஸார் மற்றும் இராணுவத்துக்கு வழங்கிய புலனாய்வு அறிக்கைகள் தொடர்பாக பாதுகாப்பு சபையில் கவனம் செலுத்தப்படவில்லை எனவும் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர் டிரான் அலஸ், விடயத்தை தெளிவுபடுத்த முயற்சித்த போதிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதற்கு இடமளிக்காது, இந்த விடயம் தொடர்பாக கட்டாயம் விசாரணை நடத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ச இந்தக் கலந்துரையாடலின் போது, அமைச்சர் டிரான் அலஸுடன் கருத்து முரண்பாடுகளையும் ஏற்படுத்திக்கொண்டார் என்று தகவல்கள் கூறுகின்றன.

இந்த விடயம் தொடர்பாக ஆளும் கட்சியின் அடுத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் கட்டாயம் கலந்துரையாடவேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறியுள்ளனர். (எ-இ)

## சிங்கப்பூரில் தங்குவதற்கு அனுமதி கோரும் கோத்தா

கொழும்பு, ஓக. 7



முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, சிங்கப்பூரில் மேலும் 14 நாள்கள் தங்கியிருக்க அந்த நாட்டு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார் என்று தெரியவருகின்றது.

சிங்கப்பூரில் தங்கியுள்ள கோத்தாபய ராஜபக்ச எதிர்வரும் 11 ஆம் திகதி இலங்கை திரும்பவிருந்தார். ஆயினும் அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமைய அவர் இந்த மாத இறுதி வாரம் வரை சிங்கப்பூரில் தங்கியிருப்பார் எனக் கூறப்படுகிறது.

கடந்த ஜூலை மாதம் 9 ஆம் திகதி இலங்கையில் நடந்த போராட்டங்கள் காரணமாக ஜனாதிபதியாக பதவி வகித்த கோத்தாபய ராஜபக்ச, நாட்டில் இருந்து தப்பிச்சென்றார்.

மாலைதீவில் தங்கியிருந்த அவர், அங்கிருந்து சவூதி அரேபியாவுக்கு சொந்தமான விமானத்தில் சிங்கப்பூர் சென்றார். அவரது நுழைவிசைவுக் காலம் முடிவடையவுள்ள நிலையில் நுழைவிசைவு அனுமதியை நீடிக்கவேண்டும் என்று சிங்கப்பூர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

## சாராயத்தை விற்ற பெண்ணொருவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 7

சாராயத்தை வீட்டில் வைத்து, சட்டவிரோதமான முறையில் சாவற்கட்டுப் பகுதியில் விற்பனை செய்த குற்றச்சாட்டில் பெண்ணொருவரை மானிப்பாய் பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்துள்ளனர். (ம-125)

## எம்.பிக்கள் போர்க்கொடி: பீரிஸின் பதவிக்கு ஆபத்து

கொழும்பு, ஓக.7

பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பதவியிலிருந்து பேராசிரியர் ஜி.எல்.பீரிஸை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பொதுஜன பெரமுனவின் தலைவரான மஹிந்த ராஜபக்சவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி முடிவொன்றை எடுப்பதற்காக பெரமுனவின் சிறப்புக் கூட்டம் விரைவில் இடம்பெறவுள்ளது என அந்த கட்சி வட்டாரங்களை மேற்கோள்காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பின் போது, ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று பொதுஜன முன்னணி தீர்மானித்திருந்தது. கட்சியின் பொதுச் செயலாளரால் இது தொடர்பில் அதிகாரபூர்வமாக அறிக்கையும் வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், கட்சியின் தவிசாளரான ஜி.எல். பீரிஸ், டலஸ் அழகபெருமவுக்கு ஆதரவு வழங்கி, அவரின் பெயரை வழிமொழிந்தார். அவர் தற்போது டலஸ் அணியில் முக்கியமான நபராகத் திகழ்கின்றார்.

பொதுஜன பெரமுனவின் 16 பேர் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு டலஸ் அழகபெரும தலைமையில், சுயாதீனமாக செயற்பட்டு வருகின்றது.

இந்தப் பின்னணியிலேயே பீரிஸிடமிருந்து தவிசாளர் பதவியை பறிக்கவேண்டும் என்று கட்சித் தலைமையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. டலஸ் அணியில் செயற்படும் உறுப்பினர்களிடமிருந்து மொட்டுக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவியும் பறிக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## 58 இராணுவ அதிகாரிகளை கைது செய்யக் கோரிக்கை!

*47 நாடுகளிடம் விடுத்தார் ஐ.நா. ஆணையாளர் மிச்செல்*



கொழும்பு, ஓக.7

இலங்கையின் 58 இராணுவ அதிகாரிகளைக் கைது செய்வதற்கு சர்வதேச நீதி அமைப்பை பயன்படுத்த வேண்டும் என்று 47 நாடுகளின் ஜனாதிபதிகளுக்கு ஜெனீவா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் கோரிக்கை விடுத்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியில் இவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினருக்கு எதிராக இலங்கை அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சுட்டிக் காட்டியுள்ள மிச்செல் பச்லெட், முதன்முறையாக சர்வதேச நீதி அமைப்பை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார்.

இதனால், இலங்கை இராணுவத்தினர் இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, சீனா, பங்களாதேஷ் ஆகிய நாடு களைத் தவிர மற்ற அனைத்து நாடுகளுக்கும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மழைக்கு வாய்ப்பு!

கொழும்பு, ஓக. 7 சிலாபத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக மாத்தறை வரையான கடற்பரப்புகளில் சில இடங்களில்மழைபெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களத்தால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

சப்ரகமுவ மாகாணத்திலும் நுவரெலியா, கண்டி, காலி,மாத்தறை மாவட்டங்களிலும்அவ்வப்போது மழை பெய்யலாம். அத்துடன் மேல் மற்றும் வடமேல் மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யக்கூடும்.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும் வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். சிலாபத்திலிருந்து மன்னார், காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புகளிலும் மாத்தறையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும்- என்றுள்ளது. (ச-இ)

நாளாந்தம் அதிக இரைச்சலுக்கு முகம் கொடுக்கும் உங்கள் செவிப்புலன் தொடர்பில் அதிக கவனம் செலுத்துங்கள்



இந்த நாட்களில் வீதியில் நிற்கும் நேரத்திற்கு மத்தியில் எம்மிடம் வந்து

இலவசமாக செவிப்புலனை பரிசோதித்துக்கொள்ளுங்கள்

நேரத்தை ஒதுக்கிக்கொள்ள அழையுங்கள் 076 544 1517

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

VISION CARE HEARING SOLUTIONS

**விஷன் கெயா ஒப்டிகல் சேவிசஸ் (வரை) தனியார் நிறுவனம்**

பிரதான கிளை : கொழும்பு கிளைகள் : மகரகம, களுத்துறை, கம்பஹா, பாணந்துறை, வெள்ளவத்தை, கொழும்பு - ரேஸ்கோஸ், மாலபே, கல்கிசை, கிளிநொச்சி, காலி, குருநாகல், நீர்கொழும்பு, குளியாப்பிட்டி, இரத்தினபுரி, பண்டாரவளை, கண்டி, மாத்தறை, தம்புள்ளை, அனுராதபுரம், திருகோணமலை, மொனராகலை, மன்னார், வவுனியா, [illegible] கேகாலை, பதுளை, கராப்பிட்டிய, கல்கிஸ்ஸை மவுண்ட் லோட் [illegible] அவிஸ்ஸாவெல்ல, KDU வைத்தியசாலை வேரஹர

oticon life-changing technology

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணை - பெருங்குளம்

# முத்துமாரி அம்மன் திருக்கோயில்

# வருடாந்த மஹோற்சவம்

## சுபகிருது வருடம் - 2022

"வேலணை யூராள் விளங்கு பெருங்குளத்தின் பால்"
அசைந்து நின்று அருள் பாலிக்கும் சீலத்தாள்
முத்துமாரி அம்மனாம் அந்த மூத்தம்மை தாள்
வணங்கின் சித்திக்கும் எல்லாம் சிறந்து"

## தேர்த்திருவிழா - தீர்த்தத்திருவிழா

- **10.08.2022 -** புதன்கிழமை காலை 10.00 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து முற்பகல் 11.00மணிக்கு திருத்தேரில் பவனிவருதற்கு அம்மன் எழுந்தருளல்
- **11.08.2022 -** வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அம்பாளின் தீர்த்த உற்சவம்

அம்பிகை அடியார்கள் அனைவரும் கலந்துகொண்டு தேரில் பவனிவரும் எம் குலதெய்வமாகிய முத்துமாரி அம்மனைத் தரிசிப்பதுடன் மறுநாள் நடைபெறும் தீர்த்தோற்சவத்திலும் கலந்துகொண்டு இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

குறிப்பு:- மஹோற்சவ காலத்தில் அம்பிகை அடியார்களின் நலன் கருதி 776 - குறிகாட்டுவான், 780 - ஊர்கா வற்றுறை வழித்தடத்தில் ஈடுபடும் பிரயாணிகள் போக்குவரத்து பேருந்துகள் தங்களது அர்ப்பணிப்புடனான பொதுநலத்துடன் கூடிய சேவையை அம்மன் ஆலயம் வரை விஸ்தரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வேலணை.** **தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா உபயகாரர்கள்.**

(cs. 272278) (13)

# UV PRINTING

## LATEST TECHNOLOGY IN JAFFNA

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு
விசேட விலைக்கழிவு

15% OFFER
நிபந்தனைகளுக்கு உட்பட்டது

இப்போது
யாழ்ப்பாணத்தில்...

*Latest UV Machine | High Quality UV Printing*

**Get all kinds of prints in one place...**

UV ALBUM & BOX | GLASS & ACRYLIC |
LEATHER & PLASTIC | WOOD & METAL | BOTTLE & KEYTAG |
MOBILE COVER | TILE & PLATE | USB & PEN

வாடிக்கையாளர்களே!
இது உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்...

ARISSONA (PVT) LTD
ADVERTISING & PUBLICATION
Jaffna.
021 222 3222, 076 141 9307
www.arissona.com | info@arissona.com

Baby Photo
PRINTING SOLUTIONS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# அரசியல் இல்லாத அரசியல்

**1941**ஆம் ஆண்டு பிரிட்டன் நாடாளுமன்றம் எதிர்க்கட்சி, ஆளும்கட்சி என்ற பாகுபாடு இல்லாமல் நாசி ஜேர்மனியின் படையெடுப்பை வென்றமையைக் கோடிட்டுக்காட்டியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இலங்கையும் அவ்வாறு ஆளும்கட்சி – எதிர்க்கட்சி என்ற பாகுபாடு இல்லாமல் முழு நாடாளுமன்றமும் அரசாங்கமாகச் செயற்பட்டு இந்தப் பெருநெருக்கடியில் இருந்து விடுபட வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கும், அதைத் தலைமையாகக் கொண்ட ஐக்கிய மக்கள் கூட்டணிக்கும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

1941ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி, இறக்குமதிக்கான நெருக்குவாரங்கள், நாசி ஜேர்மனியின் படையெடுப்பு, ஹிட்லரின் ஓயாத யுத்த நெருக்குவாரம் என்று அத்தனையையும் எதிர்கொண்டு பிரிட்டன் மீண்டு வந்தமை, ஒட்டுமொத்த நாடாளுமன்றமும் ஒரே அரசாங்கமாகச் செயற்பட்டதால்தான். ஆதலால், எதிர்க்கட்சி வரிசையில் அமர்பவர்களும் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்க வேண்டும் என்பதுதான் ஜனாதிபதியுடைய கருத்தின் சாராம்சம்.

சிதிலமடைந்துள்ள இலங்கையை மீளக் கட்டியெழுப்பவும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் 'அரசியல் இல்லாத அரசியல்' தற்போது காலத்தேவையானது. பெரமுனவுக்குள் இருக்கும் பிளவுகள், சுயேச்சை அணிகள், ஐக்கிய மக்கள் கூட்டணிக்குள் உள்ள பிடுங்குப்பாடுகள், ஐக்கிய தேசியக் கட்சி மீதான காழ்ப்புணர்வுகள் இவையெல்லாம் நாடாளுமன்றத்தில் தற்போதுவரைக்கும் எதிரொலித்துக் கொண்டேயிருக்கின்றன. இத்தகையை வழமையான அரசியல்போக்குத் தொடர்ந்தால் இலங்கைக்கு மீட்சி என்பது இப்போதைக்கு இல்லை. இந்தக் குழிபறிப்பு அரசியலை கொஞ்சக்காலத்துக்கு ஓரமாக வைத்துவிட்டு, நாட்டின் நலனை முன்னிறுத்திச் சிந்தித்தால் மட்டுமே எதிர்காலமென்ற ஒன்று இந்தத் தீவுக்கு உண்டு. அந்த வகையில் ஜனாதிபதியாகவும், முதுபெரும் அரசியல்வாதியாகவும் ரணில் விடுத்துள்ள அழைப்பு சரியானதுதான்.


கேள்வி என்னவென்றால், நாடாளுமன்றமே அரசாங்கமாக மாற்றம்பெறுதல் என்ற ரணிலின் கோட்பாட்டில், நாடாளுமன்றத்துக்குள் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகள் என்ன நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்று ரணில் கருதுகின்றார் என்பதே. 1941ஆம் ஆண்டில் பிரிட்டன் நாடாளுமன்றம் செயற்பட்டதைப்போன்று இலங்கை நாடாளுமன்றமும் செயற்படவேண்டுமாயின் இந்தக் கேள்விக்கான பதிலை நாடாளுமன்றத்துக்குள்ளும் நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் தேடவேண்டியது காலத்தேவையானது.

ஏனெனில், 1941ஆம் ஆண்டு நாசிகளின் படையெடுப்பும், இதர பிரச்சினைகளும் பிரிட்டிஷாருக்கு ஒரு பொது எதிரியாக இருந்தன. பிரிட்டிஷாருக்கு இடையில் எந்த மனக்கசப்பும் மனக்காயங்களும் இருக்கவில்லை. ஆனால், இங்குள்ள நிலைமை அவ்வாறில்லை. பிரிட்டிஷார் எவ்வாறு ஓரணியில் நின்று பொது எதிரியை எதிர்கொண்டார்களோ அவ்வாறு இலங்கையர்களாக நாமும் ஓரணியில் செயற்படவேண்டுமாயின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு தேடவேண்டியது மிக அவசியமும் தவிர்க்க முடியாததுமாகும். ஜனாதிபதி ரணில் வலியுறுத்தியுள்ள 'ஒட்டுமொத்த நாடாளுமன்றமும் அரசாங்கமாக' என்ற பொதுக் கொள்கையில் நின்று பொருளாதார நெருக்குவாரங்களுக்கு இணைந்தாற்போல் பொதுவான இணக்கப்பாட்டின் அடிப்படையில் தேசிய இனப்பிரச்சினைக்கும் தீர்வு தேடுவார்களானால் இலங்கையின் துரித அபிவிருத்தியை எந்த சக்தியாலும் தடுக்கவோ – தவிர்க்கவோ முடியாது.

ஆண்டுதோறும் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதியை 'அந்த ஒருசிலர்' என்ற பொதுவான கருத்தியலின் கீழ், நாசிகளைத் தோற்கடித்த போர்வெற்றி விழாவாகக் கொண்டாடுகின்றது பிரிட்டன். நாசிகளை தோற்கடிப்பதற்காக ஓயாது பாடுபட்ட பிரிட்டன் வான்படையின் விமானிகளைத்தான் 'அந்த ஒருசிலர்' என்ற பொதுவான கருத்தியலின் கீழ் வருடாவருடம் கொண்டாடித் தீர்க்கின்றது பிரிட்டன். உண்மையில், பாகுபாடுகளைக் களைந்து – நாட்டுக்காக ஒன்றிணைந்து இலங்கையில் தற்போதுள்ள பஞ்சம், பசி, பட்டினி மற்றும் இன்னோரன்ன நெருக்குவாரங்களுடன் ஏழு தசாப்தங்களாக புரையோடிப்போயுள்ள தேசிய இனப்பிரச்சினைக்கும் இந்த நாட்டின் நாடாளுமன்றம் தீர்வு காணுமாக இருந்தால், இலங்கையர்களும் 'அந்த ஒருசிலரை' கொண்டாடித் தீர்க்கத்தான் செய்வார்கள். 'அந்த ஒருசிலராக' எவரெவர் இருக்கப்போகின்றார்கள்? என்பது தான் கேள்வி.

## நாளொரு நல்வார்த்தை

"ஒரு கதவு மூடப்படும்போது மற்றொரு கதவு திறக்கிறது. ஆனால், நாம் மூடப்பட்ட கதவையே பார்த்துக் கொண்டு திறக்கப்படும் கதவை தவற விடுகிறோம்" - **ஹெலன் கெல்லர்**



*12 மனித உரிமைகள் அமைப்புகள்*

# அரச அடக்குமுறைக்கு கூட்டாகக் கண்டனம்!

**கொழும்பு, ஓக. 7**

**அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் இலக்குவைத்துத் தாக்கப்படுகின்றமைக்கும், கைது செய்யப்படுகின்றமைக்கும் 12 சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் இணைந்து கண்டனம் தெரிவித்துள்ளன.**

இது தொடர்பில் அந்த அமைப்புகள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

18 ஆம் திகதி பதில் ஜனாதிபதியாகப் பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனம் செய்தார். கைதுசெய்வதற்கும் தடுத்து வைப்பதற்கும் படையினருக்கும் பொலிஸாருக்கும் முழுமையான அதிகாரங்களை வழங்கினார். அவசரகாலச்சட்டம் பாதுகாப்புத் தரப்பினருக்கு மேலும் துணிச்சலை வழங்குகின்றது.

அவசரகாலச் சட்டம் அமைதியான முறையில் உடன்பட மறுப்பவர்களை அச்சுறுத்துவதற்கும் ஒடுக்குமுறைகளை முன்னெடுப்பதற்குமான ஆயுதத்தை பாதுகாப்புத் தரப்பினருக்கு வழங்குகின்றது. அமைதியான ஆர்ப்பாட்டங்களும் ஆர்ப்பாட்டக்காரர்களும் குற்றவாளிகளாக்கப்படுகின்றனர். நியாயபூர்வமான அரசியல் வெளிப்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு கருத்துச்சுதந்திரம் தன்னிச்சையாக மறுக்கப்படுகின்றது.

அதிகாரிகள் வெளியேறுமாறு வேண்டுகோள் விடுத்துள்ள 'கோத்தா கோ கம' பகுதியில் படையினர் அளவுக்கதிகமான பலத்தை பயன்படுத்தாமலிருப்பதையும், அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களின் உரிமைகளை மதிப்பதையும் அதிகாரிகள் உறுதி செய்யவேண்டும் - என்றுள்ளது. (ம)

*பங்குச் சந்தையில்*

## நேற்றுமுன்தின புரள்வு 3.74 பில்லியன் ரூபா!

கொழும்பு, ஓக. 7

கொழும்பு பங்கு சந்தையில் நேற்றுமுன்தினம் மொத்தப் புரள்வு 3.74 பில்லியன் ரூபா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்துப் பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் நேற்றுமுன்தினம் 8,333.37 புள்ளிகளாக பதிவாகியுள்ளது. அதனடிப்படையில் நாள் ஒன்றுக்கான அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் அதிகபட்சமாக 104.23ஆக நேற்றுப் பதிவாகியுள்ளது. (அ-ம)

*சாரதி அனுமதிப்பத்திரத்துக்கான*

## மருத்துவப் பரிசோதனை கட்டணம் அதிகரிப்பு!

கொழும்பு, ஓக. 7

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றுக்கான மருத்துவப் பரிசோதனைக் கட்டணம் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் மாற்றியமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவ பரிசோதனைக்குப் பயன்படுத்தப்படும் பொருள்கள் மற்றும் உபகரணங்களின் விலை அதிகரிப்பு காரணமாக இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் தெரிவித்துள்ளது. (ம)

நாளை
08.08.2022
திங்கட்கிழமை
ஆடி 23

சுபநேரம் : 12.04 - 01.34
ராகுகாலம்: 07.34 – 09.04

ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணப் பாடசாலைகளை 5 நாள்களும் செயற்படுத்தவும்!

## வடக்கு மாகாண பிரதம செயலாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 7



**வடக்கு மாகாணப் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் வாரத்தின் 5 நாள்களும் இடம் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.**

இவ்வாறு வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன்பந்துலசேன வட மாகாண ஆளுநர் மற்றும் வடமா காணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி அறிவுறுத்தியுள்ளார்.

அதில் மேலும் உள்ளதாவது:-

அனைத்து அரச நிறுவனங்களும் இவ்வாரம் தொடக்கம் வாரத்தின் 5 நாள்களும் செயற்படுதல் வேண் டும் என்ற அமைச்சரவைத் தீர்மா னத்துக்கமைய வடக்கு மாகாணத் தின் சகல பாடசாலைகளும் வாரத் தின் 5 நாள்களும் திறக்கப் படுதல் வேண்டும்.

பாடசாலைக்குச் செல்வதற்குப் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொள்ளும் ஆசிரியர்களுக்கு வாரத்தில் 3 வேலை நாள்கள் சுற் றொழுங்கு அடிப்படையில் பாடசா லைக்கு சமுகமளிப்பதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்படவேண்டும்.

அத்துடன் சுற்றொழுங்கு அடிப்ப டையில் கடமைக்கு ஆசிரியர்களை அழைக்கும் தீர்மானம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 16/2022 (I) இன் ஏற்பாடுகளுக்கமைய வலயக் கல்விப் பணிப்பாளர்கள், குறித்த பாட சாலைகளின் அதிபர்களால் தீர்மா னிக்கப்படலாம் - என்றுள்ளது. (ச)

# ஒரு காற்றாலை மின் உற்பத்தியையாவது மன்னார் மாவட்டத்துக்கு வழங்குங்கள்

## பிரதேசசபை கோரிக்கை

மன்னார், ஓக. 7

மன்னாரில் காற்றாலை மூலம் உற்பத்தி செய்யப்ப டும் மின்சாரத்தில் ஒரு காற்றாலையின் உற்பத்தியா வது, மன்னார் மாவட்டத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென மன்னார் பிரதேசசபை கோரிக்கை விடுத்துள்ளது.

மன்னார் பிரதேசசபைத் தவிசாளர் எம்.ஐ.எம்.இஸ் ஸதீன் தலைமையில் பிரதேசசபை உறுப்பினர்கள், மன்னார் மாவட்ட மின்சாரசபை பிரதம பொறியிய லாளரை பேசாலை நடுக்குடா பகுதியில் அமைந் துள்ள காற்றாலை பூங்காவிலுள்ள மின்சாரசபைத் தலைமைக் காரியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை சந்தித்தனர். இதன்போதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நாடு பூராகவும் குறிப்பிடப்பட்ட நேரங்களில் மின்வெட்டு இடம்பெற்று வருகின்றது. மன்னார் தீவுப் பகுதியில் 32 காற்றா லைகள் மூலம் மின் உற்பத்தி செய்யப்பட்டு வெளி மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றது. காற் றாலைகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின் உற் பத்தியில் ஒரு காற்றாலையில் உற்பத்தி செய்யப்படும் மின் உற்பத்தியானது மன்னாருக்குப் போதியதாக இருக்கும் என்பதால் மன்னாரில் பகல், இரவு வேளை களில் ஏற்படும் மின்தடையை நிறுத்தி காற்றாலை மூலம் உற்பத்தி செய்யப்படும் மின் உற்பத்தியின் மூலம் நிலையான மின்சாரத்தை மன்னார் மாவட் டத்துக்கு வழங்க வேண்டும் -என்றனர்.

அதன்பின்னர் இது தொடர்பாக மன்னார் மாவட்ட மின்சாரசபைக்கு எழுத்து மூலம் தரும்படியும் அதைத் தொடர்ந்து இதற்கான சரியான தீர்வு எடுக்கப்படும் என்று பிரதம பொறியியலாளர் உறுதியளித்தார் என்று மன்னார் பிரதேசசபைத் தவிசாளர் எம்.ஐ.எம். இஸ்ஸதீன் தெரிவித்தார். இருதரப்புக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்குப் பின் கடந்த இரு தினங்களும் மன்னாரில் இரவில் மின்வெட்டு ஏற்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-14-60)

தென்மராட்சியில்

# பாம்பு தீண்டியவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

சாவகச்சேரி, ஓக. 7

தென்மராட்சிப் பிரதேசத்தில் பாம்புக்கடிக்கு இலக்காகியுள்ளோரின் எண்ணிக்கை அதி கரித்து வருகின்றது.

காலபோக நெற்செய்கை ஆரம்பகட்டப்ப ணிகளுக்காகக் குப்பைகள் ஏற்றியவர்கள், டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைக்காக துப்பு ரவு செய்வோர் மற்றும் விறகுத் தேவைக் காகக் காடுகளுக்குச் செல்வோர் போன் றோர் பாம்புக்கடிகளுக்கு இலக்காகின்ற னர். அத்துடன் தற்போது நிலவும் அதிக ரித்த வெப்பம் காரணமாக இரவு வேளைக ளில் பாம்புகள் குடியிருப்புகளுக்குள் புகு வதனாலும் பாம்புக் கடிக்கு இலக்காகின்ற னர். இவ்வாறு பாம்புக் கடிக்கு இலக்காகி யோர் பலர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தடுப்பூசி மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நில வுவதால் மக்களை அவதானமாகச் செயற் படுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித் துள்ளனர். (ஓ-14.9)

# நுகர்வுக்கொவ்வாத உணவுப்பொருள்; விற்பனை நிலையத்துக்கு அபராதம்!

கொடிகாமம், ஓக.7



சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக் குட்பட்ட பண்டத்தரிப்புப் பகுதியில் நுகர்வுக்கொவ் வொத ரவையை விற்ப னைக்காக காட்சிப் படுத் திய பலசரக்கு நிலையம் ஒன்றுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் இள வாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் இணைந்து நேற்றுமுன்தினம் மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனையின் போதே இந்தச் செயற்பாடு கண்டறியப்பட்டுள்ளது.

பலசரக்கு நிலையத்துக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதி மன்றில் தொடரப்பட்ட வழக்கில் உரிமையாளருக்கு 10ஆயி ரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

அத்துடன் மீளவும் இதுபோன்று நுகர்வுக்கு ஒவ்வாத பொருள்கள் விற்பனை செய்யப்படுவது தொடர்பில் கண்ட றியப்பட்டால் வியாபார நிலையத்துக்கு சீல் வைக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டது. (ச-159)

# மஹோற்சவம்

வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோயில் மஹோற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற் சவத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும்21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும் என்று ஆலய பரி பாலன சபையினர் அறிவித்துள்ளனர். (எ-14)

# பாரபட்சமின்றி எரிபொருளை பெற தெல்லிப்பழையில் நடைமுறைகள்

யாழ்ப்பாணம், ஓக. 7

தெல்லிப்பழையில் சீரான முறையில் பாரபட்சமின்றி மக்கள் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள பல்வேறு தரப்பினரி டம் இருந்து கிடைக்கப்பெற்ற ஆலோச னைகள் மற்றும் கருத்துக்களின் அடிப் படையில் எரிபொருள் விநியோக ஒழுங் குகள் நடைமுறைக்கு வருகின்றன என தெல்லிப்பழை பிரதேச செயலகம் அறி வித்துள்ளது.

பிரதேச செயலாளர் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்து ரையாடலிலேயே இந்த எரிபொருள் விநியோக ஒழுங்குகளை நடைமுறைப் படுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேச செய லாளர் தெரிவித்ததாவது:-

நீண்டவரிசை முறையில் எரிபொருள் விநியோகிக்கப்படும்போது குறிப்பிட்ட சில தரப்பினரே தொடர்ச்சியாக தமக்கு ரிய ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள் கின்றனர்.

நீண்டவரிசையில் காத்திருக்க முடியாத பல தரப்பினர் இதன் மூலம் தொடர்ச்சி யாக பாதிக்கப்படுகின்றனர் என பல் வேறு தரப்பினரிடம் இருந்து தொடர்ச்சி யாக பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெறு கின்றன.

இந்தநிலையில் உரிய விநியோக ஒழுங் குகள் நடைமுறைகளைப் பின்பற்றி அனைவரும் எரிபொருளைப் பெறும் வகையில் உறுதிப்படுத்தப்படவுள்ளது.

அதன்படி, வரிசையில் ஒழுங்குமுறை யில் நிற்கும் ஆண்களுக்கும் பெண்க ளுக்கும் மொத்தமாக 800 பேருக்கு ரோக்கன் வழங்கப்படும். விநியோகம் ஆரம்பிக்கப்படும்போது ரோக்கன் பெற்ற பெண்களுக்குத் தனியான வரிசையில் எரிபொருள் விநியோகிக்கப்படும்.

எமது பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அரச நிறுவனங்களில் கடமையாற்று வோர் தமது நிறுவனத் தலைவர் ஊடாக பிரதேச செயலாளருக்கு முன்வைக்கப்ப டும் கோரிக்கைக்கு அமைவாக அரச நிறுவன ஊழியர்களுக்கு விசேட ஒழுங் கமைப்பின் கீழ் எரிபொருள் விநியோகிக் கப்படும்.

குறித்த ஊழியர்கள் எந்த எரிபொருள் நிலையத்தில் எந்தநேரத்தில் எரிபொருள் பெறலாம் போன்ற விவரங்கள் நிறுவ னத் தலைவருக்கு அறிவிக்கப்படும்.

எரிபொருள் நிலையங்களில் அரசாங்க அலுவலர்களுக்குத் தனியான வரிசை இல்லை. கர்ப்பவதிகள், விசேட தேவையு டையோர் மற்றும் மத குருமார்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொ ருள் வழங்கப்படும்.

முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் தமக் குரிய பொலிஸ் நிலையங்களில் பதிவு களை மேற்கொண்டு பொலிஸ் நிலை யத்தால் ஒதுக்கப்படும் எரிபொருள் நிலையங்களில் மாத்திரம் எரிபொரு ளைப் பெற முடியும்.

எந்தவொரு எரிபொருள் நிலையத்திலும் சிறுவர்கள் வரிசையில் காத்திருக்கவோ எரிபொருள் பெற்றுக் கொள்ளவோ அனு மதிக்கப்படமாட்டார். எரிபொருள் வரிசை யில் முறையற்ற விதத்தில் நடந்து கொள்வோருக்கு எதிராக பொலிஸார் உரிய நடவடிக்கை எடுப்பர்.

இந்த நடைமுறைகளின்கீழ் எரிபொ ருளை விநியோகிக்க சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் சகல தரப்பினரும் நன்மை அடைவர்- என்றார்.

குறித்த கலந்துரையாடலில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், கோட்டக் கல்விப் பணிப்பாளர், எரிபொருள் நிலைய முகாமையாளர்கள் உட்பட்ட சம்பந்தப்பட்ட பல தரப்பினரும் கலந்து கொண்டனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

கோவில் நிகழ்வுகளை படம்பிடித்திட ஒளிப்பதிவாளர் தேவை. பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். உங்கள் சுயவிபரங்களை **077 801 3482** என்ற எண்ணிற்கு Whats App இல் அனுப்பவும். (CS 20220) (3/6)

## வீடு வாடகைக்கு உண்டு

கிளிநொச்சி நகரில் A9, வீதியிலிருந்து 250 m தூரத்தில் பழைய கச்சேரிக்கு பின்புறமாக 3 படுக்கையறை. Bathrom உட்பட சகலவசதிகளுடன் கூடிய முழுமையாக மாபிள் பதிக்கப்பட்ட வீடு வாடகைக்கு உண்டு.
குறிப்பு: நிறுவனங்கள், குடும்பங்கள் விரும்பத்தக்கது மாதவாடகை 30,000/-

மேலதிக விபரங்களுக்கு:
**076 693 2596**

# SALES REPRESENTATIVE
## (Kilinochchi Area)

Nilkamal® Sri Lanka's Favourite Furniture

Nilkamal Eswaran Plastics (Pvt) Ltd. is an ISO 9001:2015 Certfied, BOI approved Company in Sri Lanka.

**கிளிநொச்சி பிரதேசத்துக்கான திறமையான சிறந்த பெறுபேருகளை கொண்டு வரக்கூடிய விற்பனை பிரதிநிதி ஒருவர் தேவை.**

*அடிப்படைத் தகமைகள்*
1. க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல்.
2. சிறந்த ஆளுமையும் தொடர்பாடல் திறனும்.
3. கணனி தொடர்பான அடிப்படை அறிவு.
4. 30 வயதிற்கு கீழ் பட்டவராக இருத்தல்.
5. கிளிநொச்சி பிரதேசத்துக்கு அருகில் வசிக்கக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
6. விற்பனை துறையில் இரண்டு வருடத்திற்கு மேலான தொழில் அனுபவம்.

*பொறுப்புகள்*
1. மாதாந்த விற்பனை இலக்கினை எட்டுதல்.
2. வேலை தொடர்பான கோப்புகளை பராமரித்தல்.
3. ஏற்கனவே திட்டமிடப்பட்ட முறையில் விற்பனை பிரதிநிதிகளை சந்தித்தல்.

*தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளுக்கு கவர்ச்சியான சம்பளமும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்*

தங்களுக்கு உறவுமுறை இல்லாத இரண்டு நபர்களது சிபாரிசுடன் உங்கள் சுயவிபரக் கோவையை 7 நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய மின் அஞ்சல் முகவரி **jobs@nilkamal.lk**

Manager-HR & Administration
**Nilkamal Eswaran Plastics (Pvt) Ltd**
No. 328, Madapatha Road, Batakettara, Piliyandala.
Tel : 0114 215268, 0114 212661-3 Fax : 0112 707046 E-mail - jobs@nilkamal.lk

TÜV SÜD ISO 9001 ISO 9001:2015

## யாழ்ப்பாணம் மாசற்ற மாநகரம்
நல்லைக் கந்தன் உற்சவ காலத்தினை முன்னிட்டு சுவடி நிறுவகத்தால் நடாத்தப்படும்

# பாடசாலை மாணவர்களுக்கான ஓவியப்போட்டி- 2022

### பிரிவுகளும் தலைப்புகளும்

- **ஆரம்பப்பிரிவு – தரம் 03 – 05**
  "நமது வீட்டுச்சூழலை மாசற்றதாக மாற்றுவோம்"
- **இடைநிலைப்பிரிவு – தரம் 06 – 08**
  'நாம் காண விரும்பும் மாசற்ற மாநகரம்'
- **மேற்பிரிவு – தரம் 09 – 11**
  'கழிவுகளை மலையாய் உருவாக்கும் பொறிமுறைக்கு முடிவு கட்டுவோம்'

### பரிசுகளும் பாராட்டும்

- ஒவ்வொரு பிரிவிலும் சிறப்பான ஐந்து ஓவியங்களிற்குப் பரிசுகளும் பங்குபற்றும் அனைத்து மாணவர்களிற்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.
- தெரிவுசெய்யப்பட்ட தரமான ஓவியங்கள் எம்மால் ஒழுங்கு செய்யப்படவுள்ள ஓவியக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும்.

### போட்டி விதிகள்

- பொருத்தமான A4 அளவுள்ள தாளில் விரும்பிய வர்ண ஊடகத்தினைப் பயன்படுத்தி வரையுங்கள்.
- அனுப்புபவரின் பெயர், கைத்தொலைபேசி இலக்கம், முழுமையான கடித முகவரியுடன் கீழ்க்காணும் முகவரிக்கு 28.08.2022 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகத் தபாலில் அனுப்பி வையுங்கள்.

**மேலதிக விபரங்களை அறிய 077 986 6409 - 077 245 3108 என்ற இலக்கங்களை வட்சப்பில் தொடர்பு கொள்ளலாம்.**

**சுவடி நிறுவகம்,**
**எழுதிரள், 209, பலாலி வீதி,**
**கோண்டாவில்.**

www.suvadi.net
0094 21 222 5529
stali91@gmail.com

(CS 45819) (3/6)

செயற்திட்ட அனுசரணையாளர்கள்
comdu.it CFLI/FCIL Canada Fund for Local Initiatives Fonds canadien d'initiatives locales

## வேலைக்கு ஆள் தேவை

யாழ்ப்பாணம் / வவுனியாவில் உள்ள மதுபானசாலைக்கு Bar keeper தேவை.
(CS 45853) (3/6) **077 659 2424**

## காணி தேவை

16 பரப்பிற்கு மேல் பலாலி வீதியிற்கும், KKS வீதியிற்கும் இடையில் திருநெல்வேலி சுற்று வட்டாரத்தில் காணி தேவை. (ACO 19756 (A) (3/6)
No Brokers **075 410 5230**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட 1990 மிதுனராசி, புனர்பூசம் 6" உயர் கல்வித்தகைமை கொண்ட Asst.manager ஆக தொழில் புரியும் மணமகனுக்கு கொழும்பில் தொழில் புரியும் நற்குணமுள்ள மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள்.
(ACO 19756(C) (3/6) **076 670 2460**

## வேலையாள் தேவை

சலூன் ஒன்றுக்கு பெண் பிள்ளைகள் தேவை. பயிற்சி அளிக்கப்படும் தங்குமிட வசதி மற்றும் உணவு இலவசம்.
**077 999 5686, 071 411 4997 072 335 4945,** (CR 36898) (3/6)

## தொடர்மாடி விற்பனைக்கு

வெள்ளவத்தை IBC Road இல் புதிதாக நிர்மாணித்துக் கொண்டிருக்கும் தொடர்மாடிகளும் 1400sqft கொண்ட ஆவணங்களுள் ள தொடர்மாடி விற்பனைக்கு உண்டு.
(ACO 19756 (B) ) (3/6) **077 522 2613**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

சாவகச்சேரியில் வீட்டில் தங்கியிருந்து பணிபுரிய 25 - 35 வயதுக்குட்பட்ட சமையல் அனுபமுள்ள பெண் தேவை.
(CR 36898) (3/6) **077 858 1486**

## வீடு வாடகைக்கு

ஆனைக்கோட்டையில் மானிப்பாய் வீதியில் ஆனைக்கோட்டை சந்திக்கு அருகாமையில் பெரிய வளவுடன் கூடிய 4 அறைகளுடன் கூடிய பெரிய வீடு வாடகைக்கு உண்டு குடியிருக்கவும் வியாபாரத் தேவைகளுக்கும் பயன்படுத்த முடியும்.
இல. 958, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.
தொடர்பு: **076 066 7179** (CS 45829) (3/6)

## கார் விற்பனைக்கு

ALTO 800,Metahic Gray,
3 Million
CAK XXXX
தொடர்புகளுக்கு: **077 169 3841**

## வீடு வாடகைக்கு உண்டு

நல்லூர் செட்டித்தெருவில் அமைந்த 3 அறைகள் 2 hall களைக் கொண்ட விசாலமான வீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது.)
தொடர்புகளுக்கு: **076 843 8331**

## வாடகைக்கு

யாழ். நகரில் அறைகள் றூம் வாடகைக்கு உண்டு. **077 728 3811**
(CS 45802) (3/6)

## கடை வாடகைக்கு

யாழ். சிவன் பண்ணை வீதியில் 2 கடைகள் வாடகைக்குண்டு.
**021 224 3296, 076 023 9797** (CS 45854) (3/6)

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், ரம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேலி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு பிள்ளையார் கோயில் வீதி, கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## ஜேர்மன்மொழி

German Embassy யால் நடாத்தப்படும் A1 Exam க்கு தமிழ்மொழி விளக்கத்துடன் தனிப்பட்ட (Individual) Group (குழுக்கள்) வகுப்புகள் நடாத்தப்படும்.
**இடம் : தெகிவளை கொழும்பு**
தொடர்புகளுக்கு: **077 530 6176 071 013 9357, 077 780 3430** (CS 20194) (3/6)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




## சுப்பிரமணியம் சித்ராதேவி (Cathrine)

**யா/ மட்டுவில் சந்திரமௌலீசா வித்தியாலயம் (பழைய மாணவி)**
**மனித உரிமை சட்ட ஆலோசகர், சமூகசேவை பணிப்பாளர்,**
**குடியேற்ற தொழிலாளி** (NorQuest College, Edmonton Alberta, Canada.)

வாழ்க்கையில் வெற்றியென்பது சுலபமல்ல. சவால்கள் மிக்க வாழ்க்கையின் வெற்றிக்கு நீயே உதாரணம். இன்று சூரியப்பெண்ணாக தடைகளை வென்று தரணியில் நீ வெற்றிதனை உனதாக்கினாய்.
என்றென்றும் நம்பிக்கையின் சின்னமாக வாழ எமது வாழ்த்துக்கள்.

**வாழ்த்துவோர் :**
**பிள்ளைகள், மருமக்கள், றஜீபன் குடும்பம், மகேந்திரன் குடும்பம், தயாபரன் குடும்பம், பாஸ்கரன் குடும்பம், ஆனந்தமுரளி குடும்பம், கோகிலதீபன் குடும்பம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு நினைவு அஞ்சலி



## திருமதி சகுந்தலாதேவி பலராமன்

தோற்றம்: 11.05.1955 — மறைவு 08.08.2011

திதி: தசமி.07.08.2022


அன்பின் திருவுருவம் மறைந்து ஆண்டுகள்
- பலசென்றபோதிலும்
எங்கள் மனங்களில் தாங்கள் என்றென்றும்
- பசுமையாக
வாழ்ந்து வருகின்றீர்கள் தங்களுடனான
எங்கள் இனிமையான வாழ்வு மீண்டும் வாழக்
காத்திருக்கின்றோம்.

தாங்களின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்

**அன்புக்கணவர், பிள்ளைகள், மருமகன்கள், பேத்தி மற்றும் பேரப்பிள்ளைகள்.**

(CS 45753) (3/6)

# கண்ணீர் அஞ்சலி



## சிவஞானசுந்தரம் ராஜ்குமார்

(உரிமையாளர், கரிகணன் பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்)

பிறப்பு 28.07.1975

இறப்பு 02.08.2022

வடக்கின் அச்சுத்துறை முன்னோடியான சிவஞானசுந்தரம் ராஜ்குமார் அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**சுப்பசூஸ்**
**உரிமையாளரும், ஊழியர்களும்**
**154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

(CS45836) (3/6)

# அறைகள் வாடகைக்கு

பலாலி வீதி திருநெல்வேலி Farm School அருகே பெரிய அறைகள், சமையலறை, கழிப்பிடம் வாகன தரிப்பு வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. உத்தி யோகத்தர், மாணவர் விரும்பத்தக்கது.

சுழிபுரம், காரைநகர், வீதியில் 20 அடிக்கு 20 அடி அறை மேற்சொல்லப்பட்ட வசதிகளுடன் உண்டு.

(CS 20180) (3/6)

**தொடர்பு : 076 763 1952**

# மரண அறிவித்தல்



## இந்திராணி பேரம்பலம்

கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Markham ஐ வதிவிடமாகவும் கொண்ட இந்திராணி பேரம்பலம் அவர்கள் கடந்த (04.08.2022) வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம், ராசமணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா, அழகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா பேரம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், சாருகேசி (வவா), தயாளன் (ரகு), பவளசேசி (சூட்டி), கோடீஸ்வரன் (ஈசன்), உதயகேசி (ரூபா), காலஞ்சென்ற தயகுமார் (உதயன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தயா, துதி, துரையன், நந்தன் மற்றும் காலஞ்சென்றவர்களான தவம், பாவை, புஸ்பி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்ற கிளி, சந்திரபாலா ஆகியோரின் அன்பு மைத்துனியும்,தாஸ், நிலானி, வசந்தன், ஜெயந்தி, உமா, அஜந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், இளங்கோ (சொரூபி), பார்த்தீபன்(அனா), துஸ்யந்தன (மதுஷனா), காண்டி, கஸ்தூரி, நிரோஜ், சாருஜன், பிரியங்கா, றோசி, நிறோ, வினோ, துர்கா, ஜரிஷன், வினுசா, வினுசன், விதுரன், திரிஷிகா, கவிலாஷ், திவிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சுருதி, ஷேன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனகிரியைகளுக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்


தொடர்புகளுக்கு:

| | | |
|---|---|---|
| வவா | - மகள் | Mobile : +16477170033 |
| ரகு | - மகன் | Mobile : +19059853334 |
| சூட்டி | - மகள் | Mobile : +94771234745 |
| நந்தன் | - சகோதரன் | 14168309277 |

(CS 20212) (3/6)

தகவல்
**குடும்பத்தினர்**
**இல . 7/3, புது வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.**

# ஜெயித்தவன் நீ..!



அமரர்

## சிவஞானசுந்தரம் ராஜ்குமார்

யாழ்ப்பாண அச்சகதாரர் இணையத்தின் பிரதித் தலைவர்
உரிமையாளர் : கரிகணன் பிறிண்டேர்ஸ்

தோற்றம் :1975.07.28 — மறைவு :2022.08.02

வாழ்வின் பல யுத்த முனைகளில்
தனித்து நின்று போராடி
ஜெயித்தவன் நீ

வெற்றியின் உயரங்களை
உரசத் துடிக்கும்
ஒவ்வொருவருக்கும்
ஒவ்வொன்றிற்கும்
அவசியமாகப் படிக்க வேண்டிய
அதிசயமான ஒரு பல்கலைக்கழகம் நீ
உன்னுள் நோய் விடாமல்
துரத்திக் கொண்டிருந்த போதும்

தொற்று நோய்கள் உன்னை
அரித்துக் கொண்டிருந்த போதும்
வீழ்ந்தும் வீழ்ந்தும்
மீண்டும் மீண்டும் எழுந்து நின்று
சாதித்தவன்! எங்களுக்கெல்லாம்
போதித்தவன்!
உன்னில் இருந்து உதிர்ந்த விதைகள்
விளைந்திருக்க - உன்னை மட்டும்
இழந்திருக்கின்றோம்!
இன்று உனக்காக ஏங்கி தவிக்கின்றோ
நாளை நாம் ஒவ்வொருவரும்
ஒவ்வொருவருக்காகவும்!

**பிரிவின் துயரில் - யாழ்ப்பாண அச்சகதாரர் இணையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி





வடக்கின் அச்சக முன்னோடியான

## கரிகணன் பிறிண்டேர்ஸ்

உரிமையாளர்

## சிவஞானசுந்தரம் ராஜ்குமார்
## [கண்ணன்]

அவர்கள் காலமான செய்தி அறிந்து
மிகுந்த வேதனை அடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும்
அவரின் குடும்பத்தினர்,
உறவினர்களுடன் நாமும் துயரில்
பங்குகொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**உரிமையாளரும்**
**ஊழியர்களும்.**

Northway Family Mart SunWay

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் மாத நினைவஞ்சலி



அமரர் சின்னத்தம்பி மகாலிங்கம்

தோற்றம் 09.08.1945 | மறைவு 30.01.2022

அமரர் மகாலிங்கம் தவமணி

தோற்றம் 12.05.1947 | மறைவு 07.02.2022

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய், அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவராய், வாழ்ந்து எம்மை விட்டு பிரிந்து ஆறு மாதங்கள் மறைந்ததோ
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பட்டினசபை ஒழுங்கை, மானிப்பாய்.

என்றும் உங்கள் நினைவில்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## வேலணை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், ஓக. 7

வேலணை பெருங்குளம் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தொடர்ந்து பன்னிரு தினங்கள் நடைபெறும் திருவிழாவில் நாளை 8ஆம் திகதி திங்கட்கிழமை தீ மிதிப்பு திருவிழாவும், மறுநாள் 9ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும் சப்பறத் திருவிழாவும் மறுநாள் 10ஆம் திகதி தேர்த்திருவிழாவும் இடம்பெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் கோருகிறது பாகிஸ்தான்

சர்வதேச நிதி அமைப்பான ஐ.எம்.எப்பிடம் கடன் கோருவதற்கு பாகிஸ்தான் அரசாங்கம் தீர்மானித் துள்ளது எனத் தெரிவிக்கப் படுகிறது.

பாகிஸ்தான் தற்போது பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் நிலைகுலைந்துள்ள நிலையிலேயே இவ்வாறு கடன் கோரியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு வார்த்தையில் 1.2 பில்லியன் டொலர் கடனுதவியை கோரியுள்ளது என பாகிஸ்தான் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். இது பாகிஸ்தானுக்கு புத்துயிர் கிடைக்க உதவியாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 - 05 - 1945



மறைவு 05 - 08 - 2022

## செல்வராஜா யோகா

கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வதிப்பிடமாகவும் கொண்ட செல்வராஜா யோகா அவர்கள் கடந்த (05.08.2022) வெள்ளிக் கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டானியல் திரேசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான தில்லையம்பலம் தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பீற்றர் மரியதாசின் அன்புச் சகோதரியும், தனுஜா, விஜியேந்திரன் (விஜய் கிவ்ற் எம்போறியம்), சுமந்திரன் (நல்லை புத்தகசாலை), ஆகியோரின் பாசமிகு தாயாரும், இரவீந்திரன் (அமெரிக்கா), றேக்கா, யோகாந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், பதுஜனா, புவிஷாந், துஜானி, ஷரண் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2022 ) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

565/10, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(நல்லூர், பிரதேச செயலகம் முன்பாக)

தகவல் : பிள்ளைகள்
விஜி : 077 474 2168
சுரேஸ் : 076 686 6653

(CR 37020) (3/6)

# இரங்கல் செய்தி



இலங்கை

## நாகநாதன்

இலங்கை அன்ரனி விஜயரட்ணம் நாகநாதன் அவர்கள் கடந்த (03.08.2022) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற Dr. E.M.V. நாகநாதன் (இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர்) திருமதி. ரெட்னாவதி நாகநாதன் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குமாரி நாகநாதன் அவர்களின் அன்புக் கணவரும், தேவகி மற்றும் சிற்றம்பலம் நாகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி. நிர்மலா சந்திரகாசன், திருமதி இந்திராஹன்டி மற்றும் காலஞ்சென்ற லக்ஷ்மி நாகநாதன், காலஞ்சென்ற ஜோன் நாகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு.சா.செ.சந்திரகாசன், திரு.ஜோர்ஸ் ஹன்டி மற்றும் லக்ஷ்மி காந்தி நாகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஓகஸ்ட் 6ஆம் திகதி மாலை 4.00 மணியளவில் பொரள்ளை தகன மயானத்தில் இறுதிக்கிரியைகளுடன் தகனம் செய்யப்பட்டது. என்பதினை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்
பிள்ளைகள் : தேவகி
மற்றும் சிற்றம்பலம்

மருமகன் : சந்திரகாசன்
இளங்கோவன் : + 94 772 44 2224
anne.naganathan@gmail.com

(CR 37022 ) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மராட்சியில்

# கடந்த மாதம் வரை 110 பேருக்கு டெங்கு

சாவகச்சேரி, ஓக. 7
நாட்டில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துவரும் நிலையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த ஜனவரி தொடக்கம் ஜூலை வரை 110 பேருக்கு டெங்கு நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது என்று சாவகச்சேரி சுகாதார திணைக்களப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் 17 பேர் தொற்றுக்குள்ளாகினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
மழைகாலம் ஆரம்பமாகவுள்ள நிலையில் பிரதேச மக்கள் தமது குடியிருப்புக்கள் மற்றும் காணிகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய பொருள்களை அப்புறப்படுத்துமாறு சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ஓ-14-9)

# சங்கிலி அறுப்பு இருவர் கைது!



கிளிநொச்சி, ஓக. 7
தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணைப் பகுதியில் பெண்ணொருவரின் சங்கிலி அறுக்கப்பட்ட சம்பவத்தில் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். கடந்த புதன்கிழமை வீதியில் சென்று கொண்டிருந்த பெண்ணொருவரின் சங்கிலியை இருவர் அறுத்துச் சென்றுள்ளனர். (ஓ-14-113)

## இராணுவத்தினரைக்...

உரிமைகள் ஆணையாளர் இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுடியாது - இவ்வாறு முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.
இலங்கையின் இறுதிக்கட்டப் போரின் போது மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக அடையாளம் காணப்பட்டுள்ள 58 இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 47 உறுப்பு நாடுகளும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையார் கோரிக்கை விடுத்திருந்தார். அது தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வலியுறுத்தல் இலங்கை இராணுவத்தின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் செயலாகும். இலங்கை இராணுவ அதிகாரிகள் மீது பொய்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தும் நடவடிக்கையை ஐ.நா. உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும்.
ஐ.நா. உறுப்புரிமை நாடுகளிடம் இலங்கை இராணுவ அதிகாரிகளைக் கைதுசெய்யுமாறு கோரவோ அல்லது பயணத்தடை விதிக்குமாறு கோரவோ மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டுக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஆணையாளரின் இந்த அறிவிப்புக்கு எதிராக அரசு கடும் கண்டனங்களைத் தெரிவிக்கவேண்டும் - என்றார். (அ-ஓ-5-22)

## ரூ. 8 லட்சம்...

திகதி பிற்பகல் வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.
வீட்டில் கணவன் மற்றும் மனைவி வசித்து வரும் நிலையில் அவர்கள் இருவரும் வேலைக்குச் சென்ற பின்னர், வீட்டின் பின்பக்க ஜன்னலை உடைத்து உள்ளே புகுந்த திருடர்கள், அலுமாரியினுள் வைக்கப்பட்டிருந்த நகை மற்றும் பணத்தை எடுத்துச் சென்றுள்ளனர்.
சில காலங்களுக்கு முன்னர் வெளிநாட்டிலிருந்து வந்த உறவினர்கள் அந்த வீட்டில் தங்கிச் சென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-125)

## சர்வகட்சி...

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.
முன்னாள் போக்குவரத்து இராஜாங்க அமைச்சராகப் பதவி வகித்த யு.எல்.எம். பாரூக்கின் முதலாவது நினைவேந்தல் நிகழ்வு ருவன்வெல்லயில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டின் தற்போதைய நிலைக்கு கோத்தாபய தலைமையிலான மொட்டு அரசாங்கமே பொறுப்பு. அவருக்கு அதிகாரத்தை வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த நிலைமைக்கு காரணம். இந்த நிலையில் நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி உட்பட 225 பேரும் பல அர்ப்பணிப்புகளைச் செய்யவேண்டும்.
கடந்த காலங்களில் நாகத்தைக் காட்டியும், முட்டி உடைத்தும், பாணியைக் காட்டியும் மக்களை ஏமாற்றினர். இனி மேலும் ஏமாற்றாமல் புத்தியுடன் நடந்து கொள்ளவேண்டும்.
இந்த வரிசையில் நிற்கும் யுகத்தால் சகலரும் அவதியுறுகின்றனர். இதற்குத் தீர்வை வழங்குமாறு மக்கள் கோரியபோதும் மொட்டு அரசாங்கம் அதற்கு நிலையான தீர்வை வழங்கவில்லை.
அமைச்சுப் பதவிகளைப் பகிர்ந்து கொள்ளாமல், சலுகைகளைப் பார்க்காமல் அர்ப்பணிப்புகளைச் செய்யவேண்டும். சில அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்றத்தில் பெரிய பதவிகளில் அமர்ந்துள்ள அமைச்சர்கள்கூட தமது குடும்ப உறுப்பினர்களைத் தமது பணியாளர்களாக இணைத்துக்கொண்டுள்ளனர்.
சர்வகட்சி ஆட்சியில் அந்த நிலைமை நீங்கவேண்டும். இதன்போது அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. எதிர்காலத்தில் அமைச்சர்களின் நலனுக்காக மக்கள் நிதியைப் பயன்படுத்தக் கூடாது - என்றார். (அ-ஓ-இ)

## உணவுப்பொதி,...

எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ளதுடன், எரிவாயுவின் விலையும் குறைக்கப்படவுள்ளமையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.
சந்தையில், எரிவாயுத் தட்டுப்பாடு நீங்கியுள்ளமையால், சிற்றுணவகங்கள் தொடர்ந்தும் இயங்குகின்றன. பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டமையால், உணவுப் பொருள்களின் விலையும் அதிகரித்துள்ளது. இந்த நிலையில், எரிபொருளின் விலை இரண்டு கட்டங்களாக 30 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. எரிவாயு விலையும் குறைக்கப்படவுள்ளது. எனவே, அந்த நிவாரணத்தை பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கில் உணவுப் பொதியினதும், தேநீரினதும் விலைகளைக் குறைக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-ஓ-இ)


# கண்ணீர் அஞ்சலி



கடந்த 02.08.2022 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த
**திரு.சிவஞானசுந்தரம் ராஜ்குமார்**
(உரிமையாளர், கரிகணன் பிறின்டேர்ஸ், யாழ்ப்பாணம்)

பிறப்பு 28.07.1975
இறப்பு 02.08.2022

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**வினோ நகைப்பூங்கா**
இல. 185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



# மரண அறிவித்தல்

மலர்வு 18 . 03 . 1935



உதிர்வு 06 . 08 . 2022

## நவரெத்தினம் ஞானலக்ஷ்மி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் தொண்டமானாறு மற்றும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட நவரெத்தினம் ஞானலக்ஷ்மி அவர்கள் நேற்று (06.08.2022) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் நவரெத்தினம் (மெம்பர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வர்களான தில்லையம்பலம் - ஜானகிஅம்மா ஆகியோரின் புதல்வியும், காலஞ் சென்றவர்களான தில்லையம்பலம் திலகவதி ஆகியோரின் அன்பு மருமகளும், கண்ணன், கரன், கிருபா ஆகியோரின் அருமைத் தாயாரும், கலாநந்தி, கெவினா ஆகியோரின் அன்பு மாமியாரும், கபிலன், ஹரிசன், முகிலன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது உடுப்பிட்டி (போக்காலை வீதி) இல்லத்தில் நடைபெற்று, மாலை 4.00 மணியளவில் பூதவுடல் வல்லை இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நவரெத்தினம் (கணவர்) - 076 66 99 166
கண்ணன் (மகன்) - 076 573 1203
கரன் (மகன்) - 00447851796128
கிருபா (மகன்) - 077 471 5767
போக்காலை வீதி, உடுப்பிட்டி.

தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்கந்தவரோதயன்களின் ஒன்றுகூடல்

**காலம் : 12.08.2022**

**நேரம் : காலை 7.30 தொடக்கம் பி.ப 4.00 மணி வரை**

**இடம் : ஸ்கந்தவரோதயக் கல்லூரி**

1988 O/L பிரிவிலும் 1991ஆம் ஆண்டு A/L பிரிவிலும் கல்வி கற்ற மாணவர்களையும் அக்காலப்பகுதியில் கல்வி கற்பித்த ஆசிரி யர்களையும் இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக் குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு :**

இந்நிகழ்வில் கலந்து கொள்வோர் பின்வரும் தொலை பேசி இலக்கங்களோடு தொடர்புகொண்டு தங்களது வரவை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**ஏற்பாட்டுக்குழுவினர்**

**077 240 5601, 077 037 9911, 077 595 4136** (CS 20216) (3/6)

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திரு.தி. ரவிமயூரன்** அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி இரத்தினம் திரவியநாதன்

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரமடைகின்றோம். அன்னாரின் இறப்பால் துயற்றிற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!! (CS 20217) (3/6)

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**யாழ்ப்பாண பிராந்திய காரியாலயம்,**
**தென்னைப் பயிர்ச்செய்கை சபை பளை - கிளிநொச்சி**

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி Hotel ஆன Tilko Jaffna City Hotel இற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

- **வரவேற்பறை பணியாளர்** - Front office Staff
- **உணவகப் பணியாளர்** - Restaurant Waiter
- **சமையலாளர்** - Cook
- **சமயலறை உதவியாளர்** - Kitchen Helper
- **யாழ்ப்பாண வகை சமையலாளர்** - Jaffna Style Cook
- **சலவையக உதவியாளர்** - Laundry Helper
- **பராமரிப்பு தொழில்நுட்ப உதவியாளர்** - Maintenance Technician (Electrician, Plumber & AC Technician)
- **விருந்தினர் விடுதி பராமரிப்பாளர்** - Housekeeping

அனுபவம் மற்றும் வயதிற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.
உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

தங்களது சுயவிவரக் கோவையை 12.08.2022 இற்கு முன்னர் நேரில் அல்லது கீழ்காணும் முகவரிக்கு/ மின்னஞ்சலிற்கு அனுப்பு மாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**தொடர்புகளுக்கு: 021 720 0707/ 077 343 8373**

**info@tilkohotels.com**

**Tilko Jaffna City Hotel**
**70/6, K.K.S.Road, Jaffna.**

## மரண அறிவித்தல்

மலர்வு
12.09.1941



உதிர்வு
02.08.2022

### திருமதி கந்தையா நாகேஸ்வரி அம்மா

கைதடி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா நாகேஸ்வரி அம்மா கடந்த (02.08.2022) செவ்வாய்க்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கந்தையாவின் பாசமிகு மனைவியும், அருந்ததி (ஜேர்மனி), அன்பழகி (சுவிஸ்), அகிலா (சுவிஸ்), அமுதா(பிரான்ஸ்), அகிலன் (அமெரிக்கா), அஞ்சலா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காசிப்பிள்ளை (ஜேர்மனி), சுபாஷ்கரன் (சுவிஸ்), ரமணிதரன் (சுவிஸ்), இரமேஷ் (பிரான்ஸ்), குகேதினி (அமெரிக்கா), சசிகுமார் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சக்தீபன், அபிரா, சதீவன், ஐஸ்வர்யா, அர்ஷ்சுதா, சஞ்சீவன், ரஞ்ஜன், தனோஜனன், தகானா, ஜஷ்வந்தி, லவதீசன், விஷ்ணுசெல்லத், அபிராமி, அஸ்வினி, சித்தாத் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் வீரத், ஜானு, றியோ, அஹானா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், விக்னேஸ்வரன் (சுவிஸ்), தெட்ஷணகைலாயபதி ஆகி யோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, வள்ளிப்பிள்ளை, சுப்பிரமணியம், செல்லத்துரை, சண்முகரத்தினம், வீரசிங்கம் மற்றும் சிவபாக்கியம், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் யோகராணி (சுவிஸ்), இராஜினிதேவி, ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் இன்று 07.08.2022 மு.ப 9.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கைதடி ஊரியான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கைதடி தெற்கு, கைதடி.** **தகவல்: குடும்பத்தினர்**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் உள்ள நெல் வயல்களில் காலபோக நெற் செய்கை மேற் கொள்ளும் விவசாயிகளின். வேண்டு கோளின் பிரகாரம் நுணா வில் எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் **திரு. சின்னத்தம்பி சிவயோகநாதன்** அவர்களின் ஏற்பாட்டில். சாவகச்சேரி, தனன்களப்பு, மறவன்புலவு ஆகிய இடங்களைச். சேர்ந்த 72 உழவு இயந்திரங் களுக்கு ஒருகட்ட எரிபொருளினை வழங்கி உதவியமைக்கு நுணாவில் **ஐ.ஓ.சி.** எரிபொருள்நிரப்பு நிலைய உரிமையாளர்

### திருவாளர் வைத்திலிங்கம் சிவராசா

அவர்களக்கு எமது நன்றிகளையும் பாராட்டுக்கலையும் தெரிவித்துக்கொள்கின்றோம்

வாழ்த்துவோர்:
**சாவகச்சேரி, தனன்களப்பு, மறவன்புலவு.**
**உழவுயந்திர உரிமையாளர்கள்**

## பணியாளர் தேவை

- முகாமையாளர்
- மேற்பார்வையாளர்
- சிட்டை எழுதுனர்

**மூர்த்தி டிஜிற்றல்**
**62/20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**077 224 7428** (CS 20759) (3/6)

## மணமகன் தேவை

வவுனியா இந்து கௌரவ குடும்பம் 40 வயது சுவிஸ்ஜ நிரந்தர வதிவிடமாகவும், பதிவு திருமணம் செய்து விவகாரத்து பெற்ற 5' 3'' உயரமுள்ள கடகராசி, பூச நட்சத்திரம் தோசம் அற்ற B.Com பயின்ற மணமகளுக்கு விவாகரத்து பெற்ற (பிள்ளைகள் இல்லாத) அல்லது மணமாகாத மணமகன் தேவை. (CS 1017) (3/6)

**வட்ஸஅப் : 00675 72698919**

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர்
**திரு.நா.மனோறஞ்சிதன்**
அவர்களின் அன்புத் தாயார்
**அமரர் திருமதி**

### நாகமுத்து செல்லம்மா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழுந்த அனுதாபங்களை தெரிவி ப்ப துடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

**தோற்றம்** 12.08.1946 **மறைவு** 04.08.2022

**கல்லூரிச் சமூகம்**
**யாழ்ப்பாணம்**
**தேசிய கல்வியியற் கல்லூரி**

## யாழ் நகரில் உடனடி வேலை வாய்ப்பு

வாழ்வில் முன்னேறி சாதித்து காட்ட வேண்டும் என்ற எண்ணத்துடன் வாழ்பவரா நீங்கள்?

**வெளிநாட்டு சுற்றுலாக்கள் கார், வீடு வாங்கி ஆடம்பர வாழ்க்கை வாழ வேண்டுமா?**



மாத வருமானம் 50,000 தொடக்கம்

- O/L பரீட்சை சித்தி பெற்றவர்கள்
- பகுதி நேர வேலை வாய்ப்பு
- தகுதிக்கேற்ற உயர்பதவிகள்

உங்கள் வாழ்வை வளமாக்கி கொள்ள தொடர்பு கொள்ளுங்கள் **076 - 8820551** (CS 20211) (3/6)

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம்

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 14.08.2022 அன்று காலை 09.00 மணிக்கு சங்க பணிமனையில் மகோற்சவகால விசேட பொதுக்கூட்டம் இடம்பெற உள்ளது என்ப தனை அறியத்தருவதுடன் அனைத்து அங்கத்தவர்களும் தவறாது வருகை தருமாறு மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

(CS 45843) (3/6) **இணைச் செயலாளர்**

## வீடு வாடகைக்குத் தேவை

A9 ரோட் 2nd Cross Street இல் வீடு வாடகைக்குத் தேவை. இரு படுக்கை அறைகள் விரும்பத்தக்

தொ.பே.இல:- 076 35 0489
074 0? 4778

## பணிப்பெண் தேவை

யாழ். நகரில் வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

தொடர்பு 077 165 8524

## பெண் வேலையாள் தேவை

யாழ். நகரிலுள்ள கடை ஒன்றிற்கு 18-30 வயதுக்குட்பட்ட பெண் வேலையாள் தேவை.

தொ.பே.இல:- 075 4985 400
075 988 0000

## மணமகள் தேவை

1981ல் பிறந்த உ விலைச் சேர்ந்த சுய தொழில் (வெல்டிங் ரியும் பூரம், 1ம் பாதம் 14, பாவக்கிர த்தை உடைய அழகிய மணமகனுக்கு இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அழகிய மணமகள் தேவை.

**074 020 61?5, 077 029 4176**

## பணிப்பெண் தேவை

யாழ். நகரில் சிறிய குடும்பம் ஒன்றில் இரண்டு குழந்தைகளை தங்கிநின்று பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.

**தொடர்புகளுக்கு:**

**075 498 5400, 021 221 7600**

## மணமகன் தேவை

**1983** மூலம், யாழ்ப்பாணம், **Teacher**,
மணமகள் பதிவு இல: 7815
பதிவுக் கட்டணம் மட்டுமே,
தரகர் கூலி இல்லை.
www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, Colombo 04

**076 664 9401**

## மணமகன் தேவை

**1991** புனர்பூசம், கோப்பாய், **Civil Engineer**.மணமகள் பதிவு இல: 7832
பதிவுக் கட்டணம் மட்டுமே,
தரகர் கூலி இல்லை.
www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, Colombo 04

**076 664 9401**

## மணமகன் தேவை

**1991** ரேவதி, பருத்தித்துறை, **Optician**.மணமகள் பதிவு இல: 7901
பதிவுக் கட்டணம் மட்டுமே,
தரகர் கூலி இல்லை.
www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, Colombo 04

**076 664 9401**

## மணமகன் தேவை

**1990** அவிட்டம், யாழ்ப்பாணம், **Development Officer** ,மணமகள் பதிவு இல: 7943
பதிவுக் கட்டணம் மட்டுமே,
தரகர் கூலி இல்லை.
www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, Colombo 04

**076 664 9401**

## மணமகள் தேவை

**1993** பூராடம், காரைநகர், **Software Quality Assurance Engineer**.மணமகன் பதிவு இல: 8032 பதிவுக் கட்டணம் மட்டுமே,
தரகர் கூலி இல்லை.
www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, Colombo 04

**076 664 9401**

## மணமகள் தேவை

**1989** மிருகசீரிடம், யாழ்ப்பாணம், **Bank**.மணமகன் பதிவு இல: 8030
பதிவுக் கட்டணம் மட்டுமே,
தரகர் கூலி இல்லை.
www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, Colombo 04

**076 664 9401**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவூட்டல் மற்றும் கருவள சிகிச்சையில் இலங்கைக்கு வரப்பிரசாதமாகின்ற ஆஸிரி - நோவா கருவள மையம்



**நவீன உலக ஓட்டத்திலும் வாழ்க்கை முறையிலும் குழந்தையின்மையென்பது சாதாரணமானதொரு விடயமாக மாறிவிட்டது. இந்த நிலையில் செயற்கைக் கருவூட்டல் மற்றும் கருவளச் சிகிச்சையில் இதுவரை இந்தியாவில் மிகவும் நேர்த்தியாகச் செயற்பட்டுவந்த நோவா கருவூட்டல் மற்றும் கருவள சிகிச்சை நிலையம் இலங்கையர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே பார்க்கப்படுகின்றது. கொழும்பு ஆஸிரி - நோவா கருவூட்டல் மைய மருத்துவமனையின் பிரதான மருத்துவ அதிகாரியான மருத்துவர் சிறிசந்திரன் ஹரி பிரசாத், இலங்கையில் தற்போது தீவிரம் பெற்றுவரும் குழந்தையின்மை தொடர்பிலும் நோவா கருவள சிகிச்சை மையத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும் வழங்கிய செவ்வியே இது.**

## குழந்தையின்மைக்குக் காரணங்கள்

**கேள்வி: தற்காலத்தில் குழந்தையின்மையென்பது மிகத்தீவிரமாக அதிகரித்துவரும் சிக்கலாக மாறியுள்ளது. இப்படியிருக்கையில், குழந்தையின்மைக்கான காரணங்களாக எவற்றைக் குறிப்பிட முடியும்?** பதில்: திருமணமான தம்பதியினர் வெறும் ஓரிரு மாதங்களில் குழந்தைகள் தங்காத பட்சத்தில் தமக்குக் குழந்தைகள் இல்லை என்ற முடிவுக்கு வந்துவிட முடியாது. ஆதலால், ஆகக்குறைந்தது ஓர் ஆண்டுக்கேனும் சீரான தாம்பத்திய உறவை வைத்துக்கொண்ட பின்னர், அவர்களுக்குக் குழந்தைகள் கிடைக்காத பட்சத்தில் அதற்கு பல்வேறு காரணங்கள் பின்னணியில் இருக்கலாம் என்று இன்றைய மருத்துவ உலகம் குறிப்பிடுகின்றது.

"பருவம் தவறிய தாமதமான திருமணங்கள்" நவீன கலாசாரத்தின் ஒரு பிரதிபலிப்பாக மாறியிருக்கின்றன. இவ்வாறான பருவம் தவறிய தாமதமான திருமணங்களால் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இனப்பெருக்கத் தகைமையில் பெரும் பின்னடைவு ஏற்படுகின்றது. 23 தொக்கம் 27 வரையான வயதெல்லையில் இருக்கக்கூடிய முட்டைக்கரு எண்ணிக்கை, 35 வயதில் குறைகின்றது. இது 42 வயதுக்குப் பின்னர் முற்றாக இல்லாமல் போகின்றது. இதுதான் தற்காலத்தில் குழந்தையின்மைக்கான முதன்மைக் காரணமாக உள்ளது. குழந்தையின்மைக்குப் பெண்களில் மட்டுமல்ல ஆண்களிலும் குறைபாடுகள் இருக்கவே செய்கின்றன. ஆண்களின் விந்தணுக்களில் இருக்கக்கூடிய துடிப்பிழப்பு, வீரியத்தன்மையின்மை என்பனவும் குழந்தையின்மைக்குக் காரணமாக அமைகின்றன. அதேநேரம், மது, புகைத்தல் தொடர்பான பழக்கங்களும் மரபணு தொடர்பான காரணங்களும் குழந்தையின்மையில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

**கேள்வி: குழந்தையின்மைக்கு, மருத்துவத்துறைக்கு அப்பாற்பட்ட தீர்வுகளாக எவற்றைக் குறிப்பிடலாம்?**
பதில்: எந்தச் சிக்கலுக்கும் ஓர் ஆரோக்கியமான வாழ்வென்பது மிகமிக முக்கியமானது. குழந்தையின்மை பிரச்சினையிலும் அது தவிர்க்க முடியாததாகின்றது. இதன்படி, குழந்தையின்மைக்கான தீர்வுகளிலும் ஆரோக்கியமான வாழ்க்கை முறை மிக முக்கியத்துவம் மிக்கதாக இருக்கின்றது. ஆரோக்கியமான உணவு, சரியான வயதில் திருமண வாழ்வை அமைத்துக்கொள்ளுதல், பிரச்சினைகளை வெளிப்படைத்தன்மையுடன் கையாளுதல் என்பன குழந்தையின்மைக்கான தீர்வுகளாக அதாவது மருத்துவத் துறைக்கு அப்பாற்பட்ட தீர்வுகளாகக் குறிப்பிடலாம். இவற்றை நாம் விரும்பியோ அல்லது விரும்பாமலோ கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

## செயற்கைக் கருத்தரிப்பு இலங்கையில் பெருவெற்றி

**கேள்வி: குழந்தையின்மைக்கான தீர்வாக, செயற்கைக் கருத்தரிப்பு முறைக்கு தற்காலத்தில் பலரும் தம்மை உட்படுத்திக் கொள்கின்றனர். இந்த மருத்துவ முறைமை இலங்கையில் தற்காலத்தில் எவ்வளவு தூரம் வெற்றியளிக்கின்றது?**

பதில்: குழந்தையின்மை என்ற பெரும் மன உளைச்சலையும் ஏக்கத்தையும் செயற்கைக் கருத்தரிப்பு முறைகள் தற்காலத்தில் பெருமளவு நிவர்த்தி செய்கின்றன. செயற்கைக் கருத்தரிப்பு என்று வரும்போது கொழும்பு ஆஸிரி - நோவா கருவூட்டல் மைய மருத்துவமனையின் சேவைகளைப் புறந்தள்ளிவிட்டு கருத்துக்களைத் தெரிவித்துவிட முடியாது. இந்தியாவில் செயற்கைக் கருத்தரிப்புத் துறையில் முன்னிலையில் உள்ள நோவா கருவூட்டல் மைய மருத்துவமனை இதுவரை 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தம்பதியினருக்கு வெற்றிகரமான மகப்பேறுகளை மேற்கொண்டுள்ளது. அப்படிப்பட்ட மிகச்சிறந்த நிறுவனம் இலங்கையில் ஆஸிரி என்னும் மருத்துவக் குழுவுடன் இணைந்து தனது பணிகளை விரிவுபடுத்தியுள்ளது.

உண்மையில் இதர நாடுகளைக் காட்டிலும் இலங்கையில் செயற்கைக் கருத்தரிப்பு வெற்றிச் சராசரி உயர்ந்த அளவிலேயே பேணப்படுகின்றது. இலங்கை வளர்ச்சியடைந்து வரும் நாடாக இருந்த போதிலும், ஆஸிரி - நோவா கருவூட்டல் மைய மருத்துவமனை அந்த நாடுகளுக்கு நிகரான சேவையை இலங்கையில் தற்போது ஏற்படுத்தி வழங்கியுள்ளது என்பதே உண்மை.

அதேநேரம் இந்தியா போன்ற நாடுகளுக்குச் சென்று அங்கு இந்தச் சிகிச்சைகளை மேற்கொள்ளும்போது வரும் பணச் செலவில், வெறும் மூன்றில் ஒரு பகுதியை வைத்து அதே சிகிச்சையை இலங்கையில் மேற்கொள்வதற்கு கொழும்பு ஆஸிரி - நோவா கருவூட்டல் மைய மருத்துவமனை தற்போது வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், இது இலங்கையர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவும் அமைந்துள்ளது. புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கின்ற பலரும் இலங்கைக்கு வந்து இந்தச் சிக்சையை இப்போது பெறக்கூடிய வகையில் இலங்கையில் இந்தச் சிகிச்சை முறைமை வளர்ச்சியடைந்துள்ளது என்பதே உண்மை.

**கேள்வி: புலம்பெயர் நாடுகளில் சென்று வசித்தவர்கள், இந்தக் கருத்தரிப்புச் சிகிச்சைக்காக இலங்கைக்கு வருகின்றனர் என்று சொன்னீர்கள். அவ்வாறாயின் இந்தச் சிகிச்சை முறைகள் அங்கு இல்லையா? அந்த நாடுகளை விடவும் இலங்கை மேம்பட்டுள்ளதா?** பதில்: புலம்பெயர் நாடுகளுக்குச் சென்று வசித்தவர்கள் இலங்கைக்கு வந்து கருத்தரிப்புச் சிகிச்சைகளை மேற்கொள்கின்றமை உண்மை. இதற்கு நான் ஏற்கனவே தெரிவித்த பணச்செலவு முக்கிய காரணம். அங்கு இந்தச் சிகிச்சைகளை மேற்கொள்ளும்போது செலவிடப்படும் பணத்தில் வெறும் மூன்றில் ஒரு பகுதிதான் இலங்கையில் அவர்கள் இந்தச் சிகிச்சைகளைப் பெறுவதால் செலவிட வேண்டியிருக்கும். அதேநரம் வெளிநாடுகளில் பிறிதொருவரின் விந்தணுவைச் செலுத்தி குழந்தையொன்றுக்கு எதிர்பார்த்தால் மரபணு சார்ந்த விடயத்தைக் கவனிக்க வேண்டியிருக்கும். இலங்கையில் அந்தச் சிக்கல் இல்லை. எனவே தாம் சார்ந்த சமூகத்தின் மரபணுவைக் கருத்தில்கொண்டும் இந்தச் சிக்சையை இலங்கையில் அவர்கள் பெற்றுக்கொள்கின்றனர். அதேபோல் இலங்கையில் வெளிநாடுகளுக்கு ஏற்ற தரத்துடன் இந்தச் சிகிச்சை முறைமை மேம்படுத்தப்பட்டுள்ளது என்பதே உண்மை.

## நோவா கருவூட்டல் மையத்தின் பணிகள்

**கேள்வி: இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் போக்குவரத்து நெருக்கடிக்கு மத்தியில் ஆஸிரி - நோவா கருவூட்டல் மைய மருத்துவமனையின் செயற்பாடுகள் எவ்வாறு அமைந்துள்ளன?** பதில்: உண்மையில் "புதிய வழமை" என்ற வாழ்க்கை முறைக்குள் இலங்கையர்களாகிய நாங்கள் இன்று செல்லவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். எரிபொருள்கள் இல்லை, போக்குவரத்து நெருக்கடி என்றுவிட்டு குழந்தைப் பேற்றுக்கு நாங்கள் காலம் தாழ்த்த முடியாது. இதுவொரு வாழ்க்கைப் பிரச்சினை.

ஆதலால், பொதுமக்களின் இந்த இடர்பாட்டை ஆஸிரி - நோவா கருவூட்டல் மைய மருத்துவமனை நன்கு புரிந்து அவர்களுக்காக் சிறப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம். அதாவது எமது மருத்துவமனையிலேயே குறித்த சிகிச்சையைப் பெறுபவர்கள் தங்கிநின்று சிகிச்சையைப்பெற்றுக்கொள்ள முடியும். ஏனெனில் இந்தச் சிகிச்சை முறைக்கு காலநேரங்கள் மிகமிக முக்கியமானவை. சரியான நேரத்தில் சரியான நாளில் சரியான தவணையில் அவர்கள் சிகிச்சைக்கு தம்மை உட்படுத்த வேண்டும். போக்குவரத்தில் உள்ள இடர்பாட்டால் இந்த காலநேரத்தில் மாறுபாடு ஏற்பட்டால் அது ஒட்டுமொத்த சிகிச்சையையும் பாதித்துவிடும் என்பதால் இந்த நடைமுறையை நாம் ஏற்பாடு செய்து வழங்கியுள்ளோம்.

## பொருளாதார இடரிலும் மகத்தான பணி

**கேள்வி: இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால், குழந்தையின்மைக்கான சிகிச்சை சவாலுக்கு உட்பட்டுள்ளதா?** பதில்: நிச்சயமாக. அனைத்துத் துறைகளையும் இந்தப் பொருளாதார நெருக்கடி பாதித்துள்ள நிலையில் மருத்துவத்துறையும் விதிவிலக்கல்ல. கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பிருந்த விலைகளுக்குத் தற்போது மருந்துகள் கிடைப்பதில்லை. அவற்றின் விலை உயர்ந்துள்ளது. ஆனால் ஆஸிரி - நோவா கருவூட்டல் மைய மருத்துவமனை சேவை அடிப்படையில் இயங்குகின்றது என்பதை இங்கு தெளிவுபடுத்த விரும்புகின்றோம். எமது மருத்துவச் சேவைக்கான கட்டணத்தில் எந்த உயர்வும் எம்மால் மேற்கொள்ளப்படவில்லை.

**கேள்வி: இலங்கையில் "திட்டமிடப்படாத கருத்தரிப்பு" சம்பவங்கள் பதிவாகின்றனவா? அவ்வாறான சம்பவங்கள் எந்த மட்டத்தில் இருக்கின்றன?** பதில்: "திட்டமிடப்படாத கருத்தரிப்பு" என்பது அனைத்து நாடுகளிலும் இருக்கின்ற ஒரு பிரச்சினைதான். இலங்கையிலும் அவ்வாறான சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன. வாழ்க்கைப் பிரச்சினைகள், சில கொள்கைகள் குறிக்கோள்கள் மற்றும் இன்னபல விடயங்கள் இந்த திட்டமிடப்படாத கருத்தரிப்பு என்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆனால், அதை நாங்கள் சிறப்பாக முகாமை செய்துகொள்ள முடியும். உதாரணமாக எமது ஆஸிரி - நோவா கருவூட்டல் மைய மருத்துவமனையில் விந்தணுக்களையும், கரு முட்டைகளையும் உறை நிலையில் வைத்துப் பராமரிக்கக்கூடிய ஏற்பாடுகள் காணப்படுகின்றன. இந்த ஏற்பாடுகளால் இங்கு மக்கள் தமது கரு முட்டைகளையும் விந்தணுக்களையும் சேகரிக்கலாம். பின்பும் அவர்கள் தாம் திட்டமிடும் நேரத்தில் அதைப்பயன்படுத்தி கருத்தரிக்க முடியும். அதற்குரிய ஏற்பாடுகளையும் ஆஸிரி - நோவா கருவூட்டல் மைய மருத்துவமனை சிறப்பாக வழங்குகின்றது. ஆதலால், தாமதாமாக திருமணம் செய்ய திட்டமிட்டுள்ள தம்பதியினருக்கு இந்த வாய்ப்பு ஒரு வரப்பிரசாதமாகவே அமைகின்றது. அவ்வாறு தாமதமாகத் திருமணம் செய்துகொள்ளத் திட்டமிடுபவர்கள் ஆஸிரி - நோவா. மருத்துவமனையில் உள்ள வசதி வாய்ப்புக்களைப் பயன்படுத்தி, ஆரோக்கியமான கருத்தரிப்பை மேற்கொள்ள முடியும்.

உண்மையில் இலங்கையில் ஆஸிரி - நோவா கருவூட்டல் மைய மருத்துவமனையானது தற்போது ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. நம்பகத்தன்மை, போக்குவரத்து, சிகிச்சை முறைமை, பராமரிப்பு மற்றும் பணச்செலவு என்று அத்தனை விடயதானங்களிலும் தனது சேவையை ஆஸிரி - நோவா கருவூட்டல் மைய மருத்துவமனை ஆத்மார்த்தமாக பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றது.

**Call: 077 778 3377 | 077 877 9110**

ASIRI NOVA
IVF & FERTILITY
Asiri Medical Hospital

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடியைத் தீர்ப்பதற்கு முறையான திட்டம் வகுக்குக

## உயர்நீதிமன்றம் அரசுக்கு பணிப்பு

கொழும்பு, ஓக.எ

தற்போது நாடு எதிர்கொள்ளும் நெருக்கடிக்குத் தீர்வாக முறையான நீண்டகால மற்றும் குறுகியகாலத் திட்டங்களைத் தயாரிக்குமாறு அரசாங்கத்துக்கு உயர்நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு அடிப்படை உரிமை மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மக்களுக்குத் தேவையான எரிபொருள், மின்சாரம், உணவு, அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் மருந்துகள் போன்ற அத்தியாவசிய சேவைகளுக்கு முறையான வேலைத்திட்டம் ஒன்றை வகுக்க அரசுக்கு உத்தரவிடுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இரண்டு அடிப்படை உரிமை மனுக்களைத் தாக்கல் செய்தது.

இந்த நிலையில் குறித்த நெருக்கடிக்குத் தீர்வாக நீண்டகால மற்றும் குறுகியகாலத் திட்டங்களைத் தயாரிக்குமாறு அரசாங்கத்துக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அத்துடன் இந்த மனுக்கள் மீதான விசாரணை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(ச-இ)

# தூதுவராக சனத் நியமனம்

இலங்கையின் சுற்றுலாத்துறைத் தூதுவராக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சனத் ஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தகவலைச் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். புதிய சுற்றுலா ஆலோசனைக் குழுவிடன் இணைந்து நியமனத்தை அறிவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது. சனத் ஜயசூரிய தானாக முன்வந்து இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் மாலைதீவுகளை இலக்காகக் கொண்ட இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்வுகளில் ஒரு பகுதியாக இருக்க ஒப்புக்கொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(எ-இ)

# கண்ணீர் அஞ்சலி



மண்மகிழ 28.07.1975 — கண்நெகிழ 02.08.2022

## அமரர் சிவஞானசுந்தரம் ராஜ்குமார்

எங்கு சென்றனை எம் தோழா-இனி
எவர் எமக்குள்ளார் நீ பகர்வாய்?
திங்கள் மதி போல் வளர்ந்த அச்சகம்
திசையெலாம் புகழ எழுந்தாய் வடக்கில்
தங்கு தடையில்லாக் கொடையும் தயையும்
தங்கமே உனையன்றி எவரிடம் காண்போம்
சங்கத் தமிழின் புகழ் மணக்க-எங்கும்
சார்ந்தே நாவலர் சிலை சமைத்தாய்
மங்காப் புகழுடை கொக்குவில் இந்துவின்
மாசறு மைந்தனே ராஜகுமாரா!
சிங்கமாய் நிமிர்ந்திடும் நின் கம்பீரம்
சிந்தையில் நின்றே எமைக் கொல்லுதடா
பங்கமாய்ப் பாதியில் பிரிந்ததும் ஏன்
பதறித் துடிக்கின்றோம் உயிரே வாருமடா

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**1994ம் உயர்தர பிரிவு மாணவர்கள்**
**கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 06 . 1950



மறைவு 05 . 08 . 2022

## திருமதி மேரி கொண்செப்ரா குணேந்திரன்

**(முன்னாள் புனித வளன் கத்தோலிக்க அச்சக பிரதம லிகிதர்)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொய்யாத்தோட்டம் புதுவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி கொண்செப்ரா குணேந்திரன் 05.08.2022 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம்சென்றவர்களான இம்மானுவேல், திரேசம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியும் காலம்சென்றவர்களான பற்றிக், லில்லி ஆகியோரின் பாசமிகு மருமகளும், குணேந்திரனின் (ஓய்வுபெற்ற மாநகரசபை உத்தியோகத்தர்) ஆருயிர் மனைவியும் காலம்சென்றவர்களான மங்களதாஸ்,கிறிஸ்ரி அன்ரனிதாஸ், மேரி எட்மன்ரா ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலம்சென்றவர்களான பாலசிங்கம் பிளோமினாவின் மருமகளும், காலம்சென்றவர்களான பங்கிராஸ், இமெல்டா-சுவாம்பிள்ளை, அத்னாசியார், வெலிஸ்ற்றஸ் நவமணி செல்லையா -எட்வேட் மற்றும் மலர், பிரான்சிஸ்-ராணி, காலம்சென்ற ஜெயமணி-நீக்கிலஸ், அருள் ரெட்ணம் மற்றும் இந்திராணி, புஸ்பராணி-பாலேந்திரா, காலம்சென்ற ஜெயராணி மற்றும் ரெட்ணராஜா, சந்திராணி-ராஜகுலேந்திரன், ராஜகுமாரன்-சியாமளா ஆகியோரின் மரு மகளும், சறோ, பிறேமா, விமலேந்திரன், பிரான்சிஸ்-றஞ்சி, தனேந்திரன்-றஞ்சினி, சுரேந்திரன்-றுகுணா, சுகந்தி பத்மராஜ், விஜேந்திரன்-ஜினா ஆகியோரின் மைத்துனியும், றஜிதா சர்வேஸ்வரன், நேருஷா லியோன் காலம்சென்றவரான குயிலினி, குயின்ரன், எல்ட்டன், காலம்சென்ற ஜெய்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜனினா-ராஜ், எரேனா-சிவா, லியோனா, எமேர்ஷன், துகாணி, சறுக்சன், டறின், கரோஷன், கரோன்சியா ஆகியோரின் பெரியம்மாவும், கார்த்திகன், யோசுவா, ஜோயல், தேஜா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (08.08.2022) திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டுக் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**1/14, புதுவீதி, முதலாம் ஒழுங்கை,**
**கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.**

**தகவல்: ப.குணேந்திரன்**
**(கணவர்-077 662 2191)**

(CS 2022) 1/6

# மரண அறிவித்தல்

மலர்வு 02 . 07 . 1942



உதிர்வு 04 . 08 . 2022

## திருமதி நித்தியசிங்கம் யோகதேவி (ராசாத்தி)

இருபாலையை பிறப்பிடமாகவும், கொக்குவில் பிறவுண் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நித்தியசிங்கம் யோகதேவி அவர்கள் கடந்த (04.08.2022) வியாழக்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் நித்தியசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- மீனாட்சி அவர்களின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - செல்லாச்சி அவர்களின் அன்பு மருமகளும், அமரர் யோகரத்தினம், அமரர் விநாயகமூர்த்தி, அமரர் பூபாலசுந்தரமூர்த்தி, ரோகிணிதேவி, யோகமலர், அமரர் சுகுமார், அமரர் சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் செல்வரத்தினம், கலாராணி, அமரர் பரமேஸ்வரி, அமரர் தவரத்தினம், அமரசிங்கம் ஆகியோரின் மைத்துனியும், அமரர் ஜெயபாலசிங்கம், ஜெயக்குமார், ஜெயந்திரன், கிருபாகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜயதேவி, தனுஷா, சங்கீதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், உசேனி-வினோத், அட்சயன், ஆகிர்த்யா, மாதங்கி, ஆருஜன், அனுமிதா, அனிஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தன்ராஜ், தனுஷா, தஜனி, மிதுலா, கதீஷன், கௌரி, கஸ்தூரி, கவிதா ஆகியோரின் அத்தையும், கோகிலன், சாயினி, குவிதினி, ரம்யா ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2022) ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் பிறவுண் வீதியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று, பின்னர் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**அன்னாரின் பிரிவினால் துயருறும்**
**மகன்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
**077 078 3356, 077 444 3570**

(CS 20225) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வகட்சி அரசாங்கம்; முன்மொழிவு நாளை

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பில் ஒவ்வொரு கட்சிகளுடனும் கலந்துரையாடியபோது முன்வைக்கப் பட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் பொதுவேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அது நாளை திங்கட்கிழமை வெளியிடப் படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க அறிவித்துள்ளார். (அ-ஒ-இ)

### 13 நாள்களின்...

வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். இந்தச் சவால்களை எதிர்கொள்வதற் கான தேசிய மூலோபாயத்தை வகுப்ப தில் அனைத்து அரசியல் கட்சிகளி டையே ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு ஜனாதிபதியின் அர்ப்பணிப்பை ஐ.நா. பொதுச்செயலர் ஒப்புக்கொண்டுள்ள தோடு, அவ்வாறு செய்யும்போது, பொது மக்களுடன் கலந்தாலோசித்தல், சட்டத் தின் ஆட்சி மற்றும் அடிப்படை மனித உரிமைக் கோட்பாடுகளுக்கு மதிப்பளித் தல் உட்பட அனைத்து தரப்பினருக்குமி டையில் கலந்துரையாடலை ஊக்குவிப் பதன் முக்கியத்துவமும் எடுத்துக்காட் டப்பட்டுள்ளது.

மேலும், பெண்களின் அரசியல் பங்கேற் புக்கான இலங்கையின் முயற்சிகளை அங்கீகரிப்பதிலும், முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கு ஜனாதிபதியின் தலைமைத்துவத்தை ஊக்குவிப்பதிலும் ஆதரவு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை, இலங்கை அர சாங்கத்துக்கும் மக்களுக்கும் உடனடி மற்றும் நீண்டகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவுள்ளதுடன், அனைத்து இலங் கையர்களுக்கும் சமாதானத்தைக் கட்டி யெழுப்புதல், நிலையான அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித் தல் ஆகியவற்றில் ஐக்கிய நாடுகள் சபை யின் ஒத்துழைப்பைத் தொடர்ந்து பேணு வதற்கு எதிர்பார்ப்பதாகவும் அந்த வாழ்த் துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-இ)

### இக்கட்டான...

இலங்கை பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள தருணத்தில், இலங் கைப் படையினருக்கு எதிராக நடவ டிக்கை எடுக்குமாறு ஐ.நா. மனித உரி மைகள் ஆணையாளர் ஏன் கூறினார் என்பது தொடர்பில் ஆராய்கின்றோம் - இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இலங்கையின் இறுதிக்கட்டப் போரின் போது மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக அடையாளம் காணப்பட்டுள்ள 58 இராணுவ அதிகா ரிகளுக்கு எதிராக, ஐ.நா. மனித உரிமை கள் சபையின் 47 உறுப்பு நாடுகளும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையா ளர் மிச்செல் பச்லெட் அம்மையார் கோரிக்கை விடுத்திருந்தார். அது தொடர் பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாள ரின் அறிவிப்புத் தொடர்பில் அரசு கவ னம் செலுத்தும். நாடு பல துறைகளில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள இந்த நேரத்தில் ஏன் இந்த அறிவிப்பு வந்தது என்பது தொடர்பில் ஆராய் வோம். இது தொடர்பில் ஜனாதிபதி, பிரத மர் மற்றும் அமைச்சரவை மட்டத்தில் ஆராயப்படும். அதன்பின்னர் இலங்கை அரசின் உத்தியோகபூர்வ பதிலை வெளி யிடுவோம் - என்றார். (அ-ஒ-5-22)

### சீனக்...

கைக் கோள் கண்காணிப்புக் கப்பலான யுவான் வாங் - 5 பயணத்தை ஒத்தி வைக்குமாறு இலங்கை அரசு, சீன அர சிடம் கோரியுள்ளது என்று இந்திய ஊட கமான ஹிந்துஸ்தான் ரைம்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த உளவுக் கப்பல் எதிர்வரும் 11ஆம் திகதி அம்பாந்தோட்டைத் துறைமுகத் துக்கு வந்து ஓகஸ்ட் 17ஆம் திகதி புறப்ப டத்திட்டமிடப்பட்டுள்ளது. எனினும் இந்த கப்பற் பயணத்தின் உண்மையான நோக்கம் என்ன என்பதை அறிவிக்கு மாறு இந்தியா, இலங்கையிடம் கோரி யுள்ளது. இதனையடுத்தே கப்பற் பய ணத்தை ஒத்திவைக்குமாறு இலங்கை, சீனாவிடம் கோரியுள்ளதாக இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

இருப்பினும் இது தொடர்பில் இலங்கை அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு வெளியிடப்படவில்லை. (அ-ஒ-5)

### அமைச்சுப்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வகட்சி வேலைத்திட்டம் தயாரிக்கப்பட் டவுடன் சர்வகட்சி அமைச்சரவையும் நியமிக்கப்படும்.

ஆளும் - எதிர்த்தரப்பு என்று வேறு பாடின்றி மக்கள் பிரதிநிதிகள் அனை வரும் ஓரணியில் சங்கமித்து சர்வகட்சி அரசை நிறுவ வேண்டும். அப்போது தான் பொருளாதார நெருக்கடியிலி ருந்து எமது நாட்டை மிக விரைவாக மீட்டெடுக்க முடியும்.

கட்சி அரசியல் செய்து ஆட்சி நடத்தி னால் அதனால் நாட்டுக்கு எந்தப் பய னுமில்லை. சர்வதேச நாடுகளும் எமக்கு உதவி புரிய முன்வரமாட்டா. எனவே, கட்சி அரசியலை ஒதுக்கிவைத்துவிட்டு நாட்டுக்காக - மக்களுக்காக - பலமான சர்வகட்சி அரசை நாம் ஒன்றிணைந்து நிறுவவேண்டும் - என்றார். (அ-ஒ-22)

### இலங்கையின்...

அரசவை உறுப்பினரும் வெளிவிவகார அமைச்சருமான வாங் யீ, இலங்கை யின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை கம்போடியாவில் சந்தித்துப் பேசினர்.

இதன்போது, சீன அரசாங்கமும் மக்க ளும் இலங்கைக்கு அவசரகால மனிதா பிமான உதவிகளை வழங்கியுள்ளதுடன் இருதரப்பு மற்றும் பலதரப்பு வழிகள் மூலம் தொடர்ந்து உதவிகளை வழங்கு வதாக சீன அமைச்சர் குறிப்பிட்டார். இலங்கையின் புதிய அரசாங்கம், நாட்டை சரியான பாதைக்குக் கொண்டு செல்லும் என நம்புவதாகவும் அவர் கூறி னார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் அலி சப்ரி, சீனக் கொள்கையில் இலங்கை உறுதியாக இருப்பதாகவும் சீனாவின் உள்விவகாரங்களில் தலையிடும் மற் றும் பதற்றத்தைத் தூண்டும் எந்தவொரு செயலையும் எதிர்க்கிறது என்றும் குறிப் பிட்டார்.

இலங்கையில் சீனாவின் 'கடன் பொறி' என்று கூறப்படும் கூற்றை மறுத்த சப்ரி இலங்கையின் வெளிநாட்டுக் கடனில் 10 சதவீதத்தை மட்டுமே சீனா கொண்டுள் ளது என்று வலியுறுத்தினார். சீனாவின் உதவி இல்லாமல் இலங்கை எந்த வளர்ச்சியையும் அடைந்திருக்க முடி யாது என்றும் அவர் தெரிவித்தார். (அ-ஒ-இ)

# போராட்டத்தில் நடைபெற்ற தீயவற்றை தள்ளி வைப்போம்

## இப்படிச் சொல்கிறார் ரணில்

கொழும்பு, ஓக. 7

போராட்டத்தால் நல்ல விடயங்களும் நடந்தன. மோசமான விடயங்களும் நடந்தன. நல்லதை மட்டும் வைத்துக் கொண்டு தீய பக்கத்தைத் தள்ளிவைப் போம். சட்டத்தை நடைமுறைப்படுத்துவ தில் ஏதேனும் குறைபாடுகள் ஏற்பட்டிருப் பின் கலந்துரையாடி அதனைத் தீர்த் துக்கொள்வோம் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்குவ தற்கான ஆலோசனை தொடர்பில் தென் னிலங்கை பிரதம சங்கநாயக வண. கலாநிதி ஓமல்பே சோபித தேரர் உள் ளிட்ட மக்கள் பேரவையுடன் நேற்றுமுன் தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத் தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே ஜனாதி பதி மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று அவரது ஊடகப் பிரிவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் ரணில் தெரிவித்தா வது:-

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒரு குழுவினர் அல்லர். பல குழுக்கள். இவர்கள் அனை வரும் எனக்கு எதிரானவர்கள் அல்ல. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள குழுவினர் இன்றும் வந்து கலந்துரையாடினர். அனைத்து அமைதியான ஆர்ப்பாட்டக் காரர்களும் எங்களுடன் கலந்துரை யாடுகிறார்கள். எதிரானவர்கள் இருக்க லாம். ஆனால், எல்லோரும் எங்க ளுக்கு எதிரானவர்கள் அல்லர்.

அவர்கள் மிகவும் ஆக்கபூர்வமானவர் கள் என்றுதான் சொல்லவேண்டும். நான் அதைப் பாராட்டுகிறேன். ஆனால், சில நேரங்களில் ஆர்ப்பாட்டம் வன் முறையாக மாறியது. நாம் அதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும், என்னுடன் காலையில் பேச்சு நடத்தியவர்கள் வன் முறையால் போராட்டத்தைவிட்டு வெளி யேறினர் என்று கூறினார்கள். பல்வேறு அமைப்புகள் இதனைக் கூறுகின்றன.

ஜனாதிபதி மாளிகைக்குள் புகுந்து செய்த செயலை நான் ஒருபோதும் ஏற் றுக்கொள்ளமாட்டேன். அது கோத்தா பயவின் தனிப்பட்டதொன்றல்ல. அது எங்களின் பொதுச் சொத்து. அங்கே தொலைந்துபோன சில விடயங்கள் மீண்டும் கிடைக்காது. ஜனாதிபதி மாளி கையும் ஆர்ப்பாட்டக்காரர்களின் கை களில், அலரிமாளிகையும் அவர்களின் கைகளில், இறுதியாக பிரதமர் அலுவல கம் வரை அது சென்றது. அரசாங் கத்தை எப்படி நடத்துவது? என் வீடு தீப் பிடித்து எரிந்ததுடன் அது முடிந்தது. அதையும் நாம் கண்டிக்கவேண்டும். ஆர்ப்பாட்டக்காரர்கள் யாரும் அதனைக் கண்டிக்கவில்லை.

அடுத்து இவர்கள் நாடாளுமன்றத்துக் குள் வர முயற்சித்தனர். அங்கு வந்த தும், நான் துப்பாக்கிச்சூடு நடத்தவேண் டாம் என்று கூறினேன். பின்னர் பிரதமர் அலுவலகத்துக்கு வந்தனர். அங்கேயும் சுட வேண்டாம் என்றேன். மீண்டும் நாடா ளுமன்றத்துக்கு வந்தார்கள். அங்கி ருந்த பாதுகாப்புப் படையினரிடம் உரிய நடவடிக்கை எடுக்கச் சொன்னேன். நாடாளுமன்றத்தைப் பாதுகாப்பதற்கா கவே இவ்வாறு செய்யப்பட்டது. அவர் கள் என் மீது கோபப்படலாம். ஆனால் எம்முடன் கலந்துரையாடும் ஆர்ப்பாட் டக்காரர்கள் சிலர் இருக்கின்றார்கள். அவர்களுக்கு எதிர்காலத்தை வழங்கவேண்டும். அவர்கள்தான் 'சிஸ் டம் சேஞ்ச்' பற்றிப் பேசுகிறார்கள். அவர் களை நாம் பாராட்டுகிறோம். இப்போது நாம் அனைவரும் ஒன்றுபடவேண்டும். சட்டத்தை மீறியவர்களையும் ஏனைய வர்களையும் இப்போது எப்படித் தேர்ந் தெடுப்பது? இங்கு ஒரு சிக்கல் உள்ளது. ஜோசப் ஸ்டாலின் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டது ஒரு சட்டரீதியான நடவடிக்கை ஆகும். நான் அவருடன் உரையாடினேன் - என்றார். (அ-ஒ-இ)

# கிராம அலுவலர்களுக்கு எரிபொருள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக. 7

சாவகச்சேரி, நுணாவில் ஐ.ஓ.சி. எரி பொருள் நிரப்பு நிலையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலி ருந்து பி.ப. 1 மணி வரை யாழ். மாவட்டத் திலுள்ள கிராம அலுவலர்களுக்கு 'கியூ ஆர்' குறியீட்டு அடிப்படையில் பெற்றோல் விநியோகிக்கப்படவுள்ளது.

'கிராம அலுவலர்களின் அர்ப்பணிப் பான பணியையும், அவசியத்தையும் கருத்திற் கொண்டு இந்த ஏற்பாடு மேற் கொள்ளப்பட்டதாகவும், கிராம அலுவலர் கள் தம்மை உறுதிப்படுத்தும் ஆவ ணத்தை இதன்போது தம்வசம் வைத்தி ருக்கவேண்டும்' - என்றும் எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் வை.சிவ ராசா தெரிவித்தார்.

பிரதேச செயலகப் பிரிவுகள் அடிப்படை யில் கிராம அலுவலர்களுக்கு விநியோ கம் இடம்பெறும்.

நெடுந்தீவு 9 - 9.30, வேலணை 9.30 - 10, காரைநகர் 10 - 10.30, ஊர்கா வற்றுறை 10.30 - 11, யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் 11 - 11.30, சண்டிலிப் பாய், சங்கானை மற்றும் உடுவில் 11.30 - 12, தெல்லிப்பழை, கோப்பாய் மற்றும் சாவகச்சேரி 12 - 12.30, கரவெட்டி, பருத் தித்துறை மற்றும் மருதங்கேணி 12.30 - 13.00 என்ற அடிப்படையில் பெற்றோல் விநியோகம் இடம்பெறவுள் ளது. (அ-ஒ-159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மின்சாரம் துண்டித்து விட்டதா?

**மின்சார கட்டணங்களும் பில் ஏறிவிட்டதா?**

**இதோ இதற்கான தீர்வை நாங்கள் பெற்றுத் தருகிறோம்**

சகல விதமான மின்சாரப் பொருள்கள் பாவிக்க கூடியவாறு SOLAR INVERTER மிகவும் மலிவான விலையில் பொருத்தி தரப்படும். மின்சார கட்டணமும் சேமிக்கப்படும் மற்றும் CCTV கேமராக்கள் பொருத்தி தரப்படும் **J.J GROUP** 021 222 8854

(CS 20204)(3/6) No. 603, K.K.S, Road, Jaffna 077 555 5100

## காணி விற்பனைக்கு

**யாழ் நாவற்குழியில் 54 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு**

- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில் மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று லட்சம் (300000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.

பார்வை இடும் நேரம் :காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு

076 490 5403, 076 491 2493,076 490 6029

## பதவி வெற்றிடம்

பிரபல கட்டட நிறுவனத்திறகு பின்வரும் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது. பொருத்தமான விண்ணப்பதாரிகள் கீழ் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு சுயவிபரக்கோவையை (BIO DATA) **08.08.200** றக்கு முன்னர் அனுப்பி வைக்கவும் கட்டடத்-துறையில் முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**பதவி : நிர்வாக உத்தியோகஸ்தர் (Admim Assistant)**

E-mail : adminjaffna@sanken.lk

Tel.No : 021 222 4840 (CS 45840) (3/6)

## பணிப்பெண் தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள வீடொன்றில் தங்கி நின்று வேலை செய்யும் பணிப்பெண் தேவை.

**வயது எல்லை 35 - 50**

**சம்பளம் 35000.00**

தொடர்பு

077 787 8708 (CR 37018) (3/6)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை.

(CS 45838) (3/6) T.P : 076 695 8296

## ENGLISH CLASSES

யாழ்நகரில் தனி வகுப்புகள்

Grade 7 - G.C.E. O/L - A/L

Graduates தொழில்புரிவோர் - சரளமாக ஆங்கிலம் பேசவும் எழுதவும்

**GCE O/L English Literature**

K.Ganesh B.A 077 766 8725

## தேவை

வெஸ்ரேன் மொபைல் கையடக்க தொலை பேசி நிலையத்திற்கு

**1) விற்பனையாளர் 2) பழக விரும்புவோர்.**

**வயது - 18 - 21**

**சம்பளம் : 20 000 - 30 000 வரை**

(CS 20213) (3/6) 077 199 6117

## வீடு வாடகைக்கு

28/1 புதிய அத்தியடி வீதி, யாழ்ப்பாணத்தில் மாபிள் பதிக்கப்பட்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. பார்வையிடும் நேரம் மாலை 3.00 மணிக்கு பின்னர் (CR 36840) (3/6)

077 803 8226, 077 711 0960

## உடனடி வேலைவாய்ப்பு

- **துப்புரவுத் தொழிலாளர்** - ஆண்/பெண் சம்பளம் ரூபா:30,000/= மேல்
- **உதவிக் கணக்காளர்**-Accounting Clerk ஆண்/பெண் Male / Female

**நியூ சன்றைஸ் & பேபி நீட்ஸ்**

**580, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

தொடர்பு

0772081441/0762555529/0772247766

## விற்பனைக்கு

சுன்னாகம், உடுவில் K.K.S வீதியில் இலக்கம் 236. 28 பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொலைபேசி இலக்கம்

+ 610401469941

வெளிநாட்டில் இருப்பவர்கள் மட்டும் மேற் குறிப்பிடப்பட்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தரகர் தேவையில்லை (CS 45795) (3/6)

## தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல தனியார் விருந்தினர் விடுதிக்கு Room boy, சமையல் உதவியாளர் ஆகிய வேலைகளுக்கு ஆள்கள் தேவை. (CS 20214) (3/6)

தொடர்பு : 077 668 1840

## பதவி வெற்றிடம்

யாழ். நகரில் பிரபல தனியார் வைத்தியசாலைக்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கான தகுந்த ஊழியர்களை எதிர் பார்க்கிறது.

- மருந்தக உதவியாளர்
- வரவேற்பாளர்
- வைத்திய உதவியாளர்
- காசாளர்
- களஞ்சிய உதவியாளர்

கவர்ச்சிகரமான ஊதியத்துடன் மேலதிக அனுகூலங்களும் வழங்கபடும்.

யாழ் நகரை அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் மட்டும் உங்கள் சுயவிபரக்கோவையினை வைத்தியசாலை வரவேற்பு பகுதியில் கையளிக்கவும். (CR 36899) (3/6)

மேலதிக தொடர்புகளுக்கு : 077 120 3763

## பதவி வெற்றிடம்

யாழ் நகரில் அமைந்துள்ள பிரபல காட்சியறைக்கு பின்வரும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் இருபாலாரிடமிருந்தும் கோரப்படுகின்றன.

1. Customer Service officers
2. Cashier

உடன் விண்ணப்பிக்கவும்

விளம்பர இல JT / 1039

C/O உதயன்

361, கஸ்தூரியார் வீதி ,

யாழ்ப்பாணம். (CS 20198) (3/6)

## பணிநிலை வெற்றிடம்

யாழ்.திருநெல்வேலியில் பரமேஸ்வரா சந்தியில் இயங்கும் பிரபல பல்பொருள் காட்சியறைக்கு பின்வரும் பணி வெற்றிடம் உள்ளன.

- **காசாளர் (Cashier) ஆண்/பெண் வயது 20 - 30 வரை**
- **தரவு பதிவாளர் (Data Entry Operator) வயது 18 - 30 வரை**
- **Track maintanance வயது 30 - 35 வரை**
- **களஞ்சிய காப்பாளர் (Store Koepar) வயது 35 - 40 வரை**
- **பொதி செய்பவர்கள் வயது 18 - 50 வரை**

உங்கள் சுயவிபர கோவையை Northwayfamilymart18@gmail.com அனுப்பி வைக்கவும்.

**Northway Family Mart**

**Thirunelvely and Kondavil**

Northway Family Mart




## பராமரிப்பாளர் தேவை



**யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனத்திற்கு வாகனங்கள் மற்றும் மின்பிறப்பாக்கி இயந்திரங்கள்**

போன்றவற்றை பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை.

**(இயந்திரங்கள் பழுதுபார்க்க தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.)**

ஞாயிற்றுக்கிழமை

காலை: 9.00 - 01.00 வரை நேரில் வரவும்

**392/6, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

**(கைலாச பிள்ளையார் கோவிலடி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a Newspaper


யானை எருத்தம் பொலிய குடை நிழல் கீழ்
சேனை தலைவராய் சென்றோரும் ஏனை
வினை உலப்ப வேறு ஆகி வீழ்வர் தாம் கொண்ட
மனையாளை மாற்றார் கொள

- நாலடியார் பாடல்களில் இருந்து

சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 ஆடி 22 ஞாயிற்றுக்கிழமை (07.08.2022) சிகரம் : 111

> ரணில் விக்கிரமசிங்க அரகலயவை அதன் ஆதரவுத்தளங்களில் இருந்து பெருமளவுக்கு தனிமைப்படுத்தி வருகிறார் என்று தோன்றுகிறது. இந்த அடிப்படையில் தொகுத்துக் கணித்தால் வரும் ஒன்பதாம் திகதி மாபெரும் எழுச்சி ஒன்றுக்கான வாய்ப்புகளைத் தடுப்பதற்காக ரணில் கடுமையாக உழைக்கிறார்.



# ஒன்பதாந் திகதி என்ன காத்திருக்கிறது?

○ நிலாந்தன்

வரும் ஒன்பதாம் திகதியும் மக்கள் தெருவில் இறங்குவார்கள்' என்ற தொனிப்பட சரத் பொன்சேகா எச்சரித்திருந்தார். அவர் அவ்வாறு கூறியதை அரகலயக்காரர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிகிறது. சரத் பொன்சேகா அரகலயவை "ஹைஜாக்' பண்ணப் பார்க்கிறார் என்று ஒரு குற்றச்சாட்டு எழுந்தது.

கடந்த மூன்று மாத காலத்துக்கும் மேலான மக்கள் எழுச்சிகளின்போது ஒவ்வொரு ஒன்பதாம் திகதியும் அரசியல்வாதிகளுக்குக் குறிப்பாக ராஜபக்ச குடும்பத்துக்கும் அவர்களுடைய ஆதரவாளர்களுக்கும் கெட்ட நாள்களாகக் காணப்பட்டன.

இந்த அரசியல் எண்கணிதத் தர்க்கத்தின்படி வரும் ஒன்பதாம் திகதியும் அரசியல்வாதிகளுக்கு கெட்ட நாளாக அமையுமா?

அந்த ஆபத்தை எதிர்கொள்ளும் தற்காப்பு முறியடிப்பு நடவடிக்கைகளில் ரணில் ஏற்கனவே இறங்கிவிட்டார். அரகலயவை ஒடுக்கும் நடவடிக்கைகளை ரணில் இருமுனைகளில் முன்னெடுக்கிறார். ஒருமுனை, அரகலய தோன்றக் காரணமாக இருந்த பொருளாதார நெருக்கடியைத் தற்காலிகமாகவேனும் தணிப்பது. இரண்டாவது, அரகலயச் செயற்பாட்டாளர்களை தொடர்ச்சியான அச்சுறுத்தலுக்குள் வைத்திருப்பது.





முதலாவது முனையில், கடந்த சில வாரங்களுக்குள் ரணில் விக்கிரமசிங்க பின்வரும் விடயங்களைச் செய்திருக்கிறார். முதலாவது, மின்வெட்டு நேரத்தை குறைத்துக் கொண்டு வருவது. இரண்டாவது தலைநகரில் எரிவாயு விநியோகத்தை வழமைக்குக் கொண்டு வந்தது. ஏனைய நகரங்களிலும் எரிவாயு விநியோகம் சீராகி வருகிறது. மூன்றாவது, வரிசையில் நின்றால் எரிபொருள் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. கியூஆர் கோட் முறைமைக்குள் எரிபொருள் ஒப்பீட்டளவில் கிடைக்கக்கூடியதாக இருப்பது. நாலாவது, பொருள்களின் விலைகளைப் படிப்படியாகக் குறைத்து வருவது. ஐந்தாவது, அரகலயவின் கோரிக்கையான நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையைப் பலவீனப்படுத்தும் விதத்தில் 22A திருத்தத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியமை. ஆறாவது, சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை உருவாக்கப்போவதாக அறிவித்திருப்பது.

மேற்கண்ட நடவடிக்கைகள் யாவும் அரகலய தோன்றக் காரணமாக இருந்த அம்சங்களை அகற்றுவது என்ற அடிப்படையில் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக, அரகலயவை ஆதரித்த சிங்கள படித்த நடுத்தர வர்க்கத்தின் கஷ்டங்களையும் பயங்களையும் போக்குவது. இது முதலாவது முனை.

இரண்டாவது முனையில் அரகலய செயற்பாட்டாளர்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவது. கடந்த ஒரு வாரத்துக்குள் மட்டும் இரண்டு பிணங்கள் காலிமுகத்திடலில் கரையொதுங்கின. அரகலய தொடங்கி இதுவரையிலும் இவ்வாறு ஆறு பிணங்கள் கரை ஒதுங்கியுள்ளன. இது முதலாவது. இரண்டாவது, தென்னிலங்கையில் பரவலாக துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் நடக்கின்றன. இதில் கடந்த இரு மாதகாலப் பகுதிக்குள் 23பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். மூன்றாவது, அரகலய செயற்பாட்டாளர்கள் உதிரி உதிரியாகக் கைது செய்யப்படுவது. அவர்களில் சிலருக்கு நாட்டைவிட்டு வெளியேறத் தடை விதித்திருப்பது. ஆசிரியர் தொழிற்சங்கச் செயலாளர் ஸ்டாலின் கைது செய்யப்பட்டிருக்கிறார். தொழிற்சங்கங்கள் அரகலயவை தூக்கிநிறுத்தக்கூடாது என்று ரணில் சிந்திக்கிறார். நாலாவது, அரகலயவின் பின்னணியில் நிற்பதாகக் கருதப்படும் முன்னிலை சோசலிஷக் கட்சியின் அலுவலகம் பொலிஸாரால் சோதனை இடப்பட்டுள்ளது. நாலாவது, கோத்தா கோ கம கிராமத்தின் பருமனைக் குறைப்பது. அந்தக்கிராமம் நாடு முழுவதற்குமான அரகலயவின் குறியீட்டு மையம் ஆகும். அரசுக்கு எதிராக ஒரு போராட்டம் தொடர்ச்சியாக நடப்பதை வெளியுலகத்துக்கு உணர்த்தும் ஒரு செயற்பாடாக அது காணப்பட்டது. ரணில் இப்பொழுது அதைச் சிறிதாக்கி வருகிறார். அங்கே இப்போது நூற்றுக்கும் குறைவானவர்களே காணப்படுகிறார்கள்.

மேற்கண்ட நடவடிக்கைகளின் மூலம் ரணில் விக்கிரமசிங்க அரகலயவை குறிப்பிடத்தக்க அளவுக்கு முறியடித்திருப்பதாகவே தோன்றுகிறது. அரகலயவின் முன்னணிச் செயற்பாட்டாளர்கள் பலர் தலைமறைவாகியிருப்பதாகக் கருதப்படுகிறது.

அரகலயவின் தொடக்கத்தில் இருந்து அதை ஆதரித்து வந்த மேற்கு நாட்டுத் தூதரகங்கள் இப்பொழுது கைது நடவடிக்கைகளை கடுமையான வார்த்தைகளால் கண்டிப்பதில்லை. கைது நடவடிக்கைகளுக்கு எதிராக பார் அசோசியேஷன்-சட்டத்தரணிகள் அமைப்பு- முன்னரைப்போல பலமான எதிர்பைக் காட்டவில்லை.

கோத்தாபய அகற்றப்படும் வரையிலுமான போராட்டக்களத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களைப் பாதுகாப்பதில் சட்டத்தரணிகளின் சங்கம் பெரிய பங்களிப்பை நல்கியது. ஒருநாள் காலை காலி வீதியில் பொலிஸ் வாகனத் தொடரணியொன்று காணப்பட்டது. போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தும் நோக்கத்தோடு அவ்வாறு அந்த வாகனத்தொடரணி நிறுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்பட்டது. அதற்கு எதிராக சட்டத்தரணிகள் சங்கம் ஆட்சேபனை தெரிவித்தது. பின்னர் அந்த வாகனப்பேரணி நீக்கிக்கொள்ளப்பட்டது. காலிமுகத்திடலில் பொலிஸ் மற்றும் படைத்தரப்பிடமிருந்து போராட்டக்காரர்களை பாதுகாப்பதற்காக சட்டத்தரணிகளும் மதகுருக்களும் கைகளைக் கோர்த்தபடி மனிதச் சங்கிலி அமைத்துக் கவசமாக நின்ற காட்சிகளும் உண்டு. கோத்தாபய அகற்றப்படுவதற்கு முன்புவரை அரகலய செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்படும் போதெல்லாம் சட்டத்தரணிகள் நூற்றுக்கணக்கில் நீதிமன்றங்களில் குவிந்தார்கள். மீரிஹான சம்பவத்தின் பின்னரான கைது நடவடிக்கைகள் உட்பட சில கைது நடவடிக்கைகளின்போது 300க்கும் குறையாத சட்டத்தரணிகள் அவ்வாறு திரண்டுநின்று செயற்பாட்டாளர்களைப் பாதுகாத்தார்கள்.


ஆனால் இதுவெல்லாம் கோத்தா அகற்றப்பட முன்னரான கதைகள். ரணில் வந்த பின்னரான கதைகளே வேறு. போராட்டத்தில் முன்னணியில் நின்ற மதகுரு அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளார். பல செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சட்டத்தரணிகள் சங்கம் அவர்களைப் பாதுகாப்பதற்கு முன்னரைப் போல ஒன்றிணைந்து தீவிரமாகச் செயற்படுவதாகத் தெரியவில்லை.

கைது செய்யப்படுவோர் வெவ்வேறு நீதிமன்றங்களில் பரவலாக முற்படுத்தப்படுவதால், சட்டத்தரணிகள் அவ்வாறு திரளமுடியவில்லை என்று ஒரு காரணம் கூறப்படுகிறது. எனினும் கொழும்புமைய சட்டத்தரணிகள் அமைப்பு பெருமளவுக்கு யூஎன்பிக்கு ஆதரவானது என்று கருதப்படுகிறது. மேலும் அரகலயவோடு தொடக்கத்திலிருந்தே இளம் சட்டத்தரணிகள் அமைப்புத்தான் அதிகம் நெருக்கமாகக் காணப்பட்டது என்றும் அவதானிக்கப்பட்டுள்ளது.

மேலும், கைது செய்யப்படுவோரில் தனிப்பட்ட மற்றும் பொதுச்சொத்துக்களை நாசம் செய்த குற்றச்சாட்டுக்கு இலக்கானவர்களின் விடயத்தில் நீதிமன்றங்களில் வாதிடுவதற்கு சில இளம் சட்டத்தரணி

03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொடரப்போகும் நிதி நெருக்கடி

## புவிசார் அரசியல் போட்டியினால் திசைமாறும் கவனம்

○ அ.நிக்ஸன்

கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஐரோப்பிய மற்றும் மேற்குலக நாடுகளிடம் இருந்து தொடர்ச்சியாகப் பெருமளவு நிதியுதவிகளைப் பெறக்கூடிய சூழல் அருகிக் கொண்டே செல்கின்றது. ரஷ்ய - உக்ரைன் போரினால், தற்போது பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள சர்வதேச நாடுகள் -குறிப்பாக ரஷ்யாவுக்கு எதிரான நாடுகள் - உக்ரைன் நாட்டை எப்படி மீளக்கட்டியெழுப்புவது என்பதிலேயே கூடுதல் கவனம் செலுத்தியுள்ளன. ரஷ்யாவுக்கு எதிரான போருக்கு உதவியளிப்பதிலும் இந்த நாடுகளின் கவனம் அதிகரித்துள்ளது.

ரஷ்யாவைப் பலவீனமாக்க வேண்டுமென்ற புவிசார் அரசியல் போட்டியே இதற்குக் காரணம் எனலாம். உக்ரைன், இலங்கைபோன்று பொருளாதார அபிவிருத்தியடையாத நாடு அல்ல. பணவீக்கம் அளவுக்கு அதிகமாக உயருகின்ற நாடும் அல்ல. ஆனால் ரஷ்யா போர் தொடுத்த பின்னரான சூழலில் உக்ரைன் பல வழிகளிலும் அழிவடைந்துள்ளது.

இதனால் உக்ரைன் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற நோக்கில் ஐரோப்பிய மற்றும் மேற்குலக நாடுகள் தற்போது திட்டங்களை வகுக்க ஆரம்பித்துள்ளன. பெருமளவு நிதியையும் இந்த நாடுகள் ஒதுக்குகின்றன. ஜி-7 மாநாட்டில் இது குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. அத்துடன் அந்த நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டிலும் உக்ரைனுக்கு உதவியளிப்பது குறித்துத் தொடர்ச்சியாகப் பேசப்படுகின்றது.

இந்த நிலையிலேயே இலங்கையில் கடந்த மார்ச் மாதம் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. தற்போதும் பொருளாதார நெருக்கடி தொடருவதால், இலங்கைக்கு நிதியுதவிவழங்கவேண்டுமென ஆரம்பத்தில் பரிந்துரைத்த ஐரோப்பிய மற்றும் மேற்குலக நாடுகள், தற்போது இலங்கையின் ஸ்திரமற்ற அரசியல் நிலமைகளைக் காரணம் கூறி நிதி வழங்குவதை இழுத்தடிக்கின்றன.

இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில், இலங்கை தமக்கேற்றவாறு முக்கியமான தளமாக இருக்க வேண்டுமென்பதே அமெரிக்கா - இந்தியா போன்ற நாடுகளின் நீண்டகால விரும்பம். அதற்காகவே 2009 இல் ஈழப் போராட்டமும் இல்லாதொழிக்கப்பட்டது.

அதன் பின்னரான சூழலில், சீனாவைக் கண்காணிப்பதற்காக அமெரிக்காவினால் 2017 இல் மீளக் கட்டமைக்கப்பட்ட 'குவாட்' அமைப்புக்கு இலங்கை எவ்வாறு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற விடயங்கள் பற்றியும் தொடர்ச்சியாகவும் விரிவாகவும் ஆராயப்பட்டும் வந்தன.

அதாவது இலங்கையின் பொருளாதாரப் பலவீனங்கள் சீனாவுக்கான தளமாக மாறிவிடும் என்ற அச்சம் அமெரிக்க - இந்திய அரசுகளுக்கு இருந்தன. இதன் காரணமாகவே இலங்கை மீது கூடுதல் கரிசனை கொண்டு பெருமளவு நிதிகளும் வழங்கப்பட்டு வந்தன. பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது இந்தியா சுமார் நான்கு பில்லியன் டொலரை இலங்கைக்கு வழங்கியிருந்தது. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்ற நிதி நிறுவனங்களும் பெருமளவு நிதியை வழங்கியதுடன் எதிர்காலத்திலும் நிதி வழங்குவது தொடர்பாக அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுக்களை இலங்கையோடு நடத்தியிருந்தன.

இந்த நிலையிலேயே இலங்கைக்குத் தொடர்ச்சியாக நிதி வழங்குவது குறித்த சிக்கல் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் ஏற்பட்டுள்ளது. உக்ரைன் மீது அதிக கவனம் செலுத்த வேண்டுமென ஒரு மாதத்துக்கு முன்னர் ஜி-7 நாடுகளும், ஐரோப்பிய நாடுகளும் முடிவெடுத்திருந்தன. அத்துடன் ரஷ்யாவுக்கு எதிரான போருக்காக உக்ரைன் இராணுவத்துக்குப் பெருமளவிலான இராணுவத் தளவாடங்கள், தொழில்நுட்ப உதவிகள் என்பவற்றை மறைமுகமாக வழங்க வேண்டிய அவசியமும் இந்தநாடுகளுக்கு உண்டு.

இந்த நிலையில் இலங்கைக்கு உதவி வழங்கும் திட்டங்களில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் மேற்குலக மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளதைச் சர்வதேச செய்தி ஊடகங்கள் மூலமாக அறிய முடியும். இலங்கைத் தீவில் சமீபத்தில் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் மற்றும் பொருளாதார நிலைமைகள் குறித்து அமெரிக்காவும் இந்தியாவும் கம்போடியாவில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளன.

ஆசியான் நாடுகளின் அமைச்சர்களின் சந்திப்பின் பின்னர் அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்ரனி பிளிங்கன், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோர் சென்ற வியாழக்கிழமை கம்போடியாவில் உரையாடியுள்ளனர்.

இலங்கை, மியான்மர் போன்ற நாடுகளைச் சீனா தனக்குரிய தளமாக மாற்ற முற்படும் சூழலில், இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் முக்கியமான சவால்கள் இருப்பதை ஏற்றுக் கொண்ட இருவரும் இந்த விடயங்கள் குறித்து விரிவாக பேசுவதற்காக விரைவில் தனித்துவமான சந்திப்பு ஒன்றை நடத்தவும் இணங்கியுள்ளனர்.

சீனாவின் உளவுக்கப்பல் இலங்கைக்கு வருவது குறித்து இந்தியா ஏற்கனவே ஆட்சேபம் தெரிவித்துள்ள நிலையில், இலங்கை குறித்துப் பேசவேண்டிய விடயங்கள் இருப்பதாக அன்ரனி பிளிங்கன் கம்போடியாவில் செய்தியாளர்களிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தோ - பசுபிக் பாதுகாப்புக்காக இலங்கையைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அமெரிக்க- இந்திய அரசுகள் தொடர்ந்து செயற்பட்டு வரும் நிலையில், இலங்கைக்குத் தொடர்ந்து நிதியுதவிகள் வழங்கும் விடயத்தில் இரு நாடுகளும் தயக்கம் காண்பிக்கின்ற சூழல் தற்போது உருவாகியுள்ளது.

ஏனெனில், உக்ரைன் நாட்டை நோக்கிய கவனம் மற்றும் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சமீபகால நகர்வுகள், இலங்கைக்குத் தொடர்ந்து நிதியுதவி வழங்கும் விடயத்தில் அமெரிக்க- இந்திய அரசுகளைக் கொஞ்சம் பின்வாங்கவே வைத்திருக்கின்றன.

அத்துடன் தாய்வான் நீரிணைப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்றமான நிலைமையும், அல் - குவைதா இயகத்தின் தலைவர் அய்மான் அல் ஜவாஹிரி ஆப்கானிஸ்தானில் கடந்த வாரம் கொல்லப்பட்டதனால், அமெரிக்க மக்கள் , இஸ்லாமியத் தீவிரவாத இயக்கங்களால் இலக்குவைத்துத் தாக்கப்படும் ஆபத்துக்கள் ஏற்படும் என்ற முன் எச்சரிக்கைகள் போன்ற காரணங்களுமே மேற்கு நாடுகளின் இலங்கை மீதான கவனத்தைக் குறைத்துள்ளன.

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம், அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலில் மூளையாகச் செயற்பட்டவர் தான் அய்மான் அல் ஜவாஹிரி. ஆகவே அவருடைய மரணத்தின் பின்னரான சூழலில் அமெரிக்கா மீது பழிவாங்கும் வகையிலான தாக்குதல்கள் நடத்தப்படக்கூடும் என்ற எச்சரிக்கையை அமெரிக்கா தனது மக்களுக்கு சென்ற வியாழக்கிழமை அறிவித்துள்ளது.

எனவே இவ்வாறான நிலைமைகளில் இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளுக்கு உதவியளிப்பது பற்றிய சிந்தனைகள் ஐரோப்பிய மற்றும் மேற்குலக நாடுகளுக்குக் குறைவடைந்து வருகின்றமை பகிரங்கமாகவே தெரிகின்றது.

ஆப்கானிஸ்தானில் ஆட்சி புரியும் தலிபான்கள் பாகிஸ்தான் ஊடாக வட இந்திய நிலப் பரப்புக்குள் ஊடுருவலாம் அல்லது தலிபான்களைப் பயன்படுத்தி பாகிஸ்தான் ஊடுருவலாம் என்ற அச்சத்தில் வட இந்தியப் பாதுகாப்பு விடயங்களில் இந்தியாவும் கூடுதல் கவனம் செலுத்துகின்றது.

அத்துடன் ரஷ்ய- உக்ரைன் போரினால் இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகளில் பொருளாதார நெருக்கடிகள் நாளுக்கு நாள் அதிகரித்தும் வருகின்றன. இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உதவியளித்த பங்களாதேஷ் கூட சர்வதேச நாணய நிதியத்திடம் நான்கு பில்லியன் டொலரை அவசர உதவியாகச் சில நாள்களுக்கு முன்னர் கோரியுள்ளது.

பாகிஸ்தான், மியான்மர் போன்ற நாடுகளும் சர்வதேச நாணய நிதியத்திடம் கூடுதல் நிதிகளைக் கோரியுள்ளன. உலக வங்கியும் இந்த நாடுகளுக்கு உதவியளிப்பது தொடர்பாகப் பரிசீலித்து வருகின்றது. ஆகவே இதன் பின்புலத்தில். இலங்கைக்கு மாத்திரம் சர்வதேச நாணய நிதியமோ, உலக வங்கியோ தேவையான நிதிகளை வழங்க முடியாதவொரு அபாயம் ஏற்பட்டுள்ளது.

மேற்படி சர்வதேச நெருக்கடிகள், புவிசார் அரசியல் போட்டிகளில் மேற்குலக மற்றும் ஐரோப்பிய நாடுகள் சிக்குண்டுள்ள நிலையில், சீனா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளுடன் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் வர்த்தகச் செயற்பாடுகளையும் அதன் மூலம் பெறப்படும் வருமானத்தின் அளவுகளையும் சமநிலையில் வைத்திருக்க வேண்டிய கட்டாயச் சூழலும் உருவாகியுள்ளது.

சீனா, ரஷ்யா போன்ற நாடுகளுடன் அமெரிக்க போன்ற மேற்குலக நாடுகள் புவிசார் அரசியல் போட்டியில் ஈடுபட்டாலும் -அதாவது தாய்வான் மீதான சீன அரசின் ஆக்கிரமிப்புக்கு எதிராக அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் இணைந்து செயற்பட்டாலும்- சீனாவுடன் அந்த நாடுகள் மேற்கொண்டு வரும் வர்த்தகச் செயற்பாடுகளை முற்று முழுதாகத் துண்டித்துவிட முடியாது. இதேபோன்று ரஷ்யாவின் ஆக்கிரமிப்பில் இருந்து உக்ரைனைக் காப்பாற்ற மேற்குலக மற்றும் ஐரோப்பிய நாடுகள் முற்பட்டாலும், ரஷ்யாவுடன் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் வர்த்தகச் செயற்பாடுகள், வர்த்தகப் பரிமாற்றங்கள் போன்றவற்றை முற்று முழுதாகத் துண்டித்துவிட முடியாது.

ஒன்றுக்கொன்று தங்கி வாழும் பொருளாதார செயற்பாடுகளும், அதற்கான ஒப்பந்தங்களும் செய்யப்பட்டுள்ள நிலைமையில், எடுத்த எடுப்பிலேயே சீனா மற்றும் ரஷ்யா ஆகியவற்றுடன் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளும் ஐரோப்பிய நாடுகளும் மற்றும் இந்தியாவும் மோதிவிட முடியாது என்பதே யதார்த்தம்.

இந்த இடத்திலேதான் இந்தியா மூலம் இலங்கையைக் கையாண்டு வரும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக மற்றும் ஐரோப்பிய நாடுகள், இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளுக்கான உடனடித் தீர்வுக்குரிய நிதியை வழங்குவதிலும் கடந்த சில நாள்களாகப் புதியதொரு நெருக்கடியைச் சந்தித்திருக்கின்றன.

இதனாலேதான் இலங்கையோடு சர்வதேச நாணய நிதியம் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து அதற்குரியவாறு நிதியைப் பெற வேண்டுமென்ற ஆலோசனைகள் முன்மொழியப்பட்டுள்ளன. ஆனால் அந்த ஒப்பந்தத்தின் மூலம் இலங்கைத்தீவு மக்கள் உடனடியாக நன்மையைப் பெற்றாலும், எதிர்காலத்தில் பல நெருக்கடிகளை எதிர்கொள்ளும் ஆபத்துக்கள் உண்டு.

ஒப்பந்தங்களைச் செய்வதற்கு அமெரிக்க- இந்திய எதிர்ப்புச் சக்திகள் இடமளிக்குமா என்பதும் சந்தேகமே. உள்ளக வருமானங்களையும் ஏற்றுமதி வருமானங்களையும் அதிகரிக்கக்கூடிய சிங்கள இனவாதமற்ற ,பொருளாதார வலுவும், செயற்றிறனும் இலங்கையிடம் இல்லை.

ஆகவே ரஷ்யா , சீனாவை நோக்கிய வல்லாதிக்க நாடுகளின் புவிசார் அரசியல் போட்டிக்குள் இலங்கையைச் சிக்கவிடாமல் ரணில் விக்கிரமசிங்க தனது இராஜதந்திர உத்தியால் காப்பாற்றினாலும், பொருளாதார நெருக்கடிச் சிக்கலில் இருந்து இலங்கை தப்பிக்க முடியாத ஆபத்துக்களே விஞ்சிக் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழுத்தை நெரிக்கும் சீனா

ந.பரமேஸ்வரன்

யுவான் வாங் - 5 சீனக்கப்பலின் வருகை ரணிலின் வெளியுறவுக்கொள்கைக்கு ஒரு அமிலப்பரிசோதனை என்று சொல்லலாம். 'யுவான் வாங் - 5 என்ற சீனக்கடற்படைக்குச் சொந்தமான கப்பல் இம்மாதம் 11 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை அம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஆய்வுப்பணிகளை மேற்கொள்ளவுள்ளது. இதன் மூலம் சீனா, இலங்கையில் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்த விரும்புகிறது என்ற செய்தி இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளது.

இந்தக்கப்பலின் வருகையை உன்னிப்பாக அவதானித்து வருவதாக இந்தியா தெரிவித்துள்ளது. 2014 ஆம் ஆண்டு சீன நீர்மூழ்கிக்கப்பல்கள் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்து சென்ற பின்னர், சீனக்கப்பல்கள் எதுவும் இலங்கைக்கு வரவில்லை. இந்தக் கப்பலின் வருகை குறித்து அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய நகைச்சுவை ஒன்றை அவிழ்த்து விட்டுள்ளார். இந்தக் கப்பல் எரிபொருள் (Refuelling) நிரப்புவதற்காகவே அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருவதாகவும் வேறு எந்த நோக்கமுமில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார். எரிபொருளுக்கு மக்கள் நாள் கணக்கில் வரிசையில் காத்து நின்று காலத்தை விரயம் செய்துகொண்டிருக்கும் ஒரு தருணத்தில், கட்டுநாயக்க விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்கு முயற்சிக்கும் விமாமனங்கள் கூட தென்னிந்திய விமான நிலையங்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டுக்கொண்டிருக்கையில், சீனக்கப்பல் எரிபொருள் நிரப்புவதற்குத்தான் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகின்றதாம். பொய் சொன்னாலும் அதைப் பொருந்தச் சொல்ல இந்த அமைச்சர்களுக்குத் தெரியாது போலும்.

இந்தப்பிரச்சினையை இணக்கப்பாட்டின் மூலம் தீர்த்துக்கொள்ளலாமென இலங்கை தெரிவித்துள்ளது. 'நாங்கள் அனைத்து நாடுகளுடனும் நட்புறவைப் பேணவே விரும்புகிறோம்; எந்த அணியுடனும் இணைந்து கொள்ளப்போவதில்லை; எமக்கு எதிரிகள் ஒருவருமில்லை' என ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடன உரையில் தெரிவித்துள்ளார். பலமற்ற வெளியுறவுக்கொள்கை காரணமாக சர்வதேச அரங்கில் பல பிரதிகூலங்களை அனுபவிக்க வேண்டிய நிலை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். சிறிய நாடுகளை ஆக்கிரமிக்கும் வெளியுறவுக் கொள்கை இந்தியாவிடம் இல்லை. வடக்கிலிருந்து சீனாவின் பிரசன்னத்தை அகற்றுவதற்கு இந்தியா அவசர மனிதாபிமான உதவியாக 3.4 பில்லியன் டொலரைச் செலவிட்டுள்ளது.

இந்தக்கப்பல் சீன தேசிய விண்வெளி ஆய்வு நிலையத்தின் (China National Space Administration) கட்டுப்பாட்டிலேயே உள்ளது. என்னதான் ஆய்வுப்பணிகளை மேற்கொள்ளப்போவதாக சீனா தெரிவித்திருந்தாலும் இந்தக்கப்பலை வேவுக்கப்பல் (spy ship) என்றே அமெரிக்கா வர்ணித்துள்ளது. இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள சூழலில், சீனக் கடற்படையின் வேவு பார்க்கும் கப்பல் எதற்காக இலங்கைக்கு வருகிறது என்ற கேள்வி எல்லோருக்கும் எழவேசெய்யும். சீனாவின் கடன்பொறிக்குள் இலங்கை சிக்கிவிட்டதாகவே ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இலங்கைத் தலைவர்களின் தொடர்ச்சியான , மோசமான பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக - திருப்பிச்செலுத்த முடியாத கடன்கள் காரணமாக -சீனாவின் கடன் பொறிக்குள் இலங்கை சிக்கியுள்ளது. இலங்கையின் கையாலாகாத நிலை காரணமாக இந்தக்கப்பல் பலவந்தமாகவே அம்பாந்தோட்டை துறைமுகத்துக்குள் நுழைகின்றது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக் கும் மத்தல விமான நிலைய அபிவிருத்திக்கும் 'வெள்ளை யானைத் திட்டத்தைப் போல, சீனாவிடமி ருந்து கடன்களை பெற்றுக்கொண்டதே காரணம் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை தனது வர்த்தக-இராணுவ நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதே சீனாவின் திட்டம். இந்தக்கப்பலில் இருந்து ஏவுகணைப் பரிசோதனை களைக்கூட மேற்கொள்ள முடியும். 750 கிலோமீற்றர் தூரம் வரை பாயக்கூடிய 200 பாலிஸ்டிக் ஏவு கணைகள் இந்தக்கப்பலில் உள்ளன. தமிழ் நாடு, கேரளா, ஆந்திரா போன்ற தென்னிந்திய நகரங்கள் முழுவதையும் இந்தக்கப்பலில் இருந்து கண்காணிக்கலாம்.

இந்தக்கப்பலில் இருந்து ஒடிசாவிலுள்ள இந்திய ஏவுகணைத் தளத்தை அவதானிக்கலாம். அத்துடன் கூடங்குளம் அணுமின் நிலையத்தையும் கண்காணிக்கலாம். இந்தக்கப்பலின் வருகை தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே , இலங்கை வெளியுறவு அமைச்சர் அலி சப்ரியிடம் இந்தியாவின் அதிருப்தியைத் தெரிவித்துள்ளார். இந்தக்கப்பலின் வருகையானது ஒட்டுமொத்த இந்து சமுத்திரப்பிராந்தியத்துக்கே அச்சுறுத்தல் என இந்தியா தெரிவித்துள்ளது. சீனா கடலுக்கடியிலிருந்து பாலிஸ்டிக் ஏவுகணையை செலுத்திப் பரிசோதித்துப் பார்க்கபோகிறதா? என்ற சந்தேகம் எழுவதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். வரலாற்றில் இல்லாத மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை சிக்கியுள்ள வேளையில் இலங்கையை சீனா மிரட்டி, காரியம் சாதிக்கின்றதா? (blak mail) எனவும் சிலர் கேள்வி எழுப்புகின்றனர். ஒரு ஸ்திரமற்ற ஆட்சி நடைபெறும் வேளையில் இந்தக்கப்பல் இலங்கைக்குள் பிரவேசிப்பது அவ்வளவு பொருத்தமானதல்ல எனவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆயினும் ஜனாதிபதி ரணிலுக்கு இது ஓர் அக்கினிப்பரீட்சை தான். எல்லோரும் கைவிட்ட நிலையில் இந்தியா மட்டுமே எமக்குக் கைகொடுக்கிறது என்று ரணில் சொல்லி வாய் மூட முன்னர் , சீனா தனது பலத்தைக் காட்டத் தொடங்கிவிட்டது. ரணிலை ஒரு நரி என சர்வதேச ஊடகங்கள் கூட வர்ணிக்கின்றன. சீனாவின் இந்தக் கழுத்தை நெரிக்கும் செயற்பாட்டை ரணில் எவ்வாறு கையாளப்போகிறார் என்பது அடுத்த சில நாள்களில் தெரிந்துவிடும்.



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)




# ஒன்பதாந் திகதி...

கள் மட்டுமே தயாராகக் காணப்படுவதாகவும் ஒரு தகவல் உண்டு. அவை அரகலயவின் நிகழ்ச்சி நிரலுக்கு உட்படாத வன்முறைகள் என்று கருதும் ஒரு பகுதி சட்டத்தரணிகளும் உண்டு. அதாவது சட்ட மறுப்பை சட்டக்கண் கொண்டு பார்ப்பது.

ஒரு மக்கள் எழுச்சியின்போது இடம்பெற்ற சம்பவங்களை சட்டக்கண் கொண்டு பார்க்க முடியாது. ஏனென்றால் எல்லா மக்கள் எழுச்சிகளும் சட்ட மறுப்பாகத்தான் தோன்றுகின்றன.எனவே ஒரு மக்கள்திரளின் சட்டமறுப்பு நடவடிக்கையை சட்டத்தின் தராசில் வைத்து நிறுக்க முடியாது. அதை ஒரு சட்டப் பிரச்சினையாக வியாக்கியானம் செய்யவும் முடியாது. அது ஓர் அரசியல் பிரச்சினை. ஆனால் ரணில் விக்கிரமசிங்க அதனை சட்டத்தின் தராசில் வைத்து நிறுக்கிறார். அதற்கு எதிராகச் சட்டத்தரணிகள் அமைப்பு பலமான எதிர்ப்பைக் காட்டவில்லை. அதைச் சட்ட விவகாரமாகச் சுருக்குவது ஒருவிதத்தில் ரணில் வைத்த பொறிக்குள் சென்று விழுவதுதான்.

சட்டத்தரணிகள் மட்டுமல்ல, எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் மத்தியிலும் குறிப்பாக சஜித் அணியினர் மத்தியிலிருந்தும் மேற்படி கைது நடவடிக்கைகளுக்கு எதிராக வலிமையான எதிர்ப்புக் காட்டப்படவில்லை. இந்த விடயத்தில் எல்லா அரசியல்வாதிகளும் ஒரு வர்க்கமாக நின்று சிந்திக்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்களை அழித்த, வீடுகளை எரித்த நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டவர்களை பாதுகாப்பதற்கு எதிர்க்கட்சிகளின் மத்தியிலும் பெரியளவு ஆர்வம் காட்டப்படவில்லை.

இவ்வாறான ஓர் அரசியல் சூழலில் ரணில் விக்கிரமசிங்க அரகலயவை அதன் ஆதரவுத்தளங்களில் இருந்து பெருமளவுக்கு தனிமைப்படுத்தி வருகிறார் என்று தோன்றுகிறது. இந்த அடிப்படையில் தொகுத்துக் கணித்தால் வரும் ஒன்பதாம் திகதி மாபெரும் எழுச்சி ஒன்றுக்கான வாய்ப்புகளைத் தடுப்பதற்காக ரணில் கடுமையாக உழைக்கிறார்.

அரகலயக்காரர்கள் கூறுகிறார்கள் தற்பொழுது போராட்டம் ஓய்ந்து போய்விட்டதான ஒரு தோற்றம் வெளித்தெரிவது உண்மைதான் என்று. ஆனால் அரகலயவின் பேரெழுச்சிகளை தொகுத்துப் பார்த்தால் இடைவெளிகள் விட்டு மக்கள் குறிப்பிட்ட தினங்களில் தெருக்களில் லட்சக்கணக்கில் திரண்டு வந்தார்கள். இப்பொழுதும் அரகலய சோர்ந்து போய்விட்டதாக தோன்றினாலும் அது மறுபடியும் ஒருநாள் மக்களை வீதிகளுக்குக் கொண்டுவரும் என்று அவர்கள் கூறுகிறார்கள். மஹிந்தவை அகற்றியது அரகலய 1.0 என்றும் ,பஸிலை அகற்றியது அரகலய2.0 என்றும்,கோத்தாவை அகற்றியது அரகலய 3.0 என்றும், இனி ரணிலை அகற்றுவதும் முறைமையை மாற்றுவதும் அரகலய 4.0 என்றும் அவர்கள் அழைக்கிறார்கள்.

ஆனால் கடந்த மூன்றுமாத காலத்துக்கும் மேலான தென்னிலங்கை அரசியற் களத்தைத் தொகுத்துப் பார்த்தால்,தெளிவான ஒரு பிரிகோட்டைக் காணமுடிகிறது. கோத்தாவுக்கு முன்,கோத்தாவுக்கு பின் என்பதே அது. கோத்தாவுக்கு பின்னரான அரகலய பெருமளவுக்கு தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறது.சோர்ந்துபோய்க் காணப்படுகிறது. கைது நடவடிக்கைகளுக்கு எதிராக அண்மைய வாரங்களாக ஒழுங்கு செய்யப்படும் போராட்டங்கள் பேரெழுச்சிகளாக அமையவில்லை.

வரும் ஒன்பதாந்திகதியும் அரசியல்வாதிகளுக்கு ஒரு கெட்ட நாளாக மாறுவதைத் தடுக்க ரணில் முயற்சிக்கிறார்.69 லட்சம் வாக்குகளால் வெற்றி பெற்ற ராஜபக்சக்களைத் துரத்திய ஒரு போராட்டத்தை, சுமார் 30,000 வாக்குகள் பெற்ற ஒருவர் முறியடிக்கப் போகிறாரா? ஒன்பதாம் திகதி பற்றிய அரசியல் எண்கணிதத்தைப் பொய்யாக்குவதில் ரணில் வெற்றி பெறுவாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வரலாறு

1505-1948 வரை

ந.பரமேஸ்வரன்



**ஜூன் 7 , 1880**
**உடுப்பிட்டி .**

நான் எனது ஜன்னலுக்கு அருகில் அமர்ந்திருந்து படிப்பது வழக்கம். புதிய ஐரோப்பிய உடை அணிந்த வெள்ளைத்தோல் அம்மாக்கள், இந்த மண்ணிற சிறுவர், சிறுமிகளுக்கு வியப்பாக இருந்திருக்கவேண்டும்.

ஒரு நாள் எனது அறை வாசலில் சிறுவர்கள் செருமும் சத்தம் கேட்டது. இவர்கள் இப்படித்தான் எங்களை அழைக்க விரும்பினால் வாசலில் வந்து நின்று செருமுவார்கள் அல்லது இருமுவார்கள்; கதவில் தட்டி எமக்கு தொல்லை கொடுக்கக்கூடாது என்பது இவர்களது அபிப்பிராயம். நான் கதவைத்திறந்து பார்த்தபோது இரு சிறிய முகங்கள் வேலிக்கருகில் தெரிந்தன.

இந்தச்சிறுவர்கள் அமெரிக்காவிலோ, இங்கிலாந்திலோ உள்ள சிறுவர்களைப் போல் உடை அணிந்தவர்களல்லர். இங்குள்ள சிறுவர்களனை வரும் இடுப்பில் ஒரு துணியை மட்டும் அணிந்திருப்பார்கள். தலைமயிரை இடது பக்க காதினருகே குடுமியாக முடிந்திருப்பார்கள். இவர்களுடைய அழகிய உடம்பும் முகமும் இவர்களது நிறத்தைப்பற்றியோ உடையைப்பற்றியோ சிந்திக்க விடாது.

'அம்மா, அம்மா ! நாங்கள் ஆண்கள் பாடசாலை முற்றத்திலிருந்து படிக்க விரும்புகிறோம்' என்றனர்.

'நல்லது நீங்கள் ஏன் இதைப்பற்றி ஆசிரியருடன் கதைக்கவில்லை?' என்று கேட்டேன். அதற்கு அவர்கள் நாங்கள் தாழ்த்தப்பட்ட சாதியைச்சேர்ந்தவர்கள், நாங்கள் முற்றத்திற்கு வரக்கூடாது என்றனர்; அவர்களின் முகத்தில் வேதனை தென்பட்டது.

இங்கு சாதி ரீதியாகவே தொழில்கள் மேற்கொள்ளப்படுகின்றன. உதாரணமாக தச்சனின் மகன் தச்சுவேலை தான் செய்ய வேண்டும்; தச்சனின் மகன் தச்சனின் மகளைத்தான் திருமணம் செய்ய வேண்டும். கலப்புத்திருமணங்கள் கிடையாது. இவர்கள் சமமாக உட்கார்ந்து உணவருந்த அனுமதிக்கப்படுவதில்லை; சமூகத்தில் இணைத்துக்கொள்ளப்படுவதுமில்லை. பிறந்த நாள் முதல் இறக்கும் வரை இப்படியே தான் இவர்களது வாழ்க்கை ஓடுகிறது . உயரமான பருத்த பிராமணர்கள் உயர்ந்த சாதி. இவர்கள் எந்த வேலையும் செய்வதில்லை . அதே போல் தான் விவசாயிகளும்.

> பகலில் வீதியில் நடமாடுவதற்குக் கூட இவர்களுக்கு சுதந்திரம் இருக்கவில்லை. இவர்கள் வீதியால் செல்லும் போது உயர்சாதியினர் யாராவது எதிரே வந்தால் ஒதுங்கி வழிவிட வேண்டும். உயர்சாதியினரில் முட்டினால் அழுக்கு.

தச்சர், கொல்லர், பொற்கொல்லர், சலவைத்தொழிலாளர் ஆகியோர் இவர்களுடைய சேவகர்கள். மரம் ஏறுபவர்களும், அவர்களுக்குக்கு துணி துவைப்பவர்களும் கடை நிலையில் உள்ளனர்; இவர்களுக்கு அடுத்தபடியாக நெசவாளர்கள், கடைசியில் பறை மேளம் அடிப்பவர்களும் அவர்களுக்குக்கு துணி துவைப்பவர்களும் உள்ளனர். என்னிடம் வந்த சிறுவர்களிருவரும் பறை மேளம் அடிப்பவர்களின் துணி துவைக்கும் சாதியைச்சேர்ந்தவர்கள். ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் இவர்களின் நிலை மிகவும் மோசமாக இருந்தது. பகலில் வீதியில் நடமாடுவதற்குக் கூட இவர்களுக்கு சுதந்திரம் இருக்கவில்லை. இவர்கள் வீதியால் செல்லும் போது உயர்சாதியினர் யாராவது எதிரே வந்தால் ஒதுங்கி வழிவிட வேண்டும். உயர்சாதியினரில் முட்டினால் அழுக்கு.

சிவனின் உருவத்தை வைத்துக் கொண்டு எவ்வாறெல்லாம் மனிதர்களை இழிவு படுத்துகிறார்கள். பிரித்தானியரின் ஆட்சியிலேயே இவர்களுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. இருந்தும் இவர்கள் ஒடுக்கப்படுகிறார்கள்.

மரம் ஏறுபவர்கள் ஒரு துண்டை மட்டுமே அணிந்திருப்பார்கள் . அதை சலவை செய்ய வேண்டுமானால் சலவைத்தொழிலாளியிடம் கொடுக்க வேண்டும். சலவைத்தொழிலாளி அதைச் சலவை செய்து திருப்பிக் கொடுக்கும் வரை சலவைத்தொழிலாளி வழங்கும் மாற்றுத்துணியைத்தான் இவர்கள் அணிந்திருக்க வேண்டும்; பொதுவாக இவ்வாறு தான் நடைபெறுகிறது. துணி துவைப்பவர்கள் முழங்காலளவுதண்ணீரில் நின்றுதலைக்கு மேலால் உடைகளை அடித்து துவைத்து. கும்மி ,வீதியோரத்தில் மணலிலோ கல்லிலோ உலர விடுகின்றனர். இவர்களுக்குப் பணம் வழங்குவது அரிதாகவே காணப்படுகிறது; பொதுவாக சோறு கறி மற்றும் உணவுகள் தான் வழங்கப்படுகின்றன. என்னிடம் வந்த சிறுவர்களில் ஒருவனின் பெயர் கசப்பு .மற்றவனின் பெயர் கட்டைப்பயல் .அடுத்த நாள் குளித்து அழகாகதலைசீவிக் கொண்டு வந்தனர். நான் எட்டிப்பார்த்த போது அவர்களிருவரும் என்னை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

நான் அவர்களையும் அழைத்துக் கொண்டு பாடசாலைக்குச்சென்றேன்; அவர்களிருவரும் உயர்சாதியினருடன் அமர்ந்து கல்வி கற்பதையிட்டு மிகுந்த அச்சத்துடனேயே வந்தனர். அடுத்த நாள் உயர்சாதி மாணவர்கள் சிலர்அவர்களில் முட்டாமல் இருப்பதற்காக பாயுடன் வந்தனர்.

நான் கசப்புவையும் கட்டைப்பயலையும் அழைத்துச்சென்று ஏனைய மாணவர்களுடன் அமர்த்திய போது அவர்கள் 'சீச்சீ' என்று அவமானப்படுத்தினர் . ஒருவன் காறித்துப்பினான்.

அடுத்த நாள் இவர்களிருவரையும் பாடசாலையை விட்டு நீக்குமாறு அச்சுறுத்தல் வந்தது; மணியகாரன் இவர்களிருவரையும் பாடசாலையை விட்டு நீக்காவிட்டால் தான் தனது பிள்ளையை பாடசாலைக்கு அனுப்ப மாட்டேன் என அறிவித்தார். ' இவர்களெல்லாம் கல்வி கற்றால் எமது துணிகளை யார் துவைப்பது?' என்றும் கேட்டனர். நான் அவர்களிருவரையும் தனியே வைத்து கற்பிப்பது எனத் தீர்மானித்தேன்.

(வரலாறு நீளும்)

# ஊர்ப்புதினம்

இராகவன்

51



வசந்தியக்கா வீட்டிலதான் (மாப்பிளை வீடு) எழுத்து நடந்தது. பொம்பிளை கால்மாறி வீட்டுக்கு வந்தாப்போல எல்லோரும் எழுத்துக்கு வெளிக்கிடுற அலுவலில நிண்டதால பொம்பிளை தனிச்சுப்போனா. அவவைக் கொண்டந்து வசந்தியக்கா வீட்டு மாலுக்குள்ளை ஒரு கதிரையில இருத்திவிட்டினம். வசந்தியக்கா வீட்டு மால் பொதுவான மாலுகள் மாதிரியில்லை. சரியான வித்தியாசம். பொதுவாய் மால் எண்டால் வீட்டுக்குப் பிறிம்பாயிருக்கும். பனையோலை அல்லது கிடுகால மேஞ்சிருப்பினம். நிலத்தைச் சாணத்தால மெழுகியிருப்பினம். சில இடத்தில நிலத்துக்குச் சீமெந்தும் போட்டிருப்பினம். ஆனால் வசந்தியக்கா வீட்டுமால் வீட்டோடையே சேர்ந்திருந்தது. அதால ஓட்டுக்கூரை. ஆனால் நிலம் போடாமல் வெள்ளை மணல்தான் பரவியிருக்கும். எங்கட இன் போர்க்கேம் பிளேக் கிறவுண்ட் அதுதான். அதுக்குள்ள கடுங்கோடை காலத்தில போயிருந்தால் ஏசி பூட்டின மாதிரி சும்மா குளுகுளெண்டிருக்கும்.

ம்... சரி நாங்கள் இப்ப விசயத்துக்கு வருவம். பொம்பிளை தனிய எண்டாப் போல வசந்தியக்கா என்னைக் கூப்பிட்டு 'பஞ்சுமாமிக்குத் துணைக்கு நில்லடா!' எண்டு பொம்பிளைக்குப் பக்கத்தில விட்டுட்டுப் போட்டா. எனக்கெண்டால் சரியான வெக்கமாப் போச்சு. பொம்பிளை ஒரு மகாராணி மாதிரிக் கதிரையிலயிருக்க நான் சேவகன் மாதிரி அவவுக்குப் பின்னால பேசாமல் பறையாமல் நிண்டன். பொம்பிளை =அதுதான் பஞ்சுமாமி (செல்வராணியக்கா) =சரியான முசுப்பாத்திக்காறி. "ம்... பஞ்சுமாமிக்கு இந்தக் குஞ்சையே துணைக்குவிட்டிருக்கு. ஆளைப்பார் நெத்தலிப் பயில்வான் மாதிரி. என்னைக் கள்ளன் கொண்டு போனால் என்னடா செய்வாய்? சண்டை பிடிப்பியோ? இல்லாட்டில் சன்னதமாடுவியோ?" எண்டு கேட்டா.

எனக்கு என்ன சொல்லுறதெண்டு தெரியேல்ல. பேசாமல் அசட்டுச் சிரிப்போட நிண்டன். "இதென்ன தாலியக்கட்டு? ஒரு சிரிப்பு நடேசுவைக் கொணந்து எனக்குத் துணைக்கு விட்டிருக்குதுகள். கோதாரிவிழ. கள்ளன், காடன் வந்தாலும் இவன் இப்படியே 'சிரிச்சுக் கொண்டு நிக்க அவங்கள் என்னைத் தூக்கிக் கொண்டேல்லே போப்போறாங்கள்.

பிறகு பஞ்சுமாமியுமில்லை குஞ்சுமாமியுமில்லை" எண்டு அவா நக்கலடிக்க, எனக்கிப்ப சரியான சங்கையீனமாப் போச்சு. "குஞ்சு! இண்டைக்கு நான்தானடி பொம்பிளை! [illegible] எண்டு கேட்டா. நான் [illegible] தலை [illegible] பின்னுக்கு நிக்கிறாய்?" எண்டு என்ர கையைப் பிடிச்சு இழுத்துத் தனக்கு முன்னால விட்டா. நான் தலையைக் குனிஞ்சு கொண்டு நிண்டன். "ஏன் குஞ்சு எனக்குமாய்ச் சேர்த்து நீ வெக்கப்படுகிறாய்?" எண்டு கேட்டா. அப்ப பாத்துமழை துமிக்கத் தொடங்கிச்சுது. எனக்குச் சாதுவாய்த் துணிவு வந்திட்டுது.

"அந்தா மாப்பிளை வந்திட்டார்" எண்டு நான் சொல்ல அவ திடுக்கிட்டுப் போய் "எங்கையடா? எங்கை?" எண்டு சுற்றுமுற்றும் திரும்பித் திரும்பிப் பாத்தா. "நான் மழையைச் சொன்னனான்" எண்டன். "போடா! ஊமைக்கு சும்பா" எண்டு செல்லமாய் அடிக்கக் கையோங்கினா அதுக்கிடையில வசந்தியக்காவும் மாலுக்க வர நான் வெளியில ஓடியந்திட்டன்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மருத்துவ வரலாறு: 7

# ஆபிரகாம் லிங்கனது மறைவும் நேத்தன் உவோட்டின் நினைவுகளும்



மருத்துவர் நேத்தன் உவோட் [Dr. Nathan Ward M.D.]

1860.11.24 அன்று மருத்துவர் உவோட்டின் உடல் கடலிலே நல்லடக்கம் செய்யப்பட்டது. எனினும் மருத்துவர் உவோட்டின் மனைவி ஹனா . யாழ்ப்பாணத்துக்கான பயணத்தைத் தொடர்ந்தார். ஹனா 5 வருடங்கள் யாழ்ப்பாணத்தில் பணியாற்றியபின் அமெரிக்கா திரும்பினார். 1884 ஆம் ஆண்டு ஹனா இவ்வுலக வாழ்வை நீத்தார்.


பா. துவாரகன்

மருத்துவர் நேத்தன் உவோட்டுக்கு 4 பிள்ளைகள்; மூவர் ஆண்கள், ஒருவர் பெண். இவர்கள் அனைவரும் 1834- 1842 காலப்பகுதியில் வட்டுக்கோட்டையிலே பிறந்தார்கள். பெண் பிள்ளை ஒரு வயதாகும் போது இயற்கை எய்தியது. 1842 இல் பிறந்த இளையமகன் சாமுவேல் ரெட் உவோட் வொஷிங்டனில் உள்ள ஜோர்ஜ் ரவுண் பல்கலைக்கழகத்தில் பயின்று 1868 இல் மருத்துவரானார் (Physician).

1865 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் திகதி அமெரிக்க வரலாற்றில் துயர்மிக்க ஒரு நாள். அமெரிக்காவில் உள்நாட்டுப் போரின் போது அமெரிக்காவை வழிநடத்தி, அமெரிக்காவில் நிலவிய அடிமை முறைக்கெதிராகக் குரல்கொடுத்த, அமெரிக்காவின் 16 ஆவது ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன், வொஷிங்டன் டி.சி.யிலுள்ள போட்சினது நாடக அரங்கிலே 'Our American Cousin' என்ற நகைச்சுவை நாடகத்தைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது ஜோன் உவில்க்ஸ் பூத் என்ற நடிகரால் தலையில் பின்புறம் சுடப்பட்டார். மறுநாள் லிங்கனது உயிர் பிரிந்தது. ஆபிரகாம் லிங்கன் சுடப்பட்ட அன்று யாழ்ப்பாணத்தில் பிறந்தவரும் மருத்துவர் நேத்தன் உவோட்டின் இளையமகனுமாகிய மருத்துவர் சாமுவேல் ரெட் உவோட்டும் இந்த நாடகத்தைப் பார்வையிட, போட்சினது நாடக அரங்கில் பார்வையாளர் வரிசையில் இருந்தார்.







ஆபிரகாம் லிங்கனது கையெழுத்து : கணித அப்பியாசப் புத்தகம் 1824-1826.

## 1846 இல் யாழ்ப்பாணத்தை தாக்கிய கொலரா நோய்

தற்போது வடமாகாணத்தில் உள்ள கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா முதலான மாவட்டங்களும் ஏனைய மாகாணங்களின் சில பகுதிகளும் 1846 இல் யாழ்ப்பாண நிர்வாக அலகின் கீழேயே இருந்தன. 1846 இல் யாழ்ப்பாணத்தை கொலரா நோய் மிகக் கடுமையாகத் தாக்கியது. 10,000 பேர் வரையில் கொலரா நோயினால் உயிரிழந்தார்கள். கொலரா நோய் தொடுகையின் மூலம் பரவும் என்ற அச்சம் மக்களிடையே காணப்பட்டதால் நோயாளிக்கு அருகே செல்லவும் அவர்களைப் பராமரிக்கவும் பொதுமக்கள் தயங்கினர். இதனால் அதிகமான இறப்புக்கள் ஏற்பட்டன.

மருத்துவர் நேத்தன் உவோட் யாழ்ப்பாணத்திலே கொலராவினது தாக்கத்தைப் பற்றி தனது குறிப்பேட்டிலே பின்வருமாறு எழுதியுள்ளார்:

"கொலராவை மருத்துவத்தின் மூலம் வெற்றிகொள்ளுதல் என்பது பாதிக்கப்பட்டவர்கள் மருந்தைப் பெற்றுக்கொள்ள ஆரம்பிக்கும் காலத்தைப் பொறுத்தது. பல சந்தர்ப்பங்களில் நோயாளர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஓரிரு மணிநேரங்களில் இறப்புக்கள் சம்பவித்தன. இறப்புக்கள் நிகழ்ந்த சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு உரிய தேவைகள் எவையுமே கவனிக்கப்படவில்லை என்பதை அறிந்துகொண்டேன். நோயின் ஆரம்பநிலையில் மருந்து கொடுக்கப்பட்டவர்களும், அதனை உரியமுறையில் பின்பற்றியவர்களும் இறக்கின்ற வீதம் குறைவடைந்தது. இதனால் பெருமளவானோர் காப்பாற்றப்பட்டனர். அநேகமானோர் உயிரிழக்கும் கடைசி நேரத்திலேயே மருத்துவ உதவியை நாடினர். மருந்தை அருந்துவதற்குச் சம்மதித்தனர். ஒரு கிராமத்தில் 28 பேர் கொலராவினால் பாதிக்கப்பட்டனர். அவர்களில் 14 பேர் மருந்தைப் பெற்றுக் கொள்ள சம்மதித்தனர்; இவர்களில் 12 பேர் காப்பாற்றப்பட்டனர். அதேவேளை 14 பேர் மருத்துவ உதவியைப் பெற்றுக்கொள்ள மறுத்தனர்; இவர்களில் 12 பேர் உயிரிழந்தனர். எனது வழிகாட்டலின் கீழ் யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களிலும் பணியாற்றிய உதவியாளர்கள், 900 பேர்வரையில் கொலராவால் பாதிக்கப்பட்டமையை அறிவித்தனர்; இவர்களில் மருந்து பெற்றுக்கொண்ட 600 பேர் காப்பாற்றப்பட்டனர்; 300 பேர் உயிரிழந்தனர்."

மருத்துவர் நேத்தன் உவோட் 13 வருடங்கள் யாழ்ப்பாணத்திலே சேவையாற்றினார். 1846 இல் நேத்தன் உவோட்டும் அவரது மனைவியும் நோய்வாய்ப்பட்டனர். இதனால் அமெரிக்காவுக்குத் திரும்பினர். இன்று போல் விமான சேவைகள் இல்லாத அன்றைய நாளில் நோய்வாய்ப்பட்டவிடத்து மருத்துவ வசதியைப் பெற்றுக்கொள்ள பாய்மரக் கப்பலிலே அமெரிக்கா செல்வதற்குக் குறைந்தது 4 மாதங்களாவது தேவை. அமெரிக்கா திரும்பிய நேத்தன் உவோட் 'வெர்மான்ட்' இலிலுள்ள பெர்லிங்டனில் மருத்துவராகக் கடமையாற்றி வந்தார். இந்தக்காலப்பகுதியில் அவர் கிறிஸ்துவின் செய்தியைப் பிரசங்கிக்கும் அனுமதிச்சான்றிதழையும் இறைதூதர் என்ற நியமனத்தையும் பெற்றுக் கொண்டார். 1859 இல் உவோட் நோயிலிருந்து முற்றாக விடுபட்டார். இதனால் மீண்டும் யாழ்ப்பாணம் சென்று கடமையாற்ற விரும்பி பிறதேசங்களுக்கு தொண்டர்களை அனுப்பும் அமெரிக்க மிஷன் சங்கத்துக்கு (ABCFM American Board of Commissioners for Foreign Missions) விண்ணப்பித்தார்.

## கடலிலே கரைந்த மருத்துவர் நேத்தன் உவோட்டின் 2 ஆவது பயணம்

மருத்துவர் நேத்தன் உவோட் அமெரிக்கா திரும்பியதும் மருத்துவர் கிறீன் 1847 இல் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து தனது மருத்துவப் பணியை பண்டத்தரிப்பிலே ஆரம்பித்தார். கிறீன் 1848 இல் மானிப்பாயில் மருத்துவமனையையும் மருத்துவக் கல்லூரியையும் ஆரம்பித்து மாணவர்களுக்கு மருத்துவப் பயிற்சியை வழங்கி வந்தார். 1857 இல் மருத்துவர் கிறீன் அவர்களுக்கு காசநோய் அறிகுறிகள் காணப்பட்டதால் அமெரிக்கா திரும்பினார். உடல்நலம் தேறியதைத் தொடர்ந்து கிறீனும் மீண்டும் யாழ்ப்பாணம் புறப்படத் தயாரானார்.

இம்முறை அமெரிக்க மிசன் (ABCFM) கிறீனை தென்னிந்தியாவிலுள்ள மதுரைக்கும், உவோட்டை யாழ்ப்பாணத்துக்கும் அனுப்பத் தீர்மானித்தது. இவ்விடயம் கிறீனுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை. உவோட் ஒரு பிரசங்கியாக தகுதிபெற்றிருந்தார். உவோட் யாழ்ப்பாணத்தில் கிறிஸ்துவின் செய்தியை பிரசங்கிக்க விரும்பினார்.

ஆனால் கிறீனைப் போன்ற தமிழ்ப்புலமை அவரிடம் இல்லை. கிறீன் மதுரையில் தனக்கு உடல்நிலை பாதிப்பு ஏற்படும் என்று கருதி வெப்பமான காலப்பகுதியில் பழனி மலையில் தங்குவதற்கு அனுமதிக்கும் பட்சத்தில் மதுரையில் பணியாற்றுவதற்குச் சம்மதித்தார்.

மருத்துவர் உவோட் மனைவியுடன் 1860 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி போஸ்ரன் துறைமுகத்திலிருந்து 'கடலரசன்' (Sea King) என்ற பாய்மரக் கப்பலில் யாழ்ப்பாணம் நோக்கிய தனது 2 ஆவது பயணத்தை ஆரம்பித்தார். கடற்பயணம் ஆரம்பமாகி 3 வாரங்கள் கழிந்த நிலையில் உவோட்டுக்கு மாரடைப்பு ஏற்பட்டது. கடலிலே மருத்துவர் உவோட்டின் உயிர் பிரிந்தது.

1860.11.24 அன்று மருத்துவர் உவோட்டின் உடல் கடலிலே நல்லடக்கம் செய்யப்பட்டது. எனினும் மருத்துவர் உவோட்டின் மனைவி ஹனா , யாழ்ப்பாணத்துக்கான பயணத்தைத் தொடர்ந்தார். ஹனா 5 வருடங்கள் யாழ்ப்பாணத்தில் பணியாற்றியபின் அமெரிக்கா திரும்பினார். 1884 ஆம் ஆண்டு ஹனா இவ்வுலக வாழ்வை நீத்தார்.

ஹனா வூட்வோட், கடற்பயணத்தின் போது மறைந்த தனது கணவர் மருத்துவர் உவோட்டின் இறுதிநாள்களைப் பற்றி விவரித்த பகுதிகள் பின்வருமாறு:

"எனது கணவரது மறைவு எதிர்பாராத ஒன்று; திடீரென நிகழ்ந்தது; ஆனால் சிலநாள்களாக சகுனங்கள் தென்பட்டன. அவரது மறைவுக்கு ஒருவாரத்துக்கு முன்னர் வரை அவர் நலமுடன் இருந்தார்; மிகுந்த மனோவலிமையுடன் காணப்பட்டார். இறப்பதற்குச் சில நாள்கள் முன்புதான் அவர் துன்பப்பட்டார். இது சமிபாட்டுக் குறைவினால் ஏற்பட்டது என்று கருதினோம். மருந்துகள் உள்ளெடுத்ததும் சுகமடைந்தார். கப்பலின் மேற் தளத்துக்கு அவரால் செல்லக் கூடியதாக இருந்தது. மிசனரி ஒருவருடன் கப்பலின் மேற்றளத்தில் நின்றவாறு உரையாடினார். அப்போது உடல் குளிர்வதை அவரது மிசனரி நண்பருக்குத் தெரிவித்தார்; தொடர்ந்து இருதயத்தில் கடுமையான வலி ஏற்பட்டதை முறையிட்டார். வழமையான மருந்துகளை எடுத்துத் தேறினார்.


இறப்பதற்கு முதல்நாள் அவர் மிக மகிழ்ச்சியாகக் காணப்பட்டார். அவர் மிக நலமுடன் இருப்பதாக நான் ஊகித்தேன். ஆனால் இருதயத்தில் ஏற்பட்ட வலி முற்றாக நீங்கவில்லை என்பதைச் சனிக்கிழமை காலையில் தெரிவித்தார். கடல்மீது நிலவொளி படர்ந்திருந்த ஒரு மாலைப் பொழுது; கப்பலின் மேற் தளத்தில் அவர் என் அருகில் இருந்தார். பரந்த கடலில் வீசிய பசுந் தென்றற் காற்று மனதுக்கு இதமானதாகவும் இலங்கையில் வீசும் தென்றலை நினைவூட்டுவதாகவும் அவர் தெரிவித்தார். சிறிது நேரத்துக்குப் பின்னர் எமக்கு உதவிய மருத்துவர் நான் கீழே இறங்கி கப்பலின் அறைக்கு செல்வதற்கு உதவினார். நான் சற்று ஓய்வெடுத்தேன். அன்றைய இரவு அவர் வழமையைவிடவும் நன்றாக உறங்குவார் என்று எண்ணினேன்.

காலையில் அவரது "இருமல்" சத்தத்தைக் கேட்டேன். நான் நேரத்துடனேயே எழுந்து விட்டேன். அவரைப் பார்க்கையில் நன்றாக உறங்குவதாக உணர்ந்தேன். அவரது நித்திரையைத் தொந்தரவு செய்யக் கூடாது என்று நினைத்தேன். சிறிது நேரத்தில் அவரது முனகல் சத்தத்தைக் கேட்டேன். நான் உடனே அவருடன் உரையாட முற்பட்டேன். அவரிடமிருந்து எந்த ஒரு பதிலும் வரவில்லை. அவர் ஏற்கனவே மீட்பரின் திருக்கரங்களைச் சென்றடைந்து விட்டார்."

(தொடரும்)

நன்றி : எழுநா (https://ezhunaonline.com)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓ தாய்வானே!

ஆர்.பிரகாஷ்

பொதுவாக வல்லாதிக்க மோதலுக்குள் அகப்படும் எந்த நாடும் அழியாதிருந்ததாகச் சரித்திரம் இல்லை. அதிலும் அமெரிக்கா தலையிட்டுவிட்டால் அந்த நாட்டின் எதிர்காலம் அதோ கதிதான். சிரியா, ஈராக், வடகொரியா, ஆப்கானிஸ்தான் என்று இதற்கு ஏகப்பட்ட நிகழ்கால உதாரணங்களை நாம் குறிப்பிட முடியும். அந்த வரிசையில் தற்போது இணைந்திருக்கின்றது தாய்வான்.

**தாய்வான் தனிநாடா?**

தாய்வான் தன்னை சுதந்திரத் தனிநாடு என்று அறிவித்திருக்கின்றது. ஆனால், சீனாவோ தாய்வான் தனது ஆளுகைக்கு உட்பட்ட ஒரு பகுதி என்று விடாப்பிடியாக நிற்கின்றது.

எவ்வாறு ஹொங்கொங் சீனாவின் ஆட்சிக்குரியதொன்றாக உள்ளதோ அவ்வாறுதான் தாய்வான். தாய்வானில் ஒரு அங்குலத்தையேனும் விட்டுக்கொடுப்பதில்லை என்பதுதான் சீனாவின் நிலைப்பாடு. ஆனால், தாய்வானோ சீனத்தின் தலையீட்டை விரும்பவில்லை.'

தாய்வான் சுதந்திரத் தனிநாடு. சீனத்தின் செங்கொடிக்கு தாய்வான் ஒருபோதும் கட்டுப்படாது' என்பதுதான் தாய்வான் மக்களின் கருத்தும் அபிலாஷையும். தாய்வானுக்கு அமெரிக்கா துணைநிற்கின்றது.

தாய்வானை அதன் விருப்பத்துக்கு மாறாக சீனா தனதாக்க நினைத்தால் அமெரிக்கா இராணுவ ரீதியாகத் தலையிடும் என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளது வெள்ளை மாளிகை.

**பெலோசியின் வருகை**

தாய்வானை தனிநாடு என்று மெய்ப்பிக்க வேண்டுமாயின், சீனத்தின் ஆதிக்கம் இல்லாத நகர்வை அமெரிக்கா முன்னெடுக்க வேண்டும். இதற்காக என்ன செய்வது என்று திட்டமிட்டுக் கொண்டிருந்த அமெரிக்கா, சபாநாயகர் நான்சி பெலோசியை தாய்வானுக்கு அனுப்பியுள்ளது. தாய்வான் தனது எல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கும் சீனாவின் அனுமதியைப் பெறாது அமெரிக்காவின் சபாநாயகரான பெலோசி தாய்வானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டால் நிலைமை எப்படியிருக்கும்? பெலோசி தாய்வானில் நிற்கத்தக்கதாக தாய்வானின் எல்லையில் மிக நெருக்கமாக தனது போர் விமானங்களை அனுப்பியுள்ளது சீனா. அத்துடன், தாய்வானில் போர்ப்பயிற்சியையும் சீனா மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளது.

சீனா அவ்வாறு போர்ப்பயிற்சி மேற்கொண்டால் அது அமெரிக்காவை நிச்சயம் கோபப்படுத்தவே செய்யும். அது நிலைமையை இன்னும் பாரதூரமாக்கும். ஆகமொத்தத்தில் இராணுவ ரீதியாக ஆகப்பெரும் வல்லரசாக உள்ள அமெரிக்காவினதும், பொருளாதாரத்தில் அமெரிக்காவையே பின்தள்ளி வளர்ச்சிபெற்றுள்ள சீனாவினதும் போர்க்களமாக தாய்வான் மாறியுள்ளது. தாய்வனின் எதிர்காலம் இனி கடவுள் விட்ட வழிதான்.









# இந்தியாவை அச்சமூட்டும் குரங்கு அம்மை

உலகளாவிய ரீதியில் அச்சுறுத்தி வரும் குரங்கு அம்மைத் தொற்று இப்போது இந்தியாவிலும் தலைகாட்ட ஆரம்பித்திருக்கின்றது. இதுவரை 9 பேர் இந்தியாவில் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருப்பதும், ஒருவர் உயிரிழந்திருப்பதும் இலங்கைக்கும் ஒரு அபாயச் சங்கு என்பதை மறுக்க முடியாது.

உலகம் முழுவதும் 75க்கும் மேற்பட்ட நாடுகளில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு குரங்கு அம்மை உறுதி செய்யப்பட்டுள்ளது. பொதுவாக காய்ச்சல் தொடங்கியதிலிருந்து ஒன்று முதல் மூன்று நாள்களுக்குள் கொப்பளங்கள் போன்ற காயங்கள் தோன்றி, இரண்டு முதல் நான்கு வாரங்கள் வரை நீடிக்கும். இவை



சரியாகும் வரை அரிப்பு மற்றும் வலி இருக்கும் என கூறப்பட்டுள்ளது. இதுவே குரங்கு அம்மைக்கான அறிகுறி. உலக சுகாதார அமைப்பு குரங்கு அம்மையை சர்வதேச பொதுச் சுகாதார அவசரநிலையாக அறிவித்துள்ளது.

இந்தியாவில் கேரளா, டெல்லி ஆகிய இடங்களில் இப்போது தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். தமிழகத்தில் இதுவரை தொற்றுடன் எவரும் இனங்காணப்படவில்லை என்றபோதும், தொற்று அபாயம் இருப்பது சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. குரங்கு அம்மையால் பாதிக்கப்பட்ட நபருடன் அடிக்கடி அல்லது நீண்ட தொடர்பில் இருந்தால் யாருக்கும் வேண்டுமானாலும் இந்நோய் தொற்றக் கூடும். நோயாளியின் சுவாசத் துளிகள், கொப்பளங்களில் இருந்து வடியும் நீர் என நேரடியாகவோ அல்லது அவர்களது துணிகள் மூலம் மறைமுகமாகவோ இந்த நோய் பரவும் என்பதால் பரவும் வேகம் அதிகமாக இருக்கும் என்று சுகாதாரத் துறையினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்தியாவில் குரங்கு அம்மையால் முதல் உயிரிழப்பு பதிவாகியிருப்பது பெரும் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. ஐக்கிய அரபு இராச்சியத்தில் பணிபுரிந்து வந்த கேரள மாநிலம் திரிச்சூர் மாவட்டத்தில் உள்ள புனியூர் என்ற இடத்தைச் சேர்ந்த 22 வயது இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவர் கடந்த 22ஆம் திகதி ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து இந்தியா திரும்பியுள்ளார். வீடு திரும்பியதும், அருகில் இருந்த கால்பந்து மைதானத்தில் கால்பந்து விளையாடும் அளவுக்கு ஆரோக்கியமாக அவர் இருந்தார். திடீரென அவருக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளது. லேசான காய்ச்சல் அறிகுறிகளுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சைகள் வழங்கப்பட்டபோதும், முன்னேற்றம் இல்லை. அவரது இரத்த மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது, குரங்கு அம்மைத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இப்போது இந்தியா முழுவதும் குரங்கு அம்மைத் தொற்றைத் தடுப்பதற்கான சுகாதார வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஏற்கனவே கொரோனாத் தொற்றால் நொடிந்து போயிருக்கும் நிலையில் தலைதூக்கியுள்ள குரங்கு அம்மைத் தொற்று என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்ற பெரும் அச்சம் அனைவரது மனங்களிலும் எழுந்திருக்கின்றது. குரங்கு அம்மை பரவாமல் தடுக்க, பாதிக்கப்பட்ட நபரை மற்றவர்களிடமிருந்து முதலில் தனிமைப்படுத்த வேண்டும். சுத்திகரிப்பான் அல்லது சோப்புகள் மூலம் கைகளை கழுவுவதுடன், நோயாளிக்கு அருகில் செல்லும்போது முகக்கவசமும் கையுறையும் அணிவது அவசியம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில், தொற்று தீவிரமடைந்தால் கொரோனா நிலைமை போன்ற பேரிடர் ஒன்றை எதிர்கொள்ள வேண்டி வருமா என்ற கேள்வியும் எழுந்திருந்திருக்கின்றது.

அதேநேரம், இதுவரை இந்த குரங்கு அம்மைத் தொற்று பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தவில்லை. இந்தியா போன்ற நாடுகளில் இந்த தொற்று குறித்து [illegible] அளவில் முக்கியத்துவம் கொடுக்கத்தேவையில்லை என்று இந்திய மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால் என்ன நடக்கப் போகிறதென்பது அந்தத் தொற்று நோயை உண்டாக்கும் வைரஸுக்கு மட்டுமே வெளிச்சம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானத்தி

கருணை ரவி

46



அந்தப் பெண் நிலத்தில் கிடந்து கத்தினாள். வீதியில் போனவர்கள் பெண்ணையும் கன்ரரையும் பார்த்தார்கள். அவளின் கத்தலைக் கேட்ட இளைஞர்கள் அவளிடம் ஓடிப்போனார்கள். அவர்களிடம் தனது பிள்ளையை கன்ரரில் பிடித்துக் கொண்டு போவதாக ஆறேழுதடவைகள் சொல்லிக் கத்தினாள். வந்த இளைஞர்கள் பயத்தில் அவளை விட்டு நகர்ந்தார்கள்.

அவள் கத்திய கதைகள் ஊரெல்லாம் பரவியது. வீடுகளை விட்டு வெளிக்கிடப்பயந்து தெருக்களில் இளைஞர்கள் குறைந்தார்கள். பூங்கொடி நிருபனை எப்படிக் காப்பாற்றுவதெனக் கலங்கினாள். அவனை வெளியில் போக அவள் விடவில்லை. அவள் நக்கீரனை நினைத்துக் கவலையடைந்தாள். நக்கீரனையும் அவர்கள் பிடித்ததாக நினைத்தாள். மாத்தளனால் நடந்து போகிற சனங்களுக்கு சன்னங்கள் பட்டன. சிலர் தெருக்களில் செத்தும் கிடந்தார்கள். பயந்துகொண்டே நோயாளர்கள் வைத்தியசாலைக்கு வீதியால் போய்க்கொண்டிருந்தார்கள். அவள் வீதிக்குப் போய் செத்துக்கிடப்பவர்களை பார்க்க விரும்பினாள். நக்கீரனுக்கு உறவுகள் எவருமில்லை. தானே உறவு எனக் கலங்கினாள். தோடு விற்று வாங்கிய சாமான்களும் முடிந்து விட்டன. இனி அவளிடம் பணம் இல்லை. சாமான் கொண்டு வாற கப்பலும் வராமல் விட்டது.

கப்பலுக்கு துப்பாக்கிச் சன்னங்கள் படுவதாக பி.பி.ஸி சொன்னது. ஐந்து நாட்களால் இயக்கம் கொண்டு போன பத்துப்பேரும் வந்தார்கள். எல்லோரும் தேங்காய்கள் கொண்டு வந்தார்கள். அவர்களை தேங்காய்களுடன் கண்ட சனங்கள் மொய்த்தனர். நக்கீரன் இருபது தேங்காய்களையும் விற்று நாப்பதாயிரம் ரூபா பெற்றான். வாங்கியவர்கள் எரிந்து சென்றார்கள். சிலபெண்கள் திட்டினார்கள்

"ஆக்களில்லாத இடங்களிலை போய் இயக்கம் தேங்காயளைப் புடுங்கிக்கொண்டு வந்து தவிச்சமுயலடிக்கிறாங்கள்"

இயக்கம்தான் தேங்காய் விற்பதாக சிலர் நினைத்தார்கள். நக்கீரன் இயக்கம் கொடுத்த பத்தாயிரத்தோடு தேங்காய் விற்ற நாற்பதாயிரத்தோடும் வடலிக்குப்போனான். பூங்கொடியைக் காணவில்லை. வடலிகள்ஷெல் விழுந்து கருகியிருந்தன. இரவு வடலிக்குள் ஷெல் விழுந்ததாகவும் சனங்கள் இரவிரவாக ஓடிவிட்டதாகவும் ஓடாமல் இருந்த ஒரு முதியவர் சொன்னார்.

நக்கீரனுக்கு எங்கே போவதென்று தெரியவில்லை. மாத்தளன் ஆஸ்பத்திரியடிக்குப் போய் கனகத்தை தேடி ஒவ்வொரு தறப்பாளையும் பார்த்தான். கனகமில்லை. கனகம் சொன்ன நெடுவல் ஐயாவைத் தேடினான். யாரைக்கேட்பது? ரகசியமாக கனகம் சொன்ன விடயத்தை அவன் பகிரங்கமாக கேட்கத் தயங்கினான். அப்படியே ஆஸ்பத்திரிக்குப் பின்னால் நின்ற ஒற்றைத் தென்னைக்குப் போனான். தென்னைக்குக் கீழே ஒரு வயோதிபர் கையில் தூண்டில் வைத்துக் கொண்டு இருந்தார். அவனும் அந்த தென்னை நிழலுக்குப்போக அந்த வயோதிபர் அவனைப் பார்த்தார். அவரைப்பார்த்து நக்கீரன் சிரித்தான். முதியவர் சிரிக்காமல் பார்த்தார்.

"நீங்கள் கரடிப்போக்குச் சந்தியிலை தேத்தண்ணிக்கடை வைச்சிருந்தனீங்களல்லே..."

தலையாட்டினார். கையில் வைத்திருந்த தூண்டிலை நிலத்தில் வைத்தார்.

"நான் உங்கடை கடேலை ரீ குடிக்கிறனான்"

"ஆயிரம் பேர் கடைக்கு வருங்கள். எனக்கு ஆயிரம் பேரையும் ஞாபகத்திலை வைச்சிருக்க முடியுமே? என்ரை பேர் கனகு"

என்றார். நக்கீரனுக்கு அவர்தான் கஞ்சாக்கனகு என்பது அவரை முதல்தடவையில் பார்த்தபோதே தெரிந்தது.

நக்கீரன் அவருக்குப் பக்கத்தில் இருந்தான். கடற்காற்று இதமாய் இருந்தது. கரையோரங்களில் இருந்த சனங்கள் எவருமில்லை. ஆங்காங்கு மணலில் தோண்டப்பட்ட கிணறுகளும் கைவிடப்பட்ட கிழிந்த தறப்பாள்களும் காற்றிலாடின. நக்கீரன் இராணுவத்திடம் கூட்டிக்கொண்டுபோகும் ஐயா யார் என்பதைக் கேட்கத் தயங்கிக் கொண்டு, நிலத்தை கீறிக்கொண்டிருந்தான்.

"ஏனிஞ்சை வந்தனி?"

அந்தக்கேள்வி அவனை திகைக்க வைத்தது. இயக்கம் அறிந்து அவரை வேவுக்கு வைத்திருக்குதோ எனக் கழிந்தது அந்த வினா.

"சும்மா வந்தனான்" என்றான்.

"நீ இயக்கமே?"

"இல்லை" என்றான்.

அவர் வடிவாக அவனைப் பார்த்தார். அந்தப்பார்வை அவனில் அச்சத்தை நட்டது.

"சொந்தக்காரர் இஞ்சை இருந்தவை. அவையளைப் பாக்கத் தான் வந்தனான். ஒருதரையும் காணேலை. வெறுந்தறப்பாளாக் கிடக்கு"

"இப்ப வெறுந்தறப்பாளாத்தான் இருக்கும். இரவு தறப்பாளுக்குள்ளை வருவினம். வாறவை இரவிரவா ஆமியிட்டை போவினம். சனங்களும் தப்பத்தானே வேணும்" சொல்லிவிட்டு கனகு, கடைக்கண்ணால் அவனைப்பார்த்தார். அவன் தானும் போகவேணும் என சொல்ல நினைத்தான். ஆனால் சொல்லவில்லை.

"எங்கை இருக்கிறியள்? வீட்டுக்காரர் எங்கை?"

கனகு கேட்டார்.

"வீட்டுக்காரரை நான் பிரிஞ்சிட்டன், அவை ஆமியிட்ட போட்டினம். நான்தான் இஞ்ச தனிய"

"நீயும் போப்போறியே?

"ஓமய்யா. என்னெண்டு போறதெண்டு தெரியேலை..."

"ஐயாயிரம் எண்டால் போகலாம். ஒராள் இருக்கு. இரவுக்கு இந்த இடத்துக்கு காசோடை வா. நான் ஆளைக்காட்டுறன்"

சொல்லிவிட்டு கனகு போனார். அவனுக்கு சந்தோசமாகவும் சந்தேகமாகவும் இருந்தது. அவர் இரவு வரச்சொல்லிவிட்டு சிக்கலுக்குள் தள்ளுவாரா? என குழம்பினான். ஆனால், அவரின் பேச்சில் அப்படியான சந்தேகங்கள் எவையும் அறிகுறிகளாகக் காணவில்லை. அவரை நம்பினான். பொழுது விழ வெறுந்தறப்பாள்களுக்குள் சனங்கள் வந்தபடி இருந்தார்கள்... நக்கீரன் கனகுவைத் தேடினான். எல்லாத்தறப்பாள்களும் நிறைந்து விட்டன. அவன் வெறும் தறப்பாளைத் தேடி களைத்து விட்டான். உடல் சோம்பலடிக்க அந்த ஒற்றைத் தென்னமரத்தடிக்குப் போனான். பத்துமணி வரைக்கும் தென்னைக்கு கீழே இருந்தான். கடலில் இருந்தும் புதுக்குடியிருப்பில் இருந்தும் வரும் எறிகணைகள் சனங்களுக்குள் வந்து வெடித்தபடி இருந்தன. நிலவில்லை. ஆனால் எறிகணைகளின் வெடிப்பொலிகள் வெளிச்சத்தை கொடுத்துக் கொண்டிருந்தன.

"தம்பி... நான் கனகு"

அவரின் குரல் அவனை திடுக்குற்று எழும்ப வைத்தது. கண்களைக் கசக்கிக்கொண்டு சிரித்தான். அவர் வருவாரா? என்ற தவிப்பு தணிந்தது. அவன் தன்னை இராணுவத்திடம் அழைத்துச் செல்லும் ஆளும் அவருடன் வந்ததா? எனப் பார்த்தான். அவர் மட்டும் தனிய நின்றார்.

"எங்கைய்யா மற்றாள்?"

அவன் மற்றாள் என்றதும். தான் அழைத்து வருவேன் என்று சொன்ன கற்பனை மனிதரைத்தான் அவன் கேட்பதாக நினைத்தவர் "நான்தான் அந்தாள்" என்றார். அவர் தான் என்றதும் அவனுக்கு சந்தோசமாக இருந்தது. தெரிந்தவர். தேநீர் குடித்து பழக்கமானவர். நம்பிக்கை அவனில் பிரகாசித்தது.

"ஐயாயிரம் தா. சரியா ரண்டுமணிக்கு போகோணும்"

அவர் ஐயாயிரம் என்றதும் குழம்பியவன் இரண்டு மணி என்றதும் தெளிந்தான். கனகம் அப்படித்தான் சொன்னாள். இரண்டு மணி என்றும். கனகு அதை சரியாகச் சொல்ல அவனிடம் புதிர்கள் எதுவுமில்லை. ஐயாயிரத்தைக் கொடுத்தான். காசை வாங்கியவர் அவனை அழைத்துக்கொண்டு போய் ஒரு தறப்பாள் வீட்டுக்குள் விட்டார். அதுக்குள் இரண்டு பெண்களும் இரண்டு சிறுவர்களும் இருந்தார்கள்.

இரண்டு பெண்களில் ஒருத்திக்கு ஐம்பது வயது இருக்கும். மற்றவளுக்கு இருபது வயதிருக்கும். சிறுவர்கள் ஐந்தாம் ஆறாம் வகுப்பு படிப்பவர்களாக இருக்கும். அவர்கள் ஐம்பது வயதுக்காரியின் மடியில் படுத்திருந்தார்கள். இரு பெண்களும் நித்திரை கொள்ளவில்லை. இரண்டுமணிக்காகக் காத்திருந்தார்கள்.

இருபது வயதுக்காரி அவனையே பார்த்தாள். மெழுகுதிரி வெளிச்சத்தில் அவள் பேரழகி மாதிரி இருந்தாள். வயது குறைந்த இளைஞர்கள் யுவதிகள் இராணுவத்திடம் போக பயப்பிடுவார்கள். போகும்போது யாராவது பெண்களுடன் சேர்ந்து போவார்கள். கேட்டால் மனைவி, அல்லது கணவன் என்று சொல்வார்கள். இராணுவத்தைக் கண்டதும் போகும் பெண்கள், ஆண்கள் நெருக்கமாக கூச்சமற்று உரசிக் கொண்டு போவார்கள்.

இந்த தந்திரத்தை கனகு ஒவ்வொரு தறப்பாளுக்கும் சொல்லிக் கொண்டு போனான். அவளுக்கும் சொல்லியிருக்கிறார். நக்கீரனுக்கும் தென்னைக்கு கீழேயே சொன்னார்.

அவனுக்கு அந்த அழகியோடு வாழவேணும் போலிருந்தது. அவளின் அழகில் அவன் அப்படியொரு முடிவை எடுத்தான். அவள் பார்த்து சிரித்தாள். அவனும் சிரித்தான். அவனுக்கு அவளோடு கதைக்கவேணும் போலிருந்தது. அவளுடன் எப்படி கதைப்பதென்று தெரியவில்லை. ஒரு பெண்ணுடன் ரகசியமாக பேச அவன் கற்றதில்லை. அவள் கண்களால் கற்பித்துக்கொண்டிருந்தாள்.

"ஊ..... ஊ..."

இரு தடவைகள் நரி ஊளையிடும் சத்தங்கள் கேட்டன. அது நரியைப் போல யாரோ ஒருவன் ஊளையிட்டான். நரியா? மனிதனா? என்ற சந்தேகத்தை யாருக்கும் அது கொடுக்கவில்லை. சத்தத்தைக் கேட்டதும் தறப்பாளுக்குள்ளிருந்தவர்கள் வெளியே வந்தார்கள். கனகு சொன்னான்' நரி ஊளையிடும் போது மாத்தளன் நீரேரிக்குச் செல்ல வேண்டும்' என்று. எந்தச்சத்தமும் இல்லாது வெளிக்கிட்டு றோட்டைக் கடந்து வெளிகளைக் கடந்து நீரேரிக்குள் கனகு சொன்னவர்கள் அத்தனை பேரும் இறங்கினார்கள். நீரில் இறங்கும்போது பேரழகிக் கருகில் நக்கீரன் போனான். அவன் கடைக்கண்ணால் பார்த்து இடது தோளால் அவளுக்கு இடித்தான். அவளின் கை அவனின் கையைப் பிடித்தது.

"பேரென்ன...?"

நக்கீரன் கேட்டான்.

"கலையரசி"

சொல்லி விட்டுச் சிரித்தாள்.

"உங்கடை பேர்...?"

"நக்கீரன்"

காற்றுக்கு அவளின் கூந்தல் அவனின் முகத்தில் அடித்தது.

"டட் டட் டட் டட்டட்ட..."

துப்பாக்கிச் சன்னங்கள் நீரேரியில் பாய்ந்தன. மாத்தளனில் இருந்து ஒற்றைத்துப்பாக்கி நீரேரியில் போனவர்கள் மேல் துளைகள் போட்டது. ஏரி சிவப்பாகியது. அழுகுரலை ஏரி உவிந்தது. கலையரசி ஏரியில் விழுந்தாள். நக்கீரன் திசை தெரியாது ஓடினான். அவர்களை நோக்கி சுட்டுக்கொண்டு வந்த காவல்துறை, துப்பாக்கியை நீரேரியில் எறிந்தான். சீருடையையும் கழட்டி ஏரியில் எறிந்துவிட்டு அரைக்காற் சட்டையுடன் இரணைப்பாலைப் பக்கம் இடுப்பளவு தண்ணிக்குள் ஓடினான்.

**சஞ்சீவி**
**தொடர் கதை**

முதல் வாரம் பிரசுரமான மானத்தி தொடரின் பகுதி கடந்த வாரமும் தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47

◆ ◆ ◆ ◆

காவல்துறை சனங்களைச் சுட்டகதை ஊரை மூடியது. இயக்கத்தைக் கண்டு சனங்கள் பயந்தார்கள். இயக்கம் வீதிகளில் ஆயுதங்களுடன் போக இளைஞர்கள் ஒளித்தார்கள்.

"விழுவார் சனங்களை ஏன் சுட்டுக்கருக்கிறாங்கள் "

" இயக்கம் அப்பிடிச் செய்யாது"

"உங்கை கொஞ்சமிருந்து இல்லாத பொல்லாததுகளை வேணுமெண்டு கதைக்குதுகள். இதிலை ஆற்றை கதையளை நம்புறது?"

கதைகளைக் கேட்க பூங்கொடியின் தலைக்குள் கட்டை அறையப்பட்ட மாதிரியும் சிந்தனையில் ரணம் வடிவதாகவும் இருந்தது.

"பிணங்கள் நீரிலை மிதக்குதாம்..... பிணங்களை எடுக்க சொந்தக்காரர் போக இரணைப்பாலையிலை இருந்து ஆமியள் சுடுறாங்களாம்"

முன் தறப்பாள்காரர் கதைப்பதாக நிருபன் சொன்னான். பூங்கொடி நிருபனை வெளியில் போகத் தடுத்தாள். மாத்தளனிலிருந்து பொக்கணைப் பள்ளிக்கூடம் வரைக்கும் இயக்கத்தின் வாகனங்கள் நின்றன. சில வாகனங்கள் இலை குழைகளால் மூடியிருந்தன. மூடிய வாகனங்களில் கூடாரங்கள் இல்லை . அஞ்சிஞ்சி மோட்டார் செலுத்தியை கன்ரரில் பூட்டியிருந்தார்கள். ஐந்து நிமிடங்களுக்கு ஒருதடவை மாத்தளன்வெளி பனங்கூடல்களில் இருந்து ஷெல்களை ஏவிவிட்டு கன்ரர் வரும். அவர்கள் நின்று ஷெல்கள் ஏவிய இடங்களுக்கு ஆமிக்காரர் ஷெல்களைப் பொழிவார்கள்.

துப்பாக்கிச் சத்தங்கள் கேளாத பொழுதொன்றை இழந்து பலநாட்களாகி விட்டது. துப்பாக்கிகளும் இரவுபகல் என்றில்லாது விழிப்பாகவே இயங்கிக்கொண்டிருந்தன. காலை ஆறுமணியிருக்கும் பொக்கணைப் பக்கமாகத் துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டன. இடைக்கிடை ஷெல்களும் சனங்களுக்குள் விழுந்தன. அழுகுரல்கள் காதுகளை அடைத்தன. இராணுவம் பொக்கணைப் பள்ளிக்கூடத்துக்கு வந்துவிட்டது என்று சொன்னார்கள். பள்ளிக்கூடத்துக்கு முன்னால் போராளிகளின் 'மெடிக்ஸ்' இருந்தது. காயப்பட்டு நடக்க முடியாத பத்துப் போராளிகள் இருந்தார்கள். அவர்களை நினைத்துக் கவலையடைந்த பூங்கொடி சத்தங்கள் ஓய்ந்ததும் நிருபனைக் கூட்டிக்கொண்டு கடற்கரைப் பக்கமாக நடந்தாள். வீடுகள் புகைந்து கொண்டிருந்தன. ஷெல்கள் விழுந்து கடற்கரையில் கிடங்குகள் கிடந்தன. கடற்கரையில் சில சனங்கள் ஆங்காங்கு நடந்து போனார்கள். அவர்களும் பயத்தில் அவளை மாதிரி வெளிக்கிட்டவர்களாக இருக்கலாம் என நினைத்தாள். கடற்கரையால் நடந்து போவது இராணுவத்துக்கு தெரியும். ஆனால், சுடவில்லை . மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கடற்கரையில் பிணங்கள் சிதறிக்கிடந்தன. துப்பாக்கி வேட்டுக்களுக்கு சிதறியோடியவர்களாக இருக்கலாம். அவள் பொக்க ணைப்பக்கம் திரும்பிப் பார்த்துப்பார்த்து நடந்தாள். வானம் இறங்கி புகையுடன் நேசங்கொள்வது அவளுக்கு ஏக்கமா இருந்தது. அவளுக்கு முன்னால் ஈரமணலில் ஒரு பிணம் கிடந்தது. அதை விலத்தும்போது அவளின் மனம் நொருங்கியது. சுருள்தலைக்கார இளைஞன் ஒருவன் கிடந்தான். நெஞ்சு இரத்தத்தால் காய்ந்திருந்தது. இலையான்கள் காய்ந்த குருதிகளை சப்பிக்கொண்டிருந்தன. இயக்கம் பங்கர் வெட்ட இரணைப் பாலைக்கு கேட்டபோது,

"செத்தால் நாட்டுப்பற்றாளர் எண்டு சொல்லுவாங்கள்"

என்று சொன்ன அதே சுருள்தலைக்காரன். அவனை விலத்தி நடக்கும்போது அருகில் இருந்த கிடங்கொன்றில் நான்குபோர் இருந்தார்கள். அவர்களை இயக்கம் என நினைத்தாள். அவர்களிடம் துப்பாக்கிகள் இல்லை. சீருடைகள் இல்லை. சாறங்களோடு இருந்தார்கள். சேட்டில் இரத்தக்கறைகள் இருந்தன. ஒருத்தன் அவளைக் கண்டதும் சாறத்தால் முகத்தை மறைத்தான். அவர்கள் அனைவரினது கைகளிலும் காய்ந்த இரத்தங்களில் இலையான்கள் மொய்த்தன. அவர்களின் கைகளில் நகைகள் இருந்தன.

இராணுவம் ஷெல்களைக் கொட்டி கிராமங்களைக் கலைப்பார்கள். அவர்கள் கலைத்த இடங்களில் பிணங்கள் அநாதைகளாக கிடக்கும். நாய்களைத் தவிர அங்கு மனிதர்கள் இருக்கமாட்டார்கள். அப்படி அவர்கள் ஷெல்களைக் கொட்டி ஒருமணி நேரத்துக்குள் அந்த கிராமங்களுக்கு வந்து விடுவார்கள். அந்த அமைதியான இடைவெளிகளில் பிணங்களின் காதுகளில் கழுத்துகளில் இருக்கும் நகைகளை எடுக்க ,சிலர் துணிச்சலுடன் திரிவார்கள்.

அந்த நகை புடுங்கிகளை பார்த்துக்கொண்டு வலைஞர்மடத்துக்கு பூங்கொடி சென்றாள்.

வலைஞர்மட பாடசாலையில் சனங்கள் வழிந்தன. களைத்தவள் மரநிழல் ஒன்றில் இருந்தாள். களைப்பாறிவிட்டு நடக்க தேவாலயம் வந்தது. தேவாலயத்திலும் சனங்கள். தேவாலயத்தைப் பார்த்ததும் பயம் அவளிடம் கலைந்தது. தேவாலயத்தை தாக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கைகள் தேவாலய முற்றத்தை நிறைத்திருந்தன. நிருபன், வேறு இடம் செல்ல அவளை விடவில்லை . ஆலயத்துக்குப் பக்கத்தில் பெரிய ஆலமரங்கள் நின்றன. அந்த மரத்தடிக்கு போனாள்.

ஆலமரத்தடி ஒரு குட்டி ரவுணைப்போல இருந்தது. வானொலிப் பெட்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், தண்ணீர் பம்பிகள், மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகள் என எல்லாம் வரிசையாக ஒரு விற்பனைக்கூடமாக அழகாக அடுக்கப்பட்டிருந்தன. விலைகள் ஒவ்வொன்றிலும் கோர்த்திருந்தன. துவிச்சக்கரவண்டி ஐநூறு ரூபா, ரேடியோ ஐநூறு ரூபா, தொலைக்காட்சிப் பெட்டி ஆயிரம் ரூபா . மோட்டார் சைக்கிள் மூவாயிரம் ரூபா , பற்றி ஒரு சோடி இரண்டாயிரம் ரூபா.

இவ்விலைகள் அதிசயிக்க வைத்தாலும் எவரும் வாங்குவதாக இல்லை. அப்படித் தேவையானவர்கள் சூனியப்பிரதேசங்களில் போய் பொறுக்கிக் கொண்டு வருவார்கள். நிருபன் வானொலிப் பெட்டியை தூக்கிப் பார்த்தான். அவனிடம் சொனி றேடியோ இருந்தது. கசற் போட்டு பாட்டு கேட்கக்கூடிய ரேப் ரேடியோவை ஆசையில் தொட்டுப் பார்த்தான்.

"தம்பி முந்நூறு ரூபா தந்திட்டு எடு"

எழுதிவைத்த விலையில் இருந்து குறைத்துக் கூறினான். அவன் வாங்கவில்லை.

"அப்ப என்ன மசிருக்கு தூக்கிப்பாத்தனி?"

சினந்தான். அவன் பொருள் விற்பனையை நிரந்தரமாகக் கொண்டவனல்ல என்பதை அவனின் வாயிலிருந்து வந்த சொற்கள் சொல்லியது. ஆலமர நிழல் வியர்வையை ஒளித்துக் கொண்டிருந்தது. பூங்கொடி ஆலமர நிழலைவிட வேறெங்கும் போகவில்லை. மணல் வெளிகளில் போய் இருக்க அவளிடம் தறப்பாளில்லை. சீலை ஒன்றை எடுத்து சுற்றிவர மறைத்துக் கட்டிக்கொண்டு அதுக்குள் இருந்தாள்.

நிருபன் பசிக்குதென்றான். சமைப்பதற்குப் பாத்திரங்கள் இல்லை. அரிசி இல்லை. கஞ்சிக்கொட்டிலில் சனங்கள் வரிசையில் நின்றனர். அவளும் போய் கஞ்சி வாங்கி வந்தாள். இயக்கம் எல்லா இடங்களிலும் கஞ்சிக் கொட்டில்களை அமைத்திருந்தனர். எவரையும் பட்டினியில் கிடக்கவிடவில்லை . குழந்தைகளுக்கு காய்ச்சிய பால் கொடுத்தார்கள். பாலுக்கு மட்டும் குழந்தைகளின் பதிவுக்காட் கொண்டு போகவேணும். அல்லது குழந்தைகளுடன் போக வேணும்.

(வருவாள்)

# சாது மிரண்டால்..!



● கோகுலராகவன்




தமிழில் ஒரு திரைப்படம் "சாது மிரண்டால்" 1966 இல் வெளிவந்தது. நகைச்சுவை நடிகர் ரி.ஆர். இராமச்சந்திரன் தான் கதாநாயகன். சிவாஜி இந்தப் படத்தின் கதை சரியில்லை என மறுத்தபோது நகைச்சுவை நடிகர் ரி.ஆர்.இராமச்சந்திரன் நாயகனாக்கப்பட்டார்.

இங்கு நாயகன் எனும்போது நாயகியோடு மரத்தின் பின் ஓடி பாடல் பாடும் நாயகன் அல்ல. கதைக்கான பிரதான பாத்திரம்.

இரண்டு வளர்ந்த குழந்தைகளின் தந்தைப் பாத்திரம் தான் நாயகன்.

ரி.ஆர். இராமச்சந்திரனை எவ்வாறு நான் உங்களுக்கு அடையாளம் காட்டுவது? "சபாபதி"(1941), ஏவி.எம்.மின் "வாழ்க்கை"(1949) "அடுத்த வீட்டுப்பெண்"(1960) ஆகிய படங்களின் நாயகன். "கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரி"(1954) படத்தில் இவர்தான் நாயகன். சிவாஜி இரண்டாவது நாயகன்.

ரி.ஆர்.ஆர் .50 களில் உச்சத்தில் இருந்தவர்.ஏ.வி.எம் வாய்ப்பு வழங்கிய நடிகர். ரி.ஆர்.இராமச்சந்திரன் தமிழகத்தின் எட்டி கன்ரர் (Eddie cantor) என அழைக்கப்பட்டார்.எட்டி கன்ரர் ஹொலிவூட் நடிகர். ஊமைப்படகாலத்தில் இருந்து பிரபல நகைச்சுவை நடிகர். ஒஸ்கார் விருது பெற்றவர். பாடகர்.

ரி.ஆர்.ஆரின் கண்முழியும் , எட்டி கன்ரரின் கண்முழியும் ஒரே மாதிரியான தன்மை கொண்டவை. நடிப்பிலும் ரி.ஆர்.ஆர் . எட்டி கன்ரரை பின்பற்றியிருக்க வாய்ப்பு இருந்திருக்கலாம். ரி ஆர். இராமச்சந்திரன் நாயகனுக்கான எடுப்பு எதுவும் இல்லாதவர். குண்டு விழிகள், குட்டையான தோற்றம்.

12



"ஙே" என்ற றபர்பாண்ட் குரல் .இழுத்து இழுத்து கதைப்பார். அவர் சினிமாவுக்குள் வந்ததே ஆச்சரியம். ஆனால் நடிப்பு உச்சம். தன் பாணியில் சோடை போகாமல் நடிப்பை நடிப்பாகத் தருவார்.

18 க்கும் மேற்பட்ட படங்களில் கதாநாயகனாக நடித்தவர்.எல்லாம் நகைச்சுவை கதாநாயகன் வேடம்.

நகைச்சுவை நாயகன் என்றாலும் இணையாக பிரபல்யமான நடிகைகளான பத்மினி, அஞ்சலிதேவி, சாவித்திரி வைஜந்திமாலா போன்றோர் தான் இருப்பார்கள். ரி.ஆர்.ஆர் . உடன் நடிக்க எந்த நடிகையும் மறுக்க மாட்டார்கள். இப்போதைய எந்த நகைச்சுவை நடிகருக்கும் கிடைக்காத வாய்ப்பு இது. இப்போது புதுமுக நடிகை அல்லது வாய்ப்புக் குறைந்த போன நடிகைகள்தான் நகைச்சுவை நடிகருக்கு இணையாக நடிக்க ஒத்துக்கொள்வர். ரி.ஆர்.ஆர். இறுக்கமான நாயகனாக நடித்தது, சாதுமிரண்டால் படத்தில் மாத்திரம்தான்.

வங்கிக்கொள்ளை ஒன்றை அடிப்படையாகக் கொண்ட கதை .

வங்கி முகாமையாளராக ரி.ஆர்.ஆர் . வருவார். மிகுந்த சாதுவான மனிதராக நடிப்பார். மனைவியை இழந்து, குழந்தைகளைப் பிரியமாக வளர்த்து வருவார். இடையில் அவரது தனிப்பட்ட நண்பனாக வரும் ஓ.ஏ.கே.தேவர் வங்கியைக் கொள்ளை அடிக்க முயல்வார்.

இதை எதிர்பாராத 'ரி.ஆர்.ஆர்.', வில்லனை கொள்ளையடிக்க வேண்டாம் என்று கெஞ்சு மட்டும் கெஞ்சி . முடியாமல் போக, ஒரு காரில் வைத்து அவரைக் கொன்று விடுவார். படம் முடியும் மட்டும் சடலம் காரில் இருப்பதுதான் படத்தின் கதை.

கார் யாருடையது தெரியுமா? நாகேஷ் உடையது. நாகேஷின் நடிப்பும் படத்தில் உச்சம்.

காரில் சடலத்தை கண்டதும், உலகம் முழுவதும் சுற்றி ஓடும் காட்சியில் அவரது உடல்மொழியே நகைச்சுவையை வெளிப்படுத்தும். நாகேஷின் தலைசிறந்த நடிப்பை இந்த படத்தில் காணலாம். ஒருகார், ஒரு சடலம், அதைக் காணும் பல்வேறு பயணிகளது பிரதிபலிப்பு. இதுவே படத்தின் மூலக்கதை. ரி.ஆர்.ஆர். எப்போதும் அப்பாவித்தனமாகக் நடிப்பதில் பேர் போன நடிகர். அது இந்தப் படத்துக்கு இயற்கையாகவே பொருந்தி இருந்தது. இயக்குநர் பீம்சிங்கின் தயாரிப்பில் வெளிவந்த படம். இயக்கம் .பீம்சிங்கின் உதவி இயக்குநர்களான திருமலை மகாலிங்கம். இயக்குநர் பீம்சிங் மகன் எடிட்டர் லெனின் ஒரு நேர்காணலில் இந்தப் படத்தை பற்றியும் சிவாஜி நடிக்க மறுத்தது பற்றியும் சொல்லி இருப்பார்.

இதன் பின்னரே படத்தை நான் பார்த்தேன். மிகவும் நேர்த்தியான இயக்கம்.


மெல்லிசை மன்னர் ரி.கே.இராமமூர்த்தி, எம்.எஸ். விஸ்வநாதனை பிரிந்து இசையமைத்த முதல் படம்.

"வருவாயே அருள்வாயே" எனும் பாலமுரளிகிருஷ்ணாவின் பாடல் அருமையாக இருக்கும். பெருவெற்றி பெற்ற படம். இப்போதும் பார்த்தால் ப[illegible] என்ற எண்ணம் வராது.பார்க்கலாம்.

(இன்னும் கதைப்பம்)

# சொற்சிலம்பம் போட்டி

95



அனுப்புபவர் பெயர்:........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

.................................................................

கையொப்பம்:.....................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. உலகின் கிறிஸ்தவர்களுக்கு பாப்பரசர் இந்த முறையானவர் 6. சோதிடத்தில் மேடை அல்லது வீடு 7. கூற்றுவன் 8. குறைதல் 10. இந்துக்களில் இவர்களும் ஒரு பிரிவினரே. 12. வாழ். 13. சாமர்த்தியசாலி 15. இசைப்பாடல் 16. தரவேண்டியது 18. தமது என்பதைக் குறிக்கும் 20. பதம்பண்ணி பாதுகாக்கப்பட்ட உடலங்களை இப்படி அழைப்பர். 21. அரசன்

## மேலிருந்து கீழ்

1. கொடி முந்திரிகை 2. சுவை உணர்வு 3. புவனம் 4. பெண் 5. ஒரு பழவகை 8. நீதியின் பாற்பட்ட முறைமை 9. பருத்த/ பெருத்த/ மொத்தமான 11. சொற்களின் இணைப்பால் உருவாவது 12. வெறுப்புடன் கூடிய வைராக்கியம் 14. பஞ்சபாண்டவருள் மூத்தவன் 15. இது இல்லையேல் சாதலா? 17. எருதின் ஏரி 19. நீரில் நீந்தி விளையாடுவது.

**சொற்சிலம்பம் போட்டி 94 க்கான விடைகள்**

**இடமிருந்து வலம்**

1.விவாதி 4. அஞ்சாமை 7. நாகரிகம் 9. சய 10. சரை 11. சமாதானம் 13. சக 14. ரம் 15. உற்சாகம் 18. பயறு 19. தரு 20. பாலைவனம் 22. சவுக்கு 23. திம்பு.

**மேலிருந்து கீழ்**

1. விநாசம் 2. வாகரை 3. திரி 4.அம்மா 5. சாசனம் 6. மையம் 8. கசகசா 12. தாரம் 13. சற்று 15. உயர்வு 16. கவலை 17. விரும்பு 19. தனம் 20. பாகு 21. வதி

**சொற்சிலம்பம் போட்டி இல.95**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

உதயன் சஞ்சீவி

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு

12.08.2022 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான [illegible] காலக்கிரமத்தில் அவரவர்களது [illegible]விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 94 இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
**பொ.சிவசுப்பிரமணியம்**
கரணவாய்,
கரவெட்டி.

**2 ஆம் பரிசு**
**என்.செல்வராணி,**
பண்டித்தாழ்வு, காரைநகர்

**3 ஆம் பரிசு**
**தி.சிவசீலன்,**
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

**4 ஆம் பரிசு**
**சி.பாலசுந்தரம்,**
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிப்பாய்

**5 ஆம் பரிசு**
**ஆ.ருக்மணிதேவி,**
ஆவரங்கால்,
புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org